பரபரப்பான விற்பனையில்




உங்கள் அருகாமை கடைகளில்...

Supplementary for New Cine Daily Special Tamil Novel Special Rs. 20/- 2009 R.Dis. No. 1980/2005

# அக்ஷயா ஸ்பெஷல்-1

ரூ.20/-

மாத நாவல்

அதிக பக்கங்கள்
கொண்ட
மகளிர்க்கான
புத்தம் புது நாவல்

# என் கண்ணே கண்ணம்மா!



## அகிலா கோவிந்த்

உங்கள் அபிமான எழுத்தாளர்

# அகிலா கோவிந்த்

எழுதும் நாவல்கள் ஒவ்வொரு மாதமும்







"அக்ஷயா", "நந்தினி" இதழ்களில்
வெளியாகின்றன.

படிக்கத் தவறாதீர்கள்!!

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு





# என் கண்ணே கண்ணம்மா!

அக்கா... அக்கா! என துள்ளிக் குதித்து ஓடி வந்து சிங்காரியின் கழுத்தைக் கட்டினாள் அன்புத் தங்கை மதுமதி.

இருபது வயது தங்கச்சிலையாய் முத்துப் பற்கள் பளிச்சிட சிரித்த தங்கையின் இயற்கையழகை பிரமிப்போடு ஒருகணம் பார்த்து வியந்தவாறு பதிலுக்கு முறுவலித்தாள் சிங்காரி. தங்கை இன்னமும் உலகம்அறியாத சிறுமியாய் தன்னையே சுற்றி வருவது மாறி வரும் இயந்திர உலகில் அவளுக்கு நம்ப முடியாத அதிசயமாகவே பட்டது.

## அகிலா கோவிந்த்

பின், காலையில் வேலைக்குச் சென்று விட்டு அலுவலகம் முடிந்து திரும்பிய அக்காவை காணாததைக் கண்டதுபோல் கழுத்தைத் கட்டிக் கொண்டு கொஞ்சும் தங்கையயை எப்படி என்ன சொல்வது?

ஆனாலும்இவள் தன் மேல் இப்படி அநியாயமாகத்தான் பாசம் வைத்து உருகுகிறாள் என அடிக்கடி உள்ளுக்கள் நினைத்து குமைந்துதான் போவாள்.

தாய் தந்தையற்ற அனாதையாய் சிறு வயது முதலே அத்தை பூரணத்தின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள்தான் இருவரும். அதனாலே எனக்கு நீ துணை... உனக்கு நான் துணை.. என்பதுபோல் வேறு ஊர் உலக சொந்தங்களற்ற வாழ்க்கையை தொடங்க வேண்டிய சூழ்நிலை அவர்களுக்க.

அதிலும் சிங்காரி தைரியசாலி. மதுமதியை விட நான்கு வயத மூத்தவள் என்றாலும் எதற்கும் பயப்படாதவள். அசட்டுத் துணிச்சலுக்கு, பெயர் பெற்றவள். அதனாலே டிகிரி முடித்த அடுத்த நாளே ஹாண்ட்பேக்கை தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு வேலை தேடிக் கிளம்பிவிட்டாள்.

மாலை வீடு வரும்போது வேலையுடன்தான் வருவேன் என சொல்லி விட்டுச் சென்றவள் சவால் விட்டது. மாதிரியே மூன்றே மணி நேரத்தில் ஒரு வேலையையும் தேடிக் கொண்டாள்.

ஜெராக்ஸ் கடை ஒன்றில் வேலை. மாதம் இரண்டாயிரம் சம்பளம்... என்ற போது மதுமதி முகம்சுளிக்கத்தான் செய்தாள். எனக்காக... இது? டிகிரி படிக்காமலே இந்த வேலையைப் பார்க்கலாமே? என்றபோது, இது ஆரம்பம்தான்.... இனி நடப்பதைப்பார்...! என்றாள்.

சொன்னது போலவே ஓரிரு மாதங்களில் இன்னொரு வேலை.. இன்னொரு கம்பெனி என மாறி... மாறி.. கடைசியில் ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் பத்தாயிரம் ரூபாய் சம்பளத்திற்கு நல்ல வேலை ஒன்றையும் தேடிக்கொண்டாள்.

அவளின் இந்த திறமையைப் பார்த்த மதுமதி நிஜமாகவே சிங்காரியைக் கண்டு வியக்கத்தான் செய்தாள்! அவளது மன மகுடத்தில் சிங்காரி இன்னொரு படியாய் உயர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.



அக்காவைப் போல தானும் படிக்க வேண்டும் என படிப்பில் அக்கறை காட்டினாள்.

அக்காவின் அரவணைப்பிலே படித்து வந்த மதுமதி அவளுக்கு இனியும் சுமையாக இருக்க விரும்பாமல் படித்து வேலை தேடிக் கொள்ள வேண்டும் என நினைத்தாள். அதனாலே பின்னால் சிங்காரி மேற்படிப்பு படிக்க வற்புறுத்திய போது பிடிவாதமாய் மறுத்து விட்டாள்.

சிறு வயதிலே பெற்றோர்களை பறி கொடுத்துவிட்டு அத்தை பூரணத்தின் கண்காணிப்பில் வளர்ந்தவர்கள் மதுமதியும் சிங்காரியும்.

தன் கூடப் பிறந்த அண்ணனுக்காக இருவரையும் தத்து எடுத்து சொந்தப் பிள்ளை போல பூரணம் வளர்த்தாள். காலஞ்சென்ற மாமாவின் பென்ஷன் பணத்தையும், அங்கங்கு வீடுகளுக்கு மாவரைத்துக் கொடுத்துஅதில் வரும் வரும்படியைக் கொண்டு ஒரு வழியாய் இருவரையும் எந்தக் குறையுமில்லாமல் படிக்க வைத்தாள்.

சிங்காரி படிப்பு முடித்து சொன்னபடியே ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் நல்ல வேலையில் சேர்ந்து கை நிறைய சம்பாதிக்க ஆரம்பித்த போதுதான் அத்தை பூரணத்தின் போதாத நேரம் அவளுக்கு உடம்பு நோவும் வந்தது.

சிங்காரி சம்பாதிக்க ஆரம்பித்த இரண்டாவது மாதத்திலேயே அத்தை நோயைத் தாங்க முடியாமல் கண் மூடிவிட்டாள்.அப்போது மதுமதி ப்ளஸ் டூ படிப்பை படித்துக்கொண்டிருந்தாள்.

அத்துடன் படிப்பை நிறுத்தி விடலாம் என மதுமதி எண்ணியிருந்தாள். சம்பாதிக்க நான் இருக்கிறேன். நீ தொடர்ந்து படி! என சிங்காரி வற்புறுத்தி அவளைப் படிக்க வைத்தாள்.

ஆயிற்று. ஒரு வழியாய் பிளஸ் டூ முடித்து பட்டப் படிப்பும் படித்தாயிற்று.

அடுத்த .வேலை தேடும் படலம் தான். அந்த அவஸ்தையான படலத்தில் லட்சத்தோடு லட்சமாய் மதுமதி இறங்கி தீவிரமாய் வேலை தேடியபோதுதான் ஒரு நாள் சிங்காரி அலுவலகத்தில் இருந்து வந்தவள் அந்த விஷயத்தைச் சொன்னாள்.

நீ இனி கவலையை விடு. உனக்கு வேலை ரெடியாகி விட்டது... மது... என்றாள்.

வேலையை ரெடியாகி விட்டதா..? என் வேலை? என்றாள் மதுமதி ஆர்வமாய்.

இது நல்ல வேலைதான். ஆனால்.

அக்கா இழுப்பதைக் கண்டு முகம் சுருங்க வியந்தவள், எதுவானாலும்... சொல்லக்கா... என்றாள்.

இது... சாதாரண வேலையல்ல. ஒருவிதமான பழிவாங்கும் வேலை! என்றாள்.

பழிவாங்கும் வேலையா?

மதுமதி புருவம் உயர பார்க்க மெல்ல தலையசைப்பு செய்தாள் சிங்காரி.

ஆமாம்... மது... ஒரு ஆளை பழிவாங்க வேண்டும். அதற்காக அந்த வேலையில் சேர வேண்டும். அதற்கு சரியான ஆள் நீதான்... என்றாள்.

சிங்காரி பட்பட்டென சொல்ல மதுமதிக்கு ஒன்றும் புரியவில்லை.

நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை. தெளிவாகச் சொல். நாம் எதற்காக பழிவாங்க வேண்டும்?

காரணமிருக்கிறது... மது...

சிங்காரி தலையாட்டியபடி முகம் இறுக பற்களைக் கடித்தபோது மதுமதி அதிரத்தான் செய்தாள்.

என்ன காரணம்... சொல்லக்கா பயப் பார்வை விலகாமல் அக்காவின் முகத்தைப் பார்த்தபடியே மதுமதி கேட்க தலையை வெட்டியபடி சிங்காரி சொல்ல ஆரம்பித்தாள்.

மது... நான் சொல்லப் போவதை நினைத்து உனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கும். நம் அக்காவா... இப்படி? என்றெல்லாம் கூட உனக்கு நினைப்பு ஓடும்! சொல்லிவிட்டு மதுமதியை உற்றுப் பார்த்து அவள் முகக் குறிப்பை ஆராய முற்பட்டாள்.

மதுமதியோ இதழ் விரிந்த புன்னகையை மேலும் பெரிதாக்கியவள், ஐயோ, இந்த பீடிகையெல்லாம் வேண்டாம். சொல்லக்கா... என ஆவலாய் நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.



சொல்கிறேன்... மது. முதலில் நான் செய்த ஒரு விஷயம் தவறு என்று கூட நீ சொல்லலாம். அதனாலே இப்படி ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்...

என்ன பிரச்சினைக்கா?

காதல் விஷயம்... மது...!

என்ன காதல் விஷயமா

ஆமாம். நான் ஒருவரை காதலித்தேன் என்றால் உன்னால் நம்ப முடிகிறதா?

நிஜம்மாவா...? என்றபடி வாய் பிளக்காத குறையாய் மதுமதி கேட்டாள்.

சிங்காரி முகம் சிவக்க தனது நீளமான முகத்தை லேசாய் அசைத்தவள் மறுகணமே முகம் இறுகியவளாய், நான் ஒருவரைக் காதலித்ததும் உண்மை. அந்த நபர் வஞ்சகமாய் என்னை ஏமாற்றியதும் உண்மை...என்றாள் ஆக்ரோஷமாக.

என்ன... ஏமாற்றி விட்டாரா...? என பலமாய் மதுமதி அதிர்ந்தவள் என்னக்கா சொல்கிறாய்...?அப்படியானால் உன்னை அவர்... அவர்...

மதுமதி திணறலாய் கேட்க... அவள் கேட்க வருவதன் அர்த்தத்தை புரிந்த சிங்காரி அவசரமாய், ஐயோ, நீ நினைப்பது போல் உடல் ரீதியாக நான் காதலிக்கவுமில்லை. அவர் என்னை ஏமாற்றவுமில்லை. நான் சொல்வது மன ரீதியாக! மனசுக்குள் நிறைய ஆசைகளை வளர்த்து என்னைக் கல்யாணம் செய்வது போல் சொல்லிக்கடைசியில் கல்யாணம் வேண்டாம் என்று மனம் மாறிவிட்டார்..

மூச்சு விடாமல் ஒரே மூச்சில் சிங்காரி சொல்லி முடிக்க... அவள் உடல் ரீதியாக நல்ல வேளையாய் ஏமாறவில்லை என மதுமதி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அவள் சொல்வதையே கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்.

மது. கடைசியில் அந்த ஆள் என்னைக் காதலித்து விட்டு கல்யாணம் என்று நான் நெருங்கியபோது விலக ஆரம்பித்தான். நான் தொடர்ந்து அவனை விரட்டிக் கல்யாணம்செய்யும்படி மன்றாடியதும் என்ன சொன்னான் தெரியுமா?

அப்படி என்ன சொன்னான்? என்றாள் மதுமதி ஆவலாய்.

கல்யாணம் செய்வது அவன் வழக்கமில்லையாம். காதலிப்பது அவன் பொழுதுபோக்காம். காதலித்ததோடு மட்டுமல்லாமல் தாலி கட்டாத மனைவியாகவும் அவனிடம் நடந்து கொள்ள வேண்டுமாம். இல்லாவிட்டால்..அவனைக் காதலித்த விஷயத்தை வெளியே பரப்பி.. கல்யாணமே எனக்கு நடக்க விடாதபடி பண்ணிவிடுவேன்... என மிரட்டல் வேறு செய்து விட்டான்.

பின் என்னவாயிற்று?

சிங்காரி பதிலுக்கு கைகளை விட்டேற்றியாய் வீசினாள். ஒன்றும் ஆகவில்லையே! நான் அவன் முகத்தில் காறி உமிழ்ந்து விட மாட்டேன் என சவால் விட்டான் அவன். பதிலுக்கு நானும் சவாலாய் சூளுரைத்திருக்கிறேன்..

சூளுரைத்தாயா? என்ன சொல்லியிருக்கிறாய்?

அவனையும் நிம்மதியாக வாழ விட மாட்டேன். அவனுடைய தொழில் சாம்ராஜ்யத்தையும் தரைமட்ட மாக்குவேன்... என இறுமாப்பில் சொல்லியிருக்கிறேன்..

என்ன தொழில் சாம்ராஜ்யமா?

ஆமாம் மது... அவனுடைய திமிருக்கு காரணம் அவனுக்குக் கிடைக்கும் அபரிமிதமான பணம்தான்! அது கிடைக்காதபடி செய்துவிட்டால் அவனை ஒரே நாளில் ஓட்டாண்டியாக்கி பழிவாங்கிடலாம்.

அது எப்படி முடியுமக்கா?

முடியும்! வழியும் இருக்கிறது! மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான பேரிங்குகள் தயாரிக்கும் தொழில்தான் அவனுடையது. அந்த அவனது கம்பெனி பேரிங்குகள் மார்க்கெட்டடில் முதல்தர பேரிங்குகளாய் இருப்பதால்...அவனுக்கு அதிகம் விற்பனையாகி அபரிதபணம் கொட்டுகிறது. அதைத் தடுக்க வழி என்ன வென்றால்...

சிங்காரி நிறுத்த மதுமதி ஆவலானாள்.

சொல்லக்கா.. என்ன வழி..?



அவன் அந்த பேரிங்குகளின் தயாரிப்பு செய்முறையை ரகசியமாய் வைத்திருக்கிறான். அந்த பேரிங்குகளின் உற்பத்தி ஃபார்முலாவை கண்டுபிடிக்க வேண்டும். அந்த செய்முறை ரகசியத்தை அவனிடமிருந்து எப்படியாவது தெரிந்து கொண்டால் போதும்.

அதை வைத்து என்ன செய்ய முடியும்? என்றாள் மதுமதி புரியாதவளாய்.

நிறைய செய்யலாம் மது. அந்த அவனது கம்பெனிக்கு எதிரிகளாய் போட்டி கம்பெனிகள் நிறைய இருக்கின்றன. நாம் அந்த செய்முறை ரகசியத்தை மட்டும் தெரிந்து கொண்டு அந்த போட்டி கம்பெனிகளிடம் சொல்லி விட்டால் போதும். அவர்கள் உடனே போலி பேரிங்குகளை அதேபோல் தயாரித்து சந்தையில் புழங்கவிட்டு விடுவார்கள். அதன் பின் என்ன நடக்கும் தெரியுமா?

என்ன நடக்கும்?

போலி பேரிங்குகள் சந்தைக்கு வந்துவிட்டால் அவனது பேரிங்குகளின் விற்பனை மளமளவென குறைய ஆரம்பித்து விடும். அவன் பேரிங்குகளின் உற்பத்தியை நிறுத்தி கம்பெனியையே மூடிவிடும் நிலைக்கு வந்து விடுவான்.

சரி... அப்படி பழி வாங்கி விட்டால்.. உனக்கு என்ன கிடைக்கும்? தலைசாய்த்து அப்பாவியாய்க் கேட்டவளை கண்களை உருட்டிப் பார்த்தாள் சிங்காரி.

என்ன அப்படிக் கேட்டு விட்டாய்? அவன் என்னைக் காதலித்து பணத் திமிரில் ஏமாற்றியவன் என்பதை மறந்து விட்டாயா? அவன் பணம் எல்லாம் கரைந்தால்தான் அவனுக்கு புத்திவரும். மனம் திருந்தி என்னைக் கல்யாணமும் செய்து கொள்வான். எனக்கு நான் விரும்பிய வாழ்க்கையும் கிடைக்கும்... இப்போது புரிகிறதா உனக்கு?

சிங்காரி கேட்டதற்கு மதுமதி பதில் சொல்லாமல் ரொம்ப நேரம் யோசித்து விட்டு நிமிர்ந்தாள்.

இதில் நான் என்ன செய்ய வேண்டும்... சொல்லு! என்றாள்.

சிங்காரியின் முகம் மலர்ச்சியானது.

தனது திட்டத்தை மெல்ல விவரித்தாள் அவள்.

அதன்படி மதுமதி சிங்காரி ஏற்பாடு செய்திருக்கும் அவனது பேரிங்கு கம்பெனியில் ஸ்டெனோவாய் வேலைக்குச் சேர வேண்டும். அவனுக்கு மதுமதியை சிங்காரியின் தங்கை என்பதைக் கொஞ்சமும் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் சபலப் புத்திகாரன் என்பதால் மதுமதியைப் பார்த்ததும்அவள் அழகில் ஜொள்விடாத குறையாய் மயங்குவான். அவளுக்கு அவனது வழக்கமான காதல் வலையை வீசுவான். மதுமதியும்அதுதான் சமயம் என அவனைக் காதலிப்பது போல் நடித்து மயக்கி அவனது பேரிங்கு உற்பத்தி ரகசியத்தை தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி அந்த ரகசியத்தை அறிந்ததும் அதை சிங்காரியிடம் வந்து சொல்லிவிட்டால் போதும் மற்ற விஷயங்களை அவள் பார்த்துக் கொள்வாளாம்.

மதுமதி சிங்கார சொன்ன திட்டத்தைக் கேட்டு அதிரத்தான் செய்தாள்.

என்ன மயக்க வேண்டுமா? காதலிப்பது போல் நடிக்க வேண்டுமா? என்ன இது கூத்து? என அலறத்தான் செய்தாள்.

சிங்காரியோ கைகளைத் தட்டி சாதாரணமாய் அவளைப் பார்த்தாள்

ஐயோ! வெறும் நடிப்புதான் மதுமதி... நான் என்ன அவனை நிஜமாகவா காதலிக்கச் சொல்கிறேன்... இல்லையே...

ஆனாலும் அக்கா... ஒருவரை மயக்க... காதலிப்பது போல் எல்லாம் நடிப்பது கொஞ்சம் விபரீதமாகத் தெரிகிறதே!

விபரீதம்தான்! ஆனால் இதை விட்டால் அவனை மடக்க வேறு வழி இல்லையே மது... அவளைச் சிந்திக்க விடாதபடி தைரியம் கொடுத்தாள் சிங்காரி. ஆனாலும் மதுமதியின் மனம் தவித்தது.

கொஞ்சம் யோசித்துப் பார்.... இதற்காக நாம் இவ்வளவு தூரம் இறங்கி நடிக்க வேண்டுமா? நம்அழகைக் காட்டி பல் இளித்து மயக்க வேண்டுமா?

மதுமதி தனதுஅழகான தலையைச் சாய்த்துக் கண்கள் படபடக்க கேட்க அவளையே உறுத்துப்ட பார்த்தாள் சிங்காரி.


கஷ்டம்தான். மது ஆனாலும்... எனக்காக.. இந்த அக்காவிற்காக நீ இதைக் கூடவா செய்ய மாட்டாய்....? என மீது நீ வைத்திருக்கும் பாசம்



அவ்வளவுதானா? என சிங்காரி வருத்தமாக சொல்லும் பொழுது நெஞ்சு தாளாமல் அவளை இறுகக் கட்டிக் கொண்டாள் மதுமதி.

கண்டிப்பாக செய்கிறேன்! உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன் என்பதை புரிந்து கொள்!

வரப்போகும் ஆபத்தை அறியாமல் உறுதியான குரலில் பேசி சம்மதமாய் தலையாட்டினாள் மதுமதி.



## 2

சிங்காரி சொன்னபடி. அவள் விருப்பப்படியே மதுமதி கிளம்ப ஆரம்பித்தாள். அன்றுதான் அவன் சொன்ன வேலைக்கான இண்டர்வியூ என ஏற்பாடு.

மதுமதி கண்ணாடி முன் நின்று தன் பிம்பத்தைப் பார்த்து நிதானமாய் அழகு படுத்தினாள். கண்களில் லேசாக தீட்டிய கண்மை, முகத்தில் அளவான ஃபேஸ் கிரீம், புவரு மத்தியில் பொட்டு. இளம் சிவப்பான இதழ்களில் அதே நிற லிப்ஸ்டிக். பளிச்செனக் கவரும்படிட இறுக்கமாய் உடம்பைச் சுற்றியிருக்கும் மெரூன் கலர் ஸேரி. நீளமான கூந்தலை அப்படியே உயர்த்தி வாரி க்ளிப்பில் செய்திருந்த அழகு...

எல்லாமே... அவன் அவனுக்காக! அவனை தன் வலையில் வீழ்த்துவதற்காக! தன் வழக்கமான கொள்கையை மீறி மதுமதி செய்த அழகு! சிவிச் சிங்காரித்தாயிற்று. இனி மயக்க வேண்டியதுதான்! குபுக்கென கேலியாய் எழுந்த போலிப் புன்னகையை அடக்கியபடி பைல்களை எடுத்துக் கொண்டு முன்புறம் வந்தாள்.

அக்கா சிங்காரி அவள் வருகைக்காக முன் அறையில் காத்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும் துள்ளாத குறையாய் உடனே எழுந்தாள்.

மதுமதி நிதானமாக அவளிடம் முன்னழகு பின்னழகு ஒப்பனைகளைக் காட்டினாள்.

மதுமதி அமர்த்தலான இயற்கை அழகில் பேரழகியாய் பிரகாசிப்பதை சிங்காரி உணர்ந்தாள். அவள் கண்களில் எழுந்த பொறாமை மதுமதியின் புன் சிரிப்பில் மறைந்தது.

பதிலுக்கு புன்னகைத்தபடி மதுமதியை மேலும் கீழுமாகப் பார்த்தாள்.

அக்கா,எப்படி இருக்கு.? என்றாள் மதுமதி.

பிரமாதம்.... என்றபடி கைகளைத் தூக்கிக் காட்டினாள்.

நான் நினைத்தது நடக்குமா?

கண்டிப்பாக நடக்கும்.

மதுமதி உற்சாகமாக, சிங்காரி நெற்றியைச் சுருக்கினாள்.

மது இன்னொரு முக்கியமான விஷயம்..

ம்ம்... சொல்லுக்கா...

அவன் கிட்ட நீ ஜாக்கிரதையா நடந்துக்கணும். சமயம் பார்த்து உன் வலையை வீசி மயக்கணும்.அவனுக்கு எவ்வித சந்தேகமும் வந்திரக்கூடாது...

சொல்லியபோது அக்கா சிங்காரியின் பற்கள் ஆத்திரமாய் கடிபடுவதை மதுமதி கவனித்தாள். அவள் அவனால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருப்பாள் என்பது புரிந்தது.

யோசித்தவள் அதற்கு மேல் நேரமாகி விட்டதால் அக்காவிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

மதுமதி சிங்காரி கொடுத்த அட்ரஸூடன் பஸ் ஏறிவிட்டாள்.

நகரின் மத்தியப் பகுதியில் உள்ள மினர்வா சர்க்கிள் பக்கம் இருந்தது மகேந்திரனின் ராஜா இண்டஸ்ட்ரீஸ். விஸ்தாரமான பரப்பளவில் பிரும்மாண்டமான கட்டிட அமைப்போடு இருந்தது. தொழிலகம் என்ற பெயரில் பேரிங்குகள் உற்பத்திப் பிரிவும் செயலகம் என்ற பெயரில் நிர்வாக கட்டிடப் பகுதியும் தெரிய... அதை நோக்கி நடந்தாள் மதுமதி.

நிர்வாகக் கட்டிடத்தின் கண்ணாடிக் கதவுகளைத் திறந்ததும் சிறிய ரிசப்ஷன் தெரிந்தது. மதுமதி நுழைந்து ரிசப்ஷன் பணியாளரிடம்



வேலைக்கான விபரத்தைச் சொன்னாள். முன்னதாக சிங்காரி அங்குள்ள பணியாள் ஒருவன் மூலம் இண்டர்வியூ கார்டு ஒன்றை வாங்கி அவளிடம் கொடுத்திருந்தாள்.

செக்ரட்டரி வேலைக்கு ஆள் தேவை என தின பேப்பரில் ராஜா இண்டஸ்ட்ரீஸ் கொடுத்த விளம்பரமும் வசதியாய் போயிற்று. அதனால் வழக்கமான இண்டர்வியூ பெண்களோடு அவளும் போய் கலந்து கொண்டாள்.

இண்டர்வியூவுக்கு வந்திருந்த ஐந்து பேரில் கடைசி ஆளும் அவள்தான். அதனால் எவ்வித பரபரப்புமில்லாமல் நிம்மதியாக உட்கார்ந்திருந்தாள். தனது முறை வரட்டும் என அமைதியாக அவள் இருந்தாலும் உள்ளுக்குள் அந்த முதலாளி மகேந்திரன் எப்படி இருப்பான்? அக்கா சிங்காரி சொல்வது போல் அவனைத் தன் வலையில் வீழ்த்திவிட முடியுமா? என்றெல்லாம் நினைப்பு ஓடியது.

இதோ.. அவளது முறை. பணியாள் வந்து எம்.டி அழைப்பதாய்ச் சொன்னதும் எழுந்து மிடுக்கான நடையுடன் இண்டர்வியூ அறைக்கள் நுழைந்தாள்.

குட்மார்னிங்... ஸார்...சொல்லியபடி எதிரே குஷன் இருக்கையில் கம்பீரமாக இருந்த அவனை உற்றுப் பார்த்தாள்.

நெடு நெடு உயரம். சுருளான முடி தவழும் பரந்த நெற்றி. கூரான மூக்கு. முறுக்கி விடப்பட்டிருச்கும் அடர் மீசை. அளவாக சிரிக்கும் இறுக்கமான உதடுகள். வேல் விழியாய் குத்தும் கரு விழிகள். எல்லாவற்றுக்கும்மேல் அஜானுபாகுவான உடம்புடன் கம்பீரமான ஆண்மை பொங்கும் பொலிவுடன் அவன் மகேந்திரன்!

அவனை உற்று கணஓ;கள் விரியப் பார்த்தவள் இவன் கம்பீரத்தில் சிங்காரி மனசை பறிகொடுத்து காதலித்டதில் ஆச்சரியமில்லை... என நினைத்தாள்.

அதிடிலும்அவனும் அவளைப் போலவே கண்களை விரித்து இடுக்கிப் பார்த்தபோது... சரிதான் உள்ளுக்குள் இவனுக்கும் மன்மதக் கொக்கு நினைப்புதான்! என கேலியாய் நினைத்தாள்.

இருக்கையில் அவளை உட்காரச் சொல்லிவிட்டு, யுவர் நேம்.. ப்ளீஸ் என்றான் அவன்.

மதுமதி! என்றாள் அவள் பணிவாய் தேன் தடவிய குரலில்.

அவன் மறுபடி அவள் மீது பார்வையை ஓட்டியவன் மேலிருந்து கீழ்வரை அவளை ஒரு விழுங்கும் பார்வை பார்த்தான்.

அவளும் வேண்டுமென்று இமைகளை அகல விரித்து மயக்கும் விழிகளோடு அவனைப் பார்த்தாள்.

பாருடா... நன்றாகப் பார்... அப்படியே மயங்கி விடு! என்பது போல் பார்வையில் இறக்கம் காட்டி அகற்றினாள்.

அவன் அவள் நினைத்த மாதியே சலனப்படுவது போலவும் தெரிந்தது

அதுமட்டும் உண்மையென்றால்...இவனை மயக்குவது.. இவனை நெருங்கி செங்காரிக்காக அந்த ரகசியங்களை திருடுவது எல்லாமே சுலுவாகிப் போய்விடும்!

மனதிற்குள் நினைத்தபடியே அவன் கேட்ட பொது அறிவுக் கேள்விகளுக்கெல்லாம் டக் டக்கென சரியான பதிலைச் சொன்னாள்.

மகேந்திரன் அத்துடன் இண்டர்வியூவை முடித்து விட்டான்.

ம்ம்...நீ... போகலாம்... என்றான்.

அவள்தான் போகாமல் நின்றாள்.

ஸார்ர்ர்.... என இழுத்தாள்.

அவன் முகம் கேள்விக்குரியானது.

உங்ககிட்ட சில விஷயங்களைச் சொல்லணும், சொல்லலாமா? என்றாள்.

விஷயங்களா?மகேந்திரன் மேலும் முகத்தைச் சுருக்க அவள் புன்சிரிப்பை பெரிதாக்கினாள்.

அதாவது.... ஸார்... என்னைப் பற்றி... என்னோட குணத்தைப் பற்றி... உங்க கிட்ட கொஞ்சம் சொல்லணும் சொல்ல அனுமதி கிடைக்குமா?

மெதுவாகத் தூண்டிலைப் போட்டாள் அவள்.



அவன் முதல் முறையாய் இறுக்கம் தளர்வது போல் உதடுகளில் சிரிப்பை உதிரவிட்டான். அதை உற்றுப் பார்த்தவள்,அட... புலி, சிரிக்கிறதே! என்ற கேலி நினைப்புடன் புருவத்தை உயர்த்தினாள்.

அவன் ம்...ம்... சொல்லு... என்றான் தெளிவான குரலில்.

ஸார், எனக்கு கம்பெனி கணக்கு வழக்குகளைப் பார்க்கிறது, பைல்களைப் பார்க்கிறதுங்கிற டேபிள் வொர்க் வேலைகள் பிடிக்கும் ஆனா அதைவிட கொஞ்சம்..

அவள் மறுபடி தயங்கினாள்.

ம்ம்... தைரியமாகச் சொல்லு...

அதாவது கொஞ்சம் சேலஞ்சிங்கா... சாதனை செய்யற மாதிரி என்னோட வேலை அமைஞ்சதுன்னா.. நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன்.

சாதனை செய்யுற மாதிரியா..? அப்படின்னா...? புரியாதது போல் முகத்தை வைத்துக் கொண்டு அவன் கேட்டான்.

அதாவது... சவால் விடுகிற மாதிரி ஸார்..! பொண்ணுன்னா கட்டுப்பட்டித்தனமா நினைக்கிற ஆண்களுக்கு சவால் விடுற மாதிரி என்னோட வேலையும் இருக்கணும்னு நான் நினைக்கிறேன்... சார்....

அவள் வேண்டுமென்றே வார்த்தைகளை முடிக்க முடியாமல் தடுமாறுவதுபோல் நடித்தாள்.

அவள் நினைத்தது போலவே அவன் முடித்து வைத்தான்.

புரியுது... புரிகிறது! அதாவது துணிச்சலாய் எந்தவித சூழலையும் எதிர் கொள்ள முடியும் எனச் சொல்ல வருகிறாய். அப்படித்தானே?

தூண்டிலில் மீன் சரியாக சிக்க ஆரம்பித்து விட்டது.

நினைப்பு மதுமதியுள் ஓட பலமாய் தலையாட்டி ஆமோதித்தாள் அவள்.

அவன் மகேந்திரனும் கைகளைத் தட்டிக் கொண்டான். ஐ லைக் தட்... மதுமதி! வெளிப்படையா பேசற உன்னோட தைரியம்எனக்குப் பிடிச்சிருக்கு... என்றபடி மறுபடியும் நெற்றி சுருங்க யோசித்தவன் சட்டென

ஸோ... உனக்கு இந்த கணக்கு குமாஸ்தா வேலைவேண்டாம். சொஞ்சம் சவால் விடுற மாதிரி.... செலஞ்சிங் ஜாப்! செக்ரட்டரியா.... உனக்கு வேலைக்கு அப்பாயின்ட்மென்ட் தர்றேன்... வேலைக்கு சேர்ந்துக்கிறியா? ஓ.கே.வா...? என்றான், அதே அவசரக் குரலில்.

அவள் அதைக் கேட்டதும் தலை சுழலும் அளவுக்கு மேலும் கீழும் ஆட்டினாள்.


அவள் ஆசைப்பட்டது... குறி வைத்தது இந்த வேலைக்குத்தானே? அவனுடைய பர்ஸனல் செக்ரட்டரியாய் அவனோடு நெருங்கி வேலை பார்த்தால்தானே...அந்தபேரிங்கு ரகசியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்? அதை அவனுக்குத் தெரியாமல் களவாடவும் முடியும்?

அப்படியானால்... நாளைக்கு வேலையில் சேர்ந்து விடு. இனி... நீ தான் என் பர்ஸனல் செக்ரட்டரி... அந்தரங்க... காரியதரிசி! அவன் உற்சாகமாகி அழுத்தந்திருத்தமான குரலில் உச்சரித்தான்.

அவளும்உள்ளுக்குள் குதிபோடாத குறையாய் உற்சாகமானள்.

இனி பயமில்லை... இந்த ரகசிய குறிப்புகளை இவனிடமிருந்து எளிதில் எடுத்து விடலாம். சிங்காரி விரும்புவது போல் இவனையும் பழிவாங்கி விடலாம்!

மனதினுள் குரூரமாய் நினைத்தாலும் எதையும் வெளிக்காட்டாத சாந்தமான முகத்துடன் விடுவிடுவென வெளிவந்தாள். அவள் போவதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்




மதுமதி வேலை கிடைத்து அன்று உற்சாகமாய் அலுவலகத்திற்குள் நுழைந்த போது ஹாய்..! என எதிரில் வந்து மகேந்திரன் வரவேற்க, பதிலுக்கு இவள் அமைதியாக வணக்கம் தெரிவித்தாள்.

அவன் மகேந்திரன் அவளது நடைஉடையழகை மேலிருந்து கீழ்வரை நிதானமாய் உற்றுப் பார்த்தான்.



அவனுக்கு எதிர்புறமாய் சிறிய மேஜையுடன் கூடிய இருக்கை அவளிது. அவள் போய் உட்காரப் போனாள்.

ஒரு நிமிடம்... என சொடுக்கிட்டுக் கூப்பிட்டவன் அவள் பெயர் சட்டென ஞாபகம் வராதவனாய் யோசித்தான்.

உன் பெயர்...ம்ம்?

ம... மதுமதி.. என்றாள் அவள்.

ம்ம்ம்... மதுமதி...குட் நேம்! ஆமா... நீ நேற்று சொன்னது எல்லாம் உனக்கு ஞாபகமிருக்கா?

ஞாபகமிருக்கு... ஸார்...

அவள் பலமாய் தலையசைத்தாள்.

அவன் புருவங்களை உயர்த்தினான்.

அப்படின்னா.... அப்படி ஒரு சுதந்திரமான கேர்ஃப்ரீ வாழ்க்கையை வாழ விரும்புற நீ... அதை ஏன் உன்னோட உடைகளிலும் காட்டக்கூடாது? ஒரு மிடி,கவுன், ஸ்கர்ட்டுன்னு மாடர்ன்னா உடையணியாம இப்படி எட்டு முழ புடவையைச் சுத்திக்கிட்டு....?

அவன் கேள்வியை முடிக்கும் முன்பே அவள் மென்மையான புன்னகையை உதிர்த்தாள்.

ஸார், நான் என்ன நினைக்கிறேன்னா?

சொல்லு...

சுதந்திரம்கிறது மனசளவில் இருந்தாப் போதும்ன்னு நினைக்கிறேன். உடைகளில் காட்டினால் நிறைய தெருப்பொறுக்கிகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்! என்றவள் தன் பதிலால் அவன் கோபப்படக் கூடாது என்பதற்காக நான் சொல்வதுசரிதானே ஸார்? என்பதையும் சேர்த்துக் கொண்டாள். தன்னைத்தான் ஜாடைமாடையாய் பொறுக்கி போல் கேட்கிறாயே.. என்றானோ.... ஒரு கணம் சிந்தித்து முகம் இறுகியவன் மறுகணம் தளர்ந்தான்.

நீ சொல்வது சரி. கோ... அஹெட்! என்றான்.

தன் பார்வையைத் திருப்பி முன் உள்ள பைல்களை பார்க்க ஆரம்பித்து விட்டான்.

மதுமதி தனது இருக்கையில் அமர்ந்து தனக்குரிய வேலைகளை ஆராய்ந்தாள்.

வேலை ஒன்றும் பெரிதாயில்லை! அவன் ரெகுலராய் கம்பெனி மூலம் மற்ற கம்பெனிகளுக்கு அனுப்ப வேண்டிய லெட்டர்கள், அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டி ரிப்போர்ட்கள், கம்பெனி தர சான்றிதழ்கள்... என குறிப்பிடும்படி இலகுவாகவே இருந்தது.

அடிக்கடி எழுந்து அவனிடம் சில லெட்டர்களுக்கான கையெழுத்தை வாங்க வேண்டியிருந்தது. சில தொலைபேசி அழைப்புகளுக்கு அவனிடம் பதில் பெற்றச் சொன்னாள்.

ஆனால் அவளை இன்னொரு விஷயம் மிகவும் அதிசயப்படுத்தியது. மகேந்திரன் தேவையில்லாமல் அவளைப் பார்க்கவோ, அவனது கழுகுப் பார்வை அவளை ஊடுருவவோ செய்யாது அவளுக்கு பெரும் வியப்பே! அவனே பைல்களை ஆழ்ந்து பார்வையிடுவதும் அடிக்கடி எழுந்து கம்பெனி தொழிற் கூட வேலைகளை ஆராயப் போவதுமாய் பிஸியாகவே இருந்தான்.

இவனிடம் அந்த பேரிங்குகளின் செய்முறை ரகசியத்தை அறிந்துகொள்வது அவ்வளவு எளிதலல என்பது மதுமதிக்குப் புரிந்தது.

அன்று வீட்டுக்கு வந்ததும் அக்கா சிங்காரியிடம் தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினாள்.

அக்கா, நீ சொல்கிற மாதிரி அவர் இல்லை...

இல்லையென்றால்...? சிங்காரி இழுத்தாள்.

அவரைப் பார்த்தால் சலனப்படுகிற மாதிரி தெரியவில்லை...

சிங்காரி சிரித்தாள்.

எதை வைத்து அப்படி ஒரு முடிவிற்கு வந்தாய் மது? என்றாள்.

நீயே பாரேன். காலையில் இருந்து மாலை வரை அவரது இருக்கை முன்தான் உட்கார்ந்திருக்கிறேன். அவர் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. ஒரே பைல் மயம்தான்! வேலைதான்!



சிங்காரி கண்களை அகல விரித்து மறுபடிச் சிரித்தாள்.

அவசரப்படாதே.. மது.. நீ நினைக்கிறது தவறு... மகேந்திரன் இந்த பெண்கள் விஷயத்தில் புலி மாதிரி நடந்து கொள்வான்.

புலி மாதிரியா.?

மது. இரை தேடப் போகும் புலி அவசரப்படாது. இரையைத் தேர்ந்தெடுத்து பொறுமையாய்க் காத்திருந்து சமயம் பார்த்து முன்னேறும். அதுபோல்தான் மகேந்திரனும்..

நிஜமாகவா?

இம்முறை கண்கள் விரியும் பயத்துடன் கேட்டாள் மதுமதி.

நிஜம்தான்... நீயே ஓரிரு நாளில் தெரிந்து கொள்வாய்!

சிங்காரி பீடிகையாய் சொல்லிவிட்டு சென்று விட்டாள். மதுமதிக்கோ உள்ளூர பயம் அதிகரித்தது. ஆனால் சிங்காரி சொன்ன மாதிரியே இரண்டு நாள் கழித்து ஒரு சம்பவம் நடந்தது.

அன்று மதியம் வேலை நேரம் முடிந்து டிபன் பாக்ஸுடன் எழுந்தவளை மகேந்திரன் அழைத்தான்.

மது, உன்கிட்ட ஒரு விஷயம்... என்றான்.

சொல்லுங்க ஸார்....

மாலை ஐந்து மணிக்கு ஒரு பார்ட்டி இருக்கு... அதுல நீயும் கலந்துக்கணும்.... வர்றியா? நேரிடையாகவே அழைத்தான் அவன்.

ஸார்.. நான்... நான்...

உள்ளுக்குள் படபடத்தாலும் வெளியே தயங்குவது போல் வார்த்தைகளை நிறுத்தினாள்.

அவன் முன்னால் வந்து கைகளை கட்டிக் கொண்டான்.

பி... ஃப்ரீ...! நீ பயப்பட வேண்டாம். இது ஒண்ணும் கூத்தடிக்கிற பார்ட்டி இல்ல... நம்ம கம்பெனியோட வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்துவதற்கான பார்ட்டி...

சரி... ஸார்....

அவன் தலையாட்டியதும் அப்படியே நகரப் போனவன் ஒரு நிமிடம் நின்று மேலும் கீழும் பார்த்தான்.

மது. ஒண்ணு சொல்லலாமா?

சொல்லுங்க.. ஸார்....

நீ கட்டியிருக்கிற இந்த ஸேரியை விட முதல் நாள் நீ கட்டிக்கிட்டு வந்த அந்த மெரூன் கலர் ஸேரி உன் உடம்பை கச்சிதமாய் சுற்றி உனக்கு அழகாயிருந்தது

அப்படியா? என அவள் வாய் பிளக்காத குறையாய் அவனை அதிசயமாய்ப் பார்த்தாள். அன்று முதல் நாள் அவளை அவன் பார்த்ததே சொற்ப விநாடிகள்தான். அந்த நேரத்திலும் தன்னைக் கவனித்து அளவெடுத்திருக்கிறானே!

ஒரு கணம் அக்கா சிங்காரி சொன்னது அவள் ஞாபகத்திற்கு வந்தது. அவன் புலி. சரியான பதுங்கும் புலி. சமயம் பார்த்து பாய காத்திருக்கும்....

என்ன மது மௌனமாயிட்டே? அவன் திரும்பக் கேட்டதும் உணர்வுக்கு வந்தாள்.

ஒண்ணுமில்ல.... ஸார்... அதையே கட்டிக்கிட்டு பார்ட்டியில கலந்துக்கிறேன்..

தட்ஸ் குட்!

அவன் புன்னகையுடன் அகன்றான்.

அவன் அப்படி அகன்ற அடுத்த கணமே சிங்காரிக்கு போனை எடுத்து டயல் செய்தாள்.

ரிசீவரை எடுத்தது சிங்காரிதான்.

விஷயத்தை சொன்னதும் உற்சாகமானாள்.

மதும்மா... நாம் நினைத்த மாதிரியே எல்லாம் நடக்கிறது. நீ பார்ட்டியில் கலந்து கொள். கவனமாகவும் நடந்து கொள்...! என்றாள்.

சரிக்கா...! என்றபடி போனை வைத்தாள் மதுமதி.



அன்று மாலை பார்ட்டிக்காக மதுமதி கண்ணாடி முன் நின்று மெனக்கெடுத்து அலங்காரத்தில் ஈடுபட்டாள். அந்த அதீத மேக்கப் சமாச்சாரங்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவளுக்கு நன்றாகவே இருந்தன. அதைவிட எந்த வித செயற்கையும் இல்லாமல் இயற்கையாய் பளிச்சிடும் அழகு அவளுக்கு பிடித்தமானது. ஆனாலும் அக்காவிற்காக தனது கொள்கையை மீறிய அலங்காரத்துடன் கிளம்பினாள்.

நகரின் பிரதான ஸ்டார் ஹோட்டலான மெரிடியன் ஹோட்டலில் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மகேந்திரன் அலுவலகத்திலிருந்து அவளையும் இரண்டு மூன்று பெண் ஊழியர்களையும் தனது காரிலேயே ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

அவன் சொன்னபடியே மெரூன் கலர் ஸேரியில் அவள் தங்க நிற தேவதை போல் ஜொலித்தாள். காரை வேகமாய் ஓட்டினாலும் இடையிடையே மகேந்திரனின் பார்வை தன்னை வருடுவதை மதுமதி கவனிக்கத்தான் செய்தாள்.

சிறிது நேர பயணத்திற்குப் பின் மகேந்திரனின் கார் அந்த ஸ்டார் ஹோட்டல் முன் நின்றது. எல்லோரும் இறங்கினார்கள்.

மதுமதி எதிர்பார்த்ததை விட நிறைய கூட்டமிருந்தது. மகேந்திரனின் கம்பெனி வாடிக்கையாளர்கள், மாவட்ட வாரியான ஏஜெண்டுகள் என பலதரப்பட்ட மனிதர்கள் வந்திருந்தனர். சிலர் தங்கள் வயதை குறைத்துக் காட்ட ஜீன்ஸும், டீ ஷர்ட்டும் போட்டு பொருந்தாதபடி திரிய.... பெண்கள் எல்லோரும் விலையுயர்ந்த ஜரிகைச் சேலைகளில் தங்களது பொருளாதார நிலையைக் காட்டிக் கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி தொடங்கியதும் ஒவ்வொருவராய் பேச ஆரம்பித்தனர்.

எல்லாமே புகழ்ச்சிதான். மகேந்திரனை நேரிடையாய் மறைமுகமாய் என புகழ்ந்து தள்ளினார்கள். மதுமதிக்கும் ஆச்சரியம்தான். இவ்வளவு சிறிய வயதில் பெரும் தொழிலதிபராய் ஒரு பெரிய நிறுவத்தை நடத்தி வரும் அவனது அசாத்திய திறமையைக் கண்டு அதிசயிக்கவே செய்தாள். கூடவே இவ்வளவு பணமிருந்தும் இவனுக்கு மனம் இல்லையே.... என நினைத்தாள். ஆசை ஆசையாய் சிங்காரியை காதலித்துவிட்டு அவளை ஏமாற்றியதோடு

மட்டுமில்லாமல் அவளை மிரட்ட வேறு செய்திருக்கிறானே என பற்களைக் கடித்தபடி அவனையே பார்த்தாள்.

மகேந்திரனோ அடிக்கடி அவள் பக்கமே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தவன் தன்னைச் சூழ்ந்திருந்த வாடிக்கையாளர் கூட்டத்திலிருந்து விடுபட்டு அவள் பக்கம் வந்து விட்டான்.

மீட்டிங் முடிந்து விட்டது. நாம் சாப்பிடப் போகலாம்... என்றபடி அவளை அழைத்துக் கொண்டு பிரும்மாண்ட டைனிங் ஹால் நோக்கி நடந்தான்.

டைனிங் ஹாலில் வெள்ளைச் சீருடை வெயிட்டரகள், வகை வகையான அசைவ உணவு பதார்த்தங்கள்.

மதுமதி அதைக் கண்டு மிரண்டவளாய், நான் சைவம் என்றாள் முகத்தை சுழித்தபடி. அதை ரசித்தவன், பயம்வேண்டாம். இதே போல் வகை வகையாய் சைவ வகைகளும் அதோ இருக்கிறது... என ஹாலின் மறு பகுதியைக் காட்டினான்.

அவளுக்குப் பிடித்த சாம்பார் சாதமும், பொரியலும் இருந்தது. தட்டில் எடுத்துக் கொண்டாள். மகேந்திரனும் அவளைப் போலவே தட்டில் எடுத்தபோது பக்கத்தில் நின்ற அலுவலக மேனேஜர் ஒருவர், ஸார்.... நீங்கள் அசைவமாயிற்றே... என்றபடி வியப்பாக, நோ! நான் இப்போது சைவத்திற்கு மாறிவிட்டேன்! என்ற சிரித்தபடி மதுமதி பக்கம் வந்தான்.

அவன் தனக்காக அப்படி சைவச் சாப்பாடு சாப்பிடுகிறான் என்பது மதுமதிக்கு உரைத்ததும் உள்ளுக்குள் குஷியானாள் அவள். அப்படி கடுரமாய் இருந்தவன் இவ்வளவு சீக்கிரம் தன் அழகில் மயங்கி விடுவான் என்பது அவள் நினைத்துப் பாராத ஒன்று.

மேலும் பார்ட்டிக்கு வந்ததில் இருந்து அவனது நடவடிக்கைகளை கவனித்தவள் அதை யூகித்திருந்தாள். அவள் நினைத்த மாதிரியே அவன் வேறு யாருடனோ, என்னவோ பேசிக் கொண்டிருந்தாலும், அவனது முகம் அடிக்கடி அவளை நோக்கித்திரும்பியது. திருட்டுப் பார்வை பார்த்தது.

அதே சமயம் அவள்தான் தன் பார்வையை சந்திக்கும் போது வேண்டுமென்றே தன் பார்வையை விலக்கிக் கொள்வாள். எல்லாம் அன்பு அக்கா சிங்காரி கற்றுக் கொடுத்த பாடம். பழிவாங்க அவனை வளைத்து காதல் வலையில் சிக்க வைக்க வேண்டும். அதற்காக வலியப் போய்விடாதே.



வலியப் போனால் எல்லா ஆண்களுக்கும் இளக்காரமாகத்தான் போய்விடும!

ஆனால் மகேந்திரனின் நிலையோ வேறு மாதிரியாகத்தான்இருந்தது. அவன் அவள் மீது ஏதோ மயக்கம் கொண்டவன் போலவே அவளைப் பின்தொடர்ந்தான்.

சாப்பிட்டு முடிந்ததும் ஹோட்டலுக்குப் பின் உள்ள ரூஃப் கார்டனுக்கு அவளை அழைத்துச் சென்றான்.

ரூஃப் கார்டனில் குளிர்ச்சியான மரங்கள், புல்வெளிகள், உட்காருவதற்கு வசதியான மர இருக்கைகள் இருந்தன.


அங்கிருந்த இருக்கை ஒன்றில் இருவரும் அமர்ந்தனர். அவன் ஏதோ முக்கியமான விஷயம் பேசவே தன்னை கூட்டி வந்திருக்கிறான் என்பது மதுமதிக்குப் புரிந்தது. இருந்தும் எதையும் வெளிக்காட்டாமல் ஹோட்டலை வியப்புடன் பார்ப்து போல் எல்லாவற்றையும் அதிசயமாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் அப்படி வியப்புடன் பார்ப்பதை ரசித்துப் பார்த்தவன், என்ன ஹோட்டல் எப்படி இருக்கிறது? பிடித்திருக்கிறதா? என்றான்.

ம்ம்ம்... பிடித்திருக்கிறது. நன்றாக கட்டியிருக்கிறார்கள்...! என்றாள் மதுமதி உதடுகள் முழுவதும் புன்னகையை வழிய விட்டவாறு.

மகேந்திரன் அவளது இதழ் விரியும் அந்த முத்துப் பல்சிரிப்பை, அவள் நளினமான வசீகரத்தை ரசித்துப் பார்த்தவன் கடைசியில் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

மது,நான் எப்படி இரக்கிறேன்... என்னைப் பிடித்திருக்கிறதா? என்றான் மகேந்திரன்



## 4

என்னைப் பிடித்திருக்கிறதா? என மகேந்திரன் கேட்டதும் சட்டென விழிகள் விரிய திடுக்கிட்டுத்தான் போனாள் அவள்.

நிமிர்ந்து பார்த்தபோது அவன் அநவள் விழிகளையே ஊடுருவி அவள் மன ஓட்டத்தை படிக்கும் ஆராய்ச்சியில் இருந்தான்.

அவன் எதையும் கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காக வேண்டுமென்றே இமைகளை அசைத்து படபடப்பான விழிகளை அவனுக்குக் காட்டியவள்,என்ன... பன்ன...கேட்டீர்கள்? என்றாள் காதிலவே விழாதது போல்.

என்ன உனக்குப் பிடித்திருக்கிறதா?என்று கேட்டேன் என்றான் அவன் திரும்பவும்அழுத்தத்திருத்தமாய்.

மதுமதிக்கு கொஞ்சம் அதிர்ச்சிதான்.இவ்வளவு சீக்கிரத்தில் மகேந்திரன் தன்னிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அதனாலே எவ்வித உணர்ச்சியையும் காட்டதவளாய் அவனையே பார்த்தாள்.

அவள் முகக்குறிப்பை உணர்ந்தவன் போல்அவனும்பேசினான்.

பார் மதுமதி, நான் உனக்கு அறிமுகமாகி ஒரு பத்துநாள் இருக்குமா?அதற்குள் இப்படியொரு கேள்வியை உன்னிடம் கேட்பது எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. ஆனால் என்னவென்று தெரியவில்லை. உன்னைப் பார்த்த முதலே... உன் மேல் ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது...

மதுமதி பேசாமல் இருக்க அவனே தொடர்ந்தான்.

நானும் எத்தனையோ பெண்களுடன் பேசியிருக்கிறேன். பழகியிருக்கிறேன். ஆனால் அப்போதெல்லாம் ஏற்படாத ஒன்று இப்போது உன்னுடன் பேசும்போது எனக்கு ஏற்படுகிறது. இது என்னவென்று நினைக்கிறாய்?

பெரிய கேள்வியாய் ஒன்றைக் கேட்டுவிட்டு அவளையே கூர்ந்து பார்த்தான். மதுமதியோ அவன் இப்படியெல்லாம் பேசுவது,சிங்காரி சொன்னது போல் தன்னைக் காதல் வலையில் வீழ்த்த இவன் வீசும் மயக்கவார்த்தைகளாய்த்தான் இருக்கும் என நினைத்தாள் அதனாலேயே வாயைத் திறக்காமல் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் கல்லுளி மங்கினியாய் உட்கார்ந்திருந்தாள்.

ஆனால் மகேந்திரன் விடுவதாயில்லை.



மதுமதி, உன்னைத்தான் கேட்கிறேன். என் மனதில் ஏற்படுவது என்னவென்று நினைக்கிறாய்?

மதுமதி வேண்டுமென்றே உதடுகளைப் பிதுக்கினாள்.

தெரியவில்லை ஸார்... என்றாள்.

அப்படியானால் உனக்கு அப்படி எதுவும் தோன்றுகிறதா?என்றான் அவன் விடாமல்.

எனக்கு ஒன்றும் அப்படித் தோன்றவில்லையே! மடியில் கனம் இல்லாதவள் போல் பிஞ்சு விரல்களை விரித்துக் காட்டினாள் அவள்.

மகேந்திரன் அவளது படபடக்கும் விழிகளையே உற்றுப் பார்த்தவன் குரலையும் தாழ்த்திக் கொண்டான்.

இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது... என்றான்.

என்ன ஸார்?

முதலில் இந்த ஸார் மோரையெல்லாம் விடு. நான் ஒன்றும் உன்னிடம் முதலாளி தொழிலாளி போல் பழகவில்லை.

சரி... சொல்லுங்கள்..

நான் பார்த்த பெண்களில் உன் போன்ற அழகியைக் கண்டதில்லை. அப்படியொரு பேரழகு உனக்கு....

அப்படியா?

குரலில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் பேசினாள் மதுமதி. தலையில் ஐஸ் கட்டிகளை அல்ல ஐஸ் மலையையே தூக்கி வைக்கப் பார்க்கிறான்.இதுதான் இவனது வசிகர டெக்னிக் போலும்.வேறு வழியில்லை மயங்குவது போல் நாமும் நடிக்க வேண்டியதுதான்!

உள்ளுக்குள் நினைத்தவள் அவன் சொல்வதைமிகவும் ரசிப்பது போல் இமைகளை அசைத்து விழிகளில் படபடப்புக் காட்டினாள்.

மகேந்திரன் விலில்லை.

உன் கூந்தலையும் அழகாக நீ நாணி வெட்கப்படும் அழகையும் பார்த்தால் சங்க காலப் பாடலான குறுந்தொகையில் வரும் வர்ணனை ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகிறது...

வர்ணனையா?

ஆம்.. அதாவது.. கார் கூந்தர் நிலம் தொடும், கண் மலர்கள் ஜாடை காட்டும். தலைவிக்கு ஏக்கம்.கூடவே கட்டான மேனியாளை கண்ணாலே அணைத்து கலந்துரையாட தலைவன்கும் பெரும் ஏக்கம். பொல்லாத மன்மதனின் பிடியில் தங்களை மறந்தனர் இவரும்! அவன் சொல்லி பொருள்பட விளக்கியபோது அவள் முகம் சிவந்தவள் போல் வேண்டுமென்றே தலையைக் குனிய வைத்துக் கொண்டாள்.

இப்படி பாராட்டினால்... குமுட்டை போல் பெண்கள் உச்சி குளிர்ந்து விடுவார்கள் என எவ்வளவுலேசாய் எடை போட்டு வைத்திருக்கிறான் என வியந்தாள் அவள்!

நிமிர்ந்து அவனை நேருக்கு நேர் பார்த்தபோது.. பேச்சு மட்டுமல்ல... மகேந்திரன் ஆளும் எதிராளியை மயங்க வைக்கும் பர்ஸனாலிட்டி தான் என்பது புரிந்தது.

அந்த நெடுநெட உயரம், சற்றே ஏறித் தாழ்ந்த பரந்த நெற்றி. ஊசியாய் துளைக்கும் கறுப்பு கருவிழிகள், கூர்மையான மூக்கு, அடர்ந்த மீசைக்கு கீழே இறுக்கமான உதடுகளில் அவ்வப்போது உதிக்கும் அதிசய வசீகரப் புன்னகை, ஆஜானுபாகுவான தோள்களுடன் கம்பீரமாகத் தெரியும் உடல்வாகு... இன்னும்

யோசித்தபடியே அவனைப் பார்த்தவள் இப்படி பணமும் கம்பீரமும் ஒருசேர கிடைக்கும் இவன் முன் நாம் எம்மாத்திரம்? எனவும் நினைத்தாள்.

அப்படி கம்பீரமாக இருப்பவன் தன்னிடம் காணாததைக் கண்டது போல் வலிய வந்து வழிகிறான் என்றால் என்ன அர்த்தம்? என்ற நினைப்பும் ஓடியது.

வேறென்ன அர்த்தம் இருக்கக் கூடும்? எல்லா பெண்களையும் போல் அவளையும் மயக்கி அவனது காதல் வலையில் விழ வைக்கத்தானே? அவனதுஆசை வார்த்தைகளில் மற்ற பெண்கள் மயங்கியது போல் தானும் மயங்கி விடுவேன் என்றதானே உருக உருகப் பேசுகிறான்?



இப்போது என்ன செய்வது.

இவனது ஆசை வார்த்தைகளை நம்பி காதல் வந்தது போல் நடிப்பதா?அல்லது அந்தக் காதலை உணராதது போல் இன்னும் கொஞ்ச நாள் நடிப்பதா?

மதுமதிடி யோசனையில் இருந்தவள் அவன் கேள்வியின் உலுக்கலிலே நினைவுக்கு வந்தாள்.

என்ன திடீரென... மௌனமாகி விட்டாய்?என்றான் அவன்.

அ... அது... ஒன்றுமில்லை... ஸார்... நீங்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை.... என்றாள் பீடிகையுடன்.

என்ன நம்ப முடியவில்லையா? உலக மகா ரதி போல இருக்கும் உன் அழகை இளமும் நீ கண்ணாடியில் பார்ப்பதுண்டா... இல்லையா?

தலையில் மறுபடியும் பெரிய ஐஸ் மலையைத்தூக்கி வைப்பதை உணர்ந்தவள், ஐயோ! இதென்ன பெரிய பெரிய வார்த்தைகள்? நான் அப்படி ஒன்றும் உலக அழகி இல்லை. எளிமையான அழகுதான்ள என்றாள் தன்னடக்கம் தொனிக்க.

ஆனால் அவன் அதற்கும்,இதுதான்.... இதுதான் பிடித்திருக்கிறது என்றான்.

அவள் புரியாமல் திகைக்கவும் அதற்கும் விளக்கம் கொடுத்தான் மகேந்திரன்.

மது, சில பெண்களிடம் அழகு இருக்கும். கூடவே அந்த ஆபத்தான அலட்டல், திமிர் எல்லாமுமாக ஒளிந்திருக்கும். அப்படிப்பட்ட பெண்களை எந்த ஆணும் விரும்புவதில்லை. உன் போன்ற அடக்கமான பெண் சுபாவம் என்னை மட்டுமல்ல... யார் மனதையும் கவர்ந்து விடும், தெரியுமா?

மகேந்திரன் பேசப் பேச.... நம்மை வலையில் வீழ்த்தத்தான் இப்படியெல்லாம் இவன் உருகுகிறானா? என்று நினைத்தாள்.

அன்றைய பொழுது ஒருவாறு அப்படியே பேச்சுடனே கழிந்து விட மதுமதி வீடு திரும்பி விட்டாள். வீட்டில் வழக்கம் போல் அவளது காதல் கதையைக் கேட்க சிங்காரி ஆவலாய் காத்திருந்தாள்.

மதுமதி காலையில் நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள். நான் உலக மகாரதியாம். இதுவரை யாரிடமும் யார் அழகையும்கண்டு அவர் சலனப்பட்டது இல்லையாம். முதல் முறையாய் அவருக்கு என்னைப் பிடித்திருக்கிறதாம். இப்படி அசடு வழிவது போல் என்னென்னவோ பிதற்றினாரக்கா... என்று மதுமதி சொல்ல, சிங்காரி சிரித்தபடி அதை ஆமோதிக்கத்தான் செய்தாள்.

எல்லாம் வெறும் பசப்பு வார்த்தைகள் மது. நம் மாதிரி பெண்கள் கூமுட்டைகளாய் இதுபோன்ற அழகு வார்த்தைகளில் மயங்கி விடுவதை, அவனைப் போன்ற திமிர் பிடித்த ஆண் வர்க்கம் நன்றாகவே புரிந்துகொண்டிருக்கிறது. அதனாலே தான் ஒரு கட்டி ஐஸ் மலைகளை நம் தலையில் வைத்து இறங்க வைக்கிறது. இந்த வார்த்தைகள் அனைத்தையும் ஒன்று விடாமல் என்னிடம் பேசித்தான் மகேந்திரன் என்னை தன் காதல் வலையில் வீழ்த்தினார் என்றால் நீ நம்புவாயா?

சிங்காரி சொல்ல மதுமதி திடுக்கிட்டுத்தாள், அப்படியா என்ன ஒரு கபட நாடகம்? என்றபடி பற்களைக் கடித்தாள்.

அதன் பின் சிங்காரி இனி அவன் அலுவலகத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை விவரித்தாள். நீ அவனது காதல் பேச்சிற்கு எவ்வித பதிலும் சொல்லாமல் புன்னகையுடனே நடமாடு. இன்னும் கொஞ்சநாள் கழித்தே அவனது காதலை ஏற்றுக்கொள்வது போல் நடிக்கவேண்டும். புரிகிறதா மது? சிங்காரி சொல்ல மதுமதி பலமாய் தலையாட்டினாள்.

மறுநாள் வழக்கம் போல் மதுமதி அலுவலகம் சென்றாள். அலுவலக வேலையிலும் அவள் மகுந்த கெட்டிக்காரியாக இருந்தாள். முதல் ஒரு வாரம் கம்பெனி நடப்பு நிர்வாகம் பற்றிய பயிற்சியை முடித்துவிட்டு மகேந்திரனின் செகரட்டரியாக முழுமையாக மாறியிருந்தாள். மகேந்திரனின் தனிப்பட்ட பொறுப்புகள் அவள் தினம் பார்க்க வேண்டிய பைல்கள், பேங்குகளின் தினசரி உற்பத்தி மற்றும் விற்பனைக் கணக்குகள் என எல்லாவற்றையும் செவ்வனே செய்வதோடு மட்டுமல்லாமல் அவளுக்கு அவைகள் பல நாட்கள் செய்து வந்தது போல் மனப்பாடமாகவும் அமைந்திட்டன.

மதுமதி அப்படி வேகமாய்க் கற்றுக் கொண்டு வேகமாய் செயல்படும் திறமையைக் கண்டு மகேந்திரனே அடிக்கடி வியந்துப் போனான்.



அதற்காக அவளைத் தேடி வந்துஉச்சி குளிர பாராட்டும் போது அவளுக்கும் இனிமையாகத்தான் இருக்கும்.

ஆனாலும், என்னதான் இவன் உருக உருக இனிமையாய் பேசினாலும், உள்ளுக்குள் இவன் அக்கா சிங்காரியை ஏமாற்றியவன்தானே? என்ற எண்ணம்தான் ஓடும்.

அதனாலே அவன் புகழ்ந்து உச்சி குளிர பேசும்போது... இந்தப் பசப்பு வார்த்தைகள்... தன்னை மயக்கத்தானே! என எண்ணி சிணமாவாள்.


சில நேரங்களில் அவனது பேச்சையும் செயலையும் பார்க்கும்போது மகேந்திரன் ரொம்ப நல்லவனாகவும் அவளுக்குத் தெரிவான். இவனா அக்காவை ஏமாற்றியவன்? என்ற சந்தேகம் கூட அவள் மனதில் எழும்.

அப்போதெல்லாம், மயங்கி விடாதே மதுமதி. இவன் இதேபோல்தான் உன் அக்காவிடம் நயமாகப் பேசி காதல் வலையில் விழ வைத்து பின் வஞ்சித்தவன். உன்னையும் அதேபோல் வசிகரம் செய்யப் பார்க்கிறான். வலையில் விழுந்து விடாதே! என உள்ளுக்குள் எச்சரிக்கை குரல் ஒன்று கேட்டதும் சுதாரித்துக் கொள்வாள் மதுமதி.

அதனாலே அவன் மீது எப்போதும வெறுப்பும் பழிவாங்கும் எண்ணமும் இருக்கும்படி பார்த்து தன் மனசலனத்தையும் பாதுகாத்துக் கொண்டாள் அவள்.



## 5



மதுமதியை மேலும் சோதனைப் படுத்தும் விதமாக அடுத்த வாரம் அமைந்தது. அன்று முதல் நாளே மகேந்திரன் அவளை அழைத்தவன், ஒரு இரண்டு நாள் அலுவலக விஷயமாய் கொடைக்கானல் செல்ல வேண்டியிருக்கிறது. வருகிறாயா? என்றான்.

ஒரு கணம் மதுமதி துணுக்குற்றுத்தாள் அவனைப் பார்த்தாள், எவ்வளவு எளிதாய் வேலை பார்க்கும் ஒருவளை கட்டின

பெண்டாட்டியைக் கூப்பிடுவது போல் வருகிறாயா? என்றான். என்ன ஒரு நெஞ்சழுத்தம்! பணக்கார் தமிர்! என்றே நினைத்தாள்.

மது... உன்னைத்தான் கேட்கிறேன். என்ன வருகிறாயா? என அவன் திரும்பியும் கேட்டதும் தான் உணர்வுக்கு வந்தவளாய், யோசித்துச் சொல்கிறேன்... என்றாள் அவசரமாய்.

அடுத்த அரை மணி நேரம் கழித்து யாருக்கும் தெரியாமல் செங்காரிக்கு போன் செய்து விபரம் சொன்னாள். செங்காரியோ உற்சாகமாய்ப் பேசினாள். மது, நீ பயப்பட வேண்டாம். உன்னைப் பார்த்துக் கொள்ள உனக்கு நன்றாகவே தெரியும். நீ தைரியமாக அவனுடன் சென்று விட்டு வா! என அவளுக்கு உறுதியைக் கூட்டினாள்.

செங்காரி தந்த தைரியத்தில் மறுநாள் மதுமதி மகேந்திரனுடன் காரில் கிளம்பிவிட்டாள். அவன் காரில் ஏறும் போதே விழிகளை விரித்துப் பார்த்தவன், இந்த உடையில் மிக அழகாக இருக்கிறாய். அதிலும் உனதுஅந்த பூவிதழ் சிரிப்பு தேவதைகளை நினைவுப்படுத்துகிறது.. என்ற போது மதுமதி மேலும் சிரித்தவள் அடக்க சிரமப்பட்டாள்.

நாம் போவது கொடைக்கானல். குளிர் பிரதேசம். அதை மறந்து விடாதீர்கள்... என்றாள் சிரிப்பினூடே.

அவள் சொல்ல வருவதைப் புரிந்து கொண்டு அவனும் சிரித்தான்.

மதுமதி, நான் நிஜமாகத்தான்சொல்கிறேன். உனது அபரித அபார அழகு ஒவ்வொரு நொடியும் என்னை பிரமிக்க வைக்கிறது.... என்றான்.

மதுமதி இந்த ஐஸ் வைக்கும் அழகுப் பேச்சை முற்றிலும் தவிர்க்க நினைத்தவள், ஸார்... அப்புறம் கொடைக்கானலில் யாரையெல்லாம் சந்திக்க வேண்டும்... கம்பெனி விஷயமாக என்னவெல்லாம் செய்ய வேண்டும்... என்பதை விளக்குகிறீர்களா? என்றாள் மிகுந்த அக்கறையுடன்.

அவள் அலுவலக விஷயமாய் கேட்டதும் மகேந்திரனின் மூளை மறுகணமே சீரியஸாகி விட்டது.

நெற்றியைத் தேய்த்து யோசித்தவன், நல்லவேளை கேட்டாய். நாம் கொடைக்கானலில் செய்ய வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது. அது பெரும் ரகசியங்களும்கூட.... என்றான்.

மதுமதிக்கு வியப்பு மேலோங்கியது.



பெரும் ரகசியங்களா?

ஆமாம்... நான் செய்யும் பேரிங்கு உற்பத்தியின் உண்மையான மூலக் காரணம் இங்குதான் இருக்கிறது.

அவன் பேரிங்கு பற்றிச் சொல்லச்சொல்ல அவள் ஆவல் அதிகமானது. இருந்தும் தனது ஆர்வத்தை அவன் கவனித்து விடாதபடியே பேச்சுக் கொடுத்தாள்.

நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே... என்றாள் முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு. அவளது நடிப்பை உணராமல் அவன் சீரியஸாக விளக்க ஆரம்பித்தான்.

மது, எனது தொழிலின் வெற்றி ரகசியமே நான் விற்பனை செய்யும் பேரிங்குகளின் வடிவமைப்பில்தான் இருக்கிறது. இப்படி ஒரு சரியான வடிவப்பை அந்த பேரிங்குகளுக்கு கொண்டுவர நான் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? இரவு பகலாய் விழித்திருந்து கஷ்டப்பட்டு இந்த செய்முறையைக் கண்டுபிடித்தேன். இந்த செய்முறையைக் கண்டுபிடித்ததும் உடனே உற்பத்தியைத் தொடங்க என்னிடம் பணம் கூட போதமானதாய் இல்லை. அப்டபோது எனக்கு உதவியாய் இருந்தவர்தான் தொழிலதிபர் ஜான்சன். அவரது உதவி இல்லாமல் நிச்சயமாய் நான் இவ்வளவு பெரிய இடத்திற்கு வந்திருக்க முடியாது.

மகேந்திரன் சொல்லச் சொல்ல அதிசயமாய்க் கேட்ட மதுமதி, அப்படியா?இப்போது அவர் எங்கு இருக்கிறார்? என்றாள்.

அவர் இங்குதான் கொடைக்கானலில் இருக்கிறார். நிறைய தேயிலைக் தோட்டங்கள் அவருக்கு இருக்கின்றன. நான் இந்தப் பயணம் மேற்கொள்வதே அவரைச் சந்திக்கத்தான். அவரிடம் இந்த பேரிங்கு செய்முறை ரகசியங்களை வாங்க வேண்டியிருக்கிறது...

அவன் சொன்னதைக் கேட்டு மனதுள் பரபரப்பு கூட ஆவலானாள் மதுமதி.

அது... என்ன ரகசியங்கள்? என்றாள் குரலில் படபடப்பைக் காட்டாமல்.

மது, நான் சொன்னேனே பேரிங்குகள் வடிவமைப்பு பற்றிய குறிப்புகள்... அப்படி நான் கண்டுபிடித்த குறிப்புகளை எல்லாம் எனது நண்பரான இந்த ஜான்சனிடம்தான் பத்திரமாக கொடுத்து பாதுகாக்கச்

சொல்லியிருக்கிறேன். அவைகளைத் தான் இப்போது திரும்பவும் வாங்கிச் செல்ல வந்திருக்கிறேன்..

வாங்கிச் செல்லவா? என்ன சொல்கிறீர்கள்?

ஆமாம் அது. இப்போது புதியதாக ஒரு தொழில் தொடங்க நான் திட்டமிட்டிருக்கிறேன். அதற்கு எனக்கு நிறைய பணம் தேவைப்படுகிறது. எனக்குத் தெரிந்த இன்னொரு நண்பர் மூலம் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு அந்த ரகசியத்தின் பாதி செய்முறை விளக்கங்களை விற்க நினைத்து இருக்கிறேன். இதன் மூலம் எனக்குத் தேவையான பணம் கிடைத்து விடும். நானும் புதிய தொழில் தொடங்கி விடலாம்...

மதுமதிக்கு பழம் நழுவி பாலில் விழுவது போலிருந்தாலும் அவளுள் சந்தேகங்கள் தோன்ற உடனே வெளிப்படுத்தினாள் அவள்.

சரி... நீங்கள் இப்படி விற்பதால் இன்னொரு வகையில் உங்களுக்கு பாதிப்பு ஏற்படலாமே? என்றாள்.

எப்படி... எப்படிச் சொல்கிறாய்?

அந்த வெளிநாட்டுக் கம்பெனி போட்டியாக பேரிங்குகளை உங்கள் பார்முலாவை வைத்து உற்பத்தி செய்து சந்தையில் அறிமுகப்படுத்தி விட்டால்... அது பாதிப்பாகி விடுமே?

மதுமதி சீரியஸாகக் கேட்டதற்கு கடகடவென சிரித்தான் மகேந்திரன்.

நிச்சயம் அதற்கு வாய்ப்பில்லை..... மது. ஏனென்றால் நான் சொல்லும் வெளிநாட்டுக் கம்பெனி ஜெர்மனியில் இருக்கிறது. அந்த ஜெர்மன் கம்பெனி அவர்கள் நாட்டுச் சந்தையில் என் பேரிங்கு வடிவமைப்பை அறிமுகப்படுத்தத்தான் நம் செய்முறை விளக்கத்தைக் கேட்கிறார்கள். சொல்லப் போனால்... நம் ஊர் வியாபாரத்தை விட பல கோடிகள் மதிப்பு உள்ளது அவர்களது வெளியுலக மார்க்கெட். அதனால நமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது....

மகேந்திரன் நீளமாய் பேசி விளக்கியவுடன் புரிந்தவளாய் அமைதியாகி விட்டாள் மதுமதி.

ஆனால் அவள் மனதுள் புதுவிதமான பரபரப்பு தொற்றிக் கொண்டது. மகேந்திரன் சொல்லும் ரகசியங்கள் தான் அவளுக்கு [illegible] சந்தர்ப்பம் அபூர்வமாகவும் அவளுக்குக்



கிடைத்திருக்கிறது. இதைச் சரியாகப் பயன்படுத்தி அவனுக்குத் தெரியாமல் அந்த ரகசிய பார்முலா குறிப்புகளை எப்படியாவது பிரதி எடுத்து விட்டால்போதும்.

அத்தோடு அதை அப்படியே சிங்காரியிடம் கொண்டு போய் கொடுத்து விட்டால் அவள் வேலையும் முடிந்தது. பின் இந்த வேலையை விட்டுவிட்டு சிங்காரி சொல்லும் வேறு ஏதாவது கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்துவிடலாம்.

மனதிற்குள் வேகமாகக் கணக்குப் போட்டவள் யாரோ தன் தலையை மெல்ல வருடுவதைக் கண்டு திடுக்கிட்டு உணர்வுக்கு வந்தாள்.

நிமிர்ந்து பார்த்தால்.... மகேந்திரன்தான் அப்படிச் செய்து கொண்டிருந்தான். இந்த சின்ன அழகான தலைக்குள் அப்படி என்ன அபார சிந்தனை செய்து கொண்டிருக்கிறாய்? என்றான் சிரிப்பு மாறாமல்.

அ... அது... அது.. ஒன்றுமில்லை. எப்போதும் தொழில், அலுவலகம் பற்றியே நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்களே.. என நினைத்தேன்.... ஒருவாறு அவள் சமாளித்து சிரிக்கவும் செய்தாள்.

அவள் சிரிப்பை நம்பியவன், ஓ.... அதைச் சொல்கிறாயா....? என் மூளை எப்பவும் பிசினஸ் மூளைதான். சதா அது பற்றியே யோசித்துக் கொண்டிருக்கும். சரி, விடு.. வேறு ஏதாவது பேசலாம்... என்ன பேசலாம்? நீயே சொல்.... உன் அழகைப்பற்றி பேசலாமா?என்றான்.

அட, மறுபடி ஆரம்பித்து விட்டீர்களா...? சரிதான்! அவள் இதழ்கள் விரித்து முத்துப் பற்கள் தெரிய அழகாக சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் மயங்கி ஒரு கணம் ரசித்தவன், அவள் பக்கம் திரும்பி, இதோ பார் மது, உன்னிடம் நேரிடையாக மறைமுகமாக எல்லாம் சொல்லிப் பார்த்து விட்டேன். இன்னமும் எவ்வித பதிலும் சொல்லாமல் நீ இருந்தால் எப்படி? என்றான்.

அவன் எந்த விஷயத்திற்கு வருகிறான் என்பது புரிந்தாலும் புரியாதது போல் முகத்தை வைத்துக்கொண்டு, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்றாள்.

நான் சொல்வது உனக்குப் புரியவில்லை?

புரியவில்லையே...!

நிஜமாக.. உன்னால் தெரிந்து கொள்ள முடியவில்லையா?

மறுபடியும் ஆதங்கமாய் அவன்கேட்க அவனையே ஒரு கணம் உற்றுப் பார்த்தாள்.

பதிலுக்கு கண்கள் விரிய பார்த்தவளை அவனும் பார்த்தான்.

மதுமதியோ, என்ன செய்வது.. எப்படி இவனை சமாளிப்பது? என நினைத்துக் கொண்டிருக்க.... மகேந்திரனோ அவள் கண்களையே நெக்கமாமய்ப் பார்த்தவன் வேறுவித முடிவிற்கு வந்தான்.

மது... எனக்குப் புரிந்து விட்டது. நான் தான் மடையன். இதையெல்லாம் சினிமாவைப் போல் வார்த்தைகளிலா... சொல்லிக் கொண்டிருப்பார்கள்? இதோ... உன் கண்கள் எவ்வளவு அழகாக என்னுடன் பேசுகிறது! என்னை உனமாற விரும்பும் விஷயத்தை. நாம் காதலில் விழுந்து விட்ட விஷயத்தை எவ்வளவு அழகாய் ஒரே பார்வையில் உணர்த்துகிறது? நான் ஒரு முட்டாள்தான். மௌனம் சம்மதம் என்பதைக் கூட அறியாமல் உன்னிடம் கேள்விகளை கேட்டுக் கொண்டிருக்கிறேனே?

என மகேந்திரன் சொல்லவும் உள்ளுக்குள் அவன் மடமையை நினைத்து பரிகசித்தவாறு மதுமதி சிரித்தாள்.

என்ன... ஒரு நினைப்பு இவனுக்கு! இவனுக்கு காதல் வந்து விட்டால், காதலிக்க ஆரம்பித்து விட்டால் அதற்காக நாமும் தொபுக்கடீர் என காதல் கடலில் விழுந்து இவனைக் காதலிக்க ஆரம்பித்து விடணுமா?

அவளுக்கென்று.... ஒரு மனம், ஒரு மூளை இருக்கிறது. அதை வைத்து அவள் தெளிவாய் சிந்திப்பாள் முடிவெடுப்பாள்.

எல்லாவற்றையும் விட இப்போது அவள் செய்வது... அவனைப் பார்த்து இளிப்பது எல்லாம் நடிப்புதானே! அந்த நடிப்பிற்கே இந்தக் கிறங்கு கிறங்கி... காதல் வசனங்களை தலைகீழாய் பிதற்றுகிறானே!

யோசித்த மதுமதிக்கு இன்னொரு விஷயமும் ஞாபகத்திற்கு வந்து உரைத்தது.

இவன் காதல் நினைப்பில் இருக்கிறான். நாம் எவ்வித பதிலும் சொல்லவேண்டாம். இவனை இதே நினைப்பில் வைத்துக் கொள்வோம். அப்போது தான் இவனது கவனத்தை திசை திருப்பி அந்த பேரிங்குகளின் செய்முறை ரகசியங்களைப் பிரதி எடுக்க முடியும்...!



மனதில் நினைத்து முடிவு செய்தவள் அதன்படியே நடக்க ஆரம்பித்தாள்.

அவன் சொன்னதற்கெல்லாம் சிரித்தாள்.

அவன்போதாதென்று உன் அபார அழகைப் பார்த்ததும் முன்பு படித்த திருக்குறள் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகிறது. மலர்காணின் மையாத்தி நெஞ்சே.. இவள் கண் பலர் காணும் பூவொக்கும் என்று... சொன்னவன் அவள் திகைக்க அதற்கு விளக்கமும் கொடுத்தான்.

மலர் போன்ற கண்கள் தான் இவளுக்கு.... ஆனால் மலரை எல்லோரும் பார்ப்பார்களே என்பததான் என் மனக் கவலை! அதுபோல உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அழகான உன்னை நான் பார்த்தது போல் பார்த்து.. யாரும் கொத்திக் கொண்டு போய் விடுவார்களோ... என்கிற பெரும் கவலைதான் எப்போதும் எனக்கு ஏற்படுகிறது.

அவள் அவனது பேச்சைக் கேட்டு அடக்க முடியாமல் சிரித்து விட்டு நிறுத்தினாள். அப்படி யாரும் கொத்திக் கொண்டு செல்வதற்கு நான் ஒன்றும் மீன் இல்லை...! என்றாள்.

அதற்கு அவனும் விடாமல் நீ... மீனோ... இல்லையோ ஆனால்.... உன்னைச் சுற்றி வரும் என் போன்ற ஆட்களில் மன்மத கொக்குகள் நிறைய பேர் இருக்கிறோமே...! என்றான் சிரிப்பலை பொங்க.

அவள் அதற்கும் விழுந்து விழுந்து சிரித்தாள். அத்தோடு நிறுத்திக் கொண்டாள். அவள் மேற்கொண்டு ஏதாவது பேசுவாள் என எதிர்பார்த்தவன் ஏமாந்து போனாலும்.... மௌனம் சம்மதம்தான் என தனக்குத்தானே எடுத்துக் கொண்டு உற்சாகமானான்.


அந்த உற்சாகத்திலேயே ஓரிரு முறை அவன் உரிமையோடு கைகளைப் பிடித்து விரல்களைக் கோர்த்துக் கொண்டபோதும் அனுமதித்தாள்.அவள் உள் மனம் முழுவதும் அந்த ரகசியத்தைக் கைப்பற்றுவதிலேயே விழிப்பாய் இருந்தது.

ஆயிற்று. ஒரு வழியாய் கொடைக்கானலில் மகேந்திரன் அந்த தொழிலதிபர் ஜான்சனை சந்தித்து அந்தப் பேரிங்குகளின் செய்முறை ரகசிய குறிப்புகளையும் வாங்கியாயிற்று.

ஆரியக் கூத்தாடினாலும் கொண்டிருக்கும் காரியத்திலேயே கண்ணாயிருப்பவளாய் மகேந்திரன் வெளியே சென்றிருக்கும் சமயம் பார்த்து அந்தரகசிய குறிப்புகளை அவன் பெட்டியில் இருந்து எடுத்தாள்.

ரூமிற்கு பக்கத்தில் இருந்த ஜெராக்ஸ் கடை ஒன்றில் பூனை போல் பதுங்கிச் சென்றவள் அவசரஅவசரமாய் பிரதிகளையெடுத்தாள். ஒரிஜினல் குறிப்புகளை முன்பு போல் மகேந்திரனின் பெட்டியில் எடுத்தது போல் வைத்துவிட்டு ஜெராக்ஸ் பிரதிகளை தனது பெட்டியில் வைத்து பத்திரப்படுத்தினாள்.

இதனால் தான் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்பதை அவள் அப்போது கொஞ்சமும் உணரவில்லை.



## 6

மதுமதி எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மறுநாள் வேலை எல்லாம் முடிந்து ஊருக்கு கிளம்பிய மகேந்திரனுடன் அப்பாவி போல் அவளும் கிளம்பினாள்.

மகேந்திரன் வேலை நினைத்தபடியே முடிந்து விட்ட சந்தோஷத்தில் வழிநெடுக அவளிடம் உற்சாகமாகவே பேசிக்கொண்டு வந்தான். அவளுக்கு அக்கா ஆசைப்பட்ட விஷயத்தை வெற்றிகரமாய்ச் சாதித்து விட்டோம் என்கிற சந்தோஷம்தான். அதனாலே அவளும் அவன் பேச்சுக்கு பதில் பேச்சாய் இனிக்க இனிக்கவே பேசினாள்.

இடையிடையே அவளது பார்வை பின்புறம் இருந்த அவளது சூட்கேஸை நோக்கி நகர்ந்து கண்காணித்துக் கொண்டது.

அதில்தான் அந்த பேரிங்கு ரகசியங்களின் ஜெராக்ஸ் பிரதிகள் பத்திரமாக இருக்கின்றன. அது நாளை சிங்காரியின் கைக்குப் போய் அவன் மூலம் டூப்ளிகேட் செய்யும் வியாபாரிகளுக்குப் போய்விடும். பின்... இந்த மகேந்திரனின் கதை... அவ்வளவுதான்!

பெரும் பணக்காரன் என்ற திமிரில் அலையும் இவனும், இவனது சாம்ராஜ்யமும் ஒரே நாளில் ஆட்டம் கண்டுவிடும்!



என்ன செய்வதென்று... திகைப்பான். தவிப்பான், அப்படித் தேடி விழுந்தால்தான்... இவனைப் போன்ற ஆட்களுக்கு புத்தியும் வரும்.

அப்போதுதான்.. தவறுகளை உணருவான். செய்த குற்றங்களுக்காக வருந்துவான்.

கடைசியில் சிங்காரியின் நினைப்புப்படியே... அவளைத் தேடி வருவான்.

தன்னை மணக்கும்படிக் கேட்டு.... அவரளை ஏற்று கொள்ளவும் செய்வான்.

ரொம்ப... நன்றி... மது... உன்னால்தான் எல்லாம் நடந்தது. என் மதுவென்றால்... மதுதான்! என கட்டிப் பிடித்து ஆனந்தமாய் நம்மைக் கொஞ்சவும் கூடச் செய்வாள்.

அதுபோதும்...

சிங்காரியின் வாழ்வில் தன்னால் இப்படியொரு சந்தோஷம் கிடைக்கும் என்றால்... அது நமக்கு கிடைத்த பாக்யம்தான்... பெரும் கொடுப்பினைதான்!

பலவாறாக... நடக்கப் போகும் காட்சிகளை மனதுள் ஓடவிட்டு மகிழ்ந்து கொண்டிருந்த மதுமதி உணர்வுக்கு வந்தாள். கார்... ஊரை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

அவள் கேட்டுக் கொண்டிருக்கிறாளா.... இல்லையா? என்ற உணர்வே இன்றி... மகேந்திரன் அவன் பாட்டுக்கு அலுவலக விஷயங்களை கதை போல் ஒன்று விடாமல் இன்னமும் சொல்லிக் கொண்டிருந்தான். ஒரு வழியாய் ஊர் வந்ததும் அவனிடம் விடைபெற்று வீடு வந்து சேர்ந்தாள் மதுமதி.

அங்கு வீட்டில் அவளுக்காக தயாராய் குட்டிப் போட்ட பூனை போல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள் சிங்காரி. உள்ளே மதுமதி நுழைந்ததும் ஓடி வந்து அப்படியே கட்டிக் கொண்டாள் அவள்.

முதல்வேலையாய் அவளிடம் அந்த ரகசிய செய்முறை பிரதிகளை எடுத்து நீட்டினாள் மதுமதி. கண்கள் விரியும் ஆச்சரியமாய் அவைகளை வாங்கினாள் சிங்காரி. படபடவென புரட்டினாள். சரி பார்த்தாள். மறுபடியும் சந்தோஷம்தாளாமல் அவளை இறுகக் கட்டியவள், சொன்னபடியே

செய்துவிட்டாய் மது. நிஜமாகவே நீ திறமைசாலிதான்... எனப் பாராட்டி உச்சி முகர்ந்தாள்.

மதுமதியும் அக்காவின் சந்தோஷத்தைக் கண்டு திக்குமுக்காடித்தான் போனாள். கூடவே, இது.. ஒன்றும் பெரிய விஷயமில்லை.ஆனால்அக்கா, இதை வைத்து உன் வாழ்க்கையை சரிப்படுத்த வேண்டும். அதுதான் முக்கியம்! என்றாள்.

நீ... கவலைப்படாதே. மது. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்... என்றாள் சிங்காரி பதிலுக்கு.

மேலும் ரகசியங்களை வாங்கிச் சரி பார்த்தவள் தாமதிக்கவில்லை. இரவு என்றும் பாராது அப்போதே அடுத்த நிமிடமே கிளம்பத் தயாரானாள்.

மதுமதி ஆச்சரியத்துடன் அவளைத் தடுத்தாள். இந்நேரம் எதற்கு? நாளை விடிந்தபின் செல்ல வேண்டியதுதானே?என்றாள்.

அதற்கு சிங்காரி பலமாய் மறுத்து தலையாட்டினாள். உனக்குத் தெரியாது மது. இனி ஒரு நிமிடம் கூட தாமிப்பது தவறு. இத்தனை நாள்இதற்காகத்தான் காத்திருந்தேன். இதை உடனடியாக மகேந்திரனின் போட்டிக் கம்பெனி நபர் ஒருவரிடம் கொடுக்க வேண்டும். அவரிடம் கொடுத்துவிட்டு நான் வந்து விடுகிறேன்...! என பிடிவாதமாய் கிளம்பிச் சென்று விட்டாள்.

மதுமதி எவ்வித உணர்வுமின்றி அவள் சென்றதும் படுத்து தூங்கியும்விட்டாள்.

மறுநாள் களைப்பு நீங்கி அவள் கண் விழித்த போது நன்குவிடிந்திருந்தது. இரவு சென்ற சிங்காரிஇன்னும்வந்தபாடில்லை.மதுமதி துணுக்குற்றவளாய் உடனடியாக தொலைபேசி ஒன்றில் சிங்காரியின் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு அவளுடன் பேசினாள்.

அவள் அதற்கு கூறிய பதிலும் மதுமதிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.அந்த எதிர் பார்ட்டியைச் சந்தித்துஜெராக்ஸ் பிரதிகளை கொடுத்து விட்டேன். இனி நீ எனக்காகக் காத்திருக்கவேண்டாம். உன் அலுவலகத்தில் மகேந்திரனிடம்என் அக்காவை ஏமாற்றியதற்கு சரியான தண்டனையை உனக்கக் கொடுத்து விட்டதாய்க் கூறு. மற்ற விஷயங்களை நான் பார்த்துக்கொள்கிறேன்! என்றபடி போனை வைத்துவிட்டாள் சிங்காரி.



மதுமதியும் அன்று குஷியாகவே அலுவலகம் கிளம்பினாள். அக்காவை காதலித்து ஏமாற்றிய அந்த வஞ்சகன் மகேந்திரனை நேருக்கு நேர் சந்தித்து எல்லாவற்றையும் கொட்டிவிட வேண்டும்.

இதோ பார்... நான்இவ்வளவு நாள் உனது செக்ரட்டரியாய் வேலை செய்தது நடிப்பு. என் அக்காதான் சிங்காரி. நீ வகையாய் காதலித்து ஏமாற்றியதற்கு உன்னைப் பழிவாங்கியாயிற்று. இனி நீ... சிங்காரியிடம் மன்னிப்புக் கேட்டு அவளை ஏற்றுக்கொள்...! என்று சொல்ல வேண்டும்.

முடிவெடுத்தவளாய் மதுமதி கிளம்பினாள். அலுவலகத்தில் நுழைந்து தன் சீட்டில் உட்கார்ந்தவள் ஆவலாய் மகேந்திரனின் வருகைக்காக காத்திருந்தாள்.

அவளை சோதிப்பதுபோல் அன்று மகேந்திரன் வழக்கமான பத்து மணிக்கு ஆஜராகி விடுகிறவன் வராமல் இருக்க... எதிலும் லயிப்பில்லாமல் எந்த வேலையும் ஓடாதவளாய் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வரட்டும் அவன்! இன்று... எல்லா விஷயங்களையும் சொல்லி... அவனுக்கு சரியான பாடத்தைப் புகட்டுவோம்...! முத்துப் பற்கள் கடிபட தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தவள் சட்டென உணர்வுக்கு வந்தாள்.

வெளியே காரிலிருந்து இறங்கி விறுவிறுவென உள்ளே வந்து கொண்டிருந்தான் மகேந்திரன்.

டக்கென எழுந்து விரைப்புடன் நின்று கொண்டாள் அவள். உள்ளே ரூமில் புன்னகையுடன் நுழைந்து குட்மார்னிங்! என உற்சாகமாய் மகேந்திரன் சொல்ல, பதிலுக்கு மௌனமாய் முறைத்தாள்.

சிறிது நேரத்தில் அதே வேகத்துடன் அவனிடம்விஷயம் முழுவதையும் கொட்டிய போது பேயறைந்தது போல் ஸ்தம்பித்து விட்டான் மகேந்திரன். முட்டாள்! ஏமாந்தது... நீதான்! என்று சொல்லியபடியே அவன் ஓங்கி அறைந்த போது அப்படியே பொறி கலங்கிப் போனாள் அவள்!



## 7

மதுமதி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

செவிட்டிலட் ஓங்கி ஒரு அறை! அதுவும் பளீரென கன்னம் முழுவதும் அப்படியே சிவந்து துடித்தது. அந்தச் சுரீர் வலியை விட மகேந்திரன் சொன்ன வார்த்தைகள் தான் ஊசியாய் அவள் இதயத்தை துளைத்தது.

முட்டாள்! ஏமாந்தது நீதான்! தெளிவாய் தீர்க்கமாய் அவன் கத்திய வார்த்தைகள் அவள் பொட்டிலடித்து தடுமாற வைத்தது.

என்ன சொல்கிறான் இவன்?

திடுக்கிட்டவள் சினம் பொங்கவே அவனைப் பார்த்தாள் முறைத்தாள்

என்னது... நான் முட்டாளா...? ஏமாந்தது.. நானா...? என்றாள் அதே ஆவேசத்துடன்.

மகேந்திரன் ஒரு கணம் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவன் முகத்தில் கோபம் தாபம் என வெவ்வேறு உணர்ச்சிகள் தறி கெட்டு ஓடியது. ஜொலிக்கும் கண்களும் சிவந்த அவனது முகமும் அவனது ஆத்திரத்தை வெளிப்படுத்த... அவளையே வெட்டிச் சாய்ப்பது போன்று ஆங்காரத்துடன் பார்த்தான்.

அப்படியானால் இவ்வளவு நாள் வேஷம் போட்டு என்னிடம் செக்ரட்டரி போல் நடித்தாயா? என்றான் அதே அதிகாரக் குரலில்.

அவளும் சீற்றம் குறையாதவளாகவே தலையை மேலும் கீழும் பலமாய் ஆட்டினாள்.

முட்டாள்! என்ன காரியம் செய்துவிட்டாய் நீ..! எனது பேங்கு செய்முறை ரகசியங்களை ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்து திருடியிருக்கிறாயா...? உன்னை... உன்னை... என்றபடி மறுபடியும் அவன் கோபாவேசத்துடன் அவளை அடிக்க வந்தான் அவன்.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்! இவன் ஏசும் ஏச்சுக்களை... கேட்டுக் கொண்டு அடிகளையும் வாங்குவேன் என்று பயந்தவளாய் நம்மை நினைத்து விட்டானா?

நினைப்பு பொங்க சினமானவள். ஓங்கி அடிக்க வந்த அவன் கைகளைத் தட்டி விட்டாள்.



மிஸ்டர், என் அக்காவிற்கு நீங்கள் செய்த துரோகத்திற்கு பழி வாங்கத்தான் அப்படித்திருடினேன். நான் அப்படிச் செய்ததில் தவறும்எதுவும் இல்லை!

கோபமாய் கத்தியவளை அவனும் கோபமாகவே பார்த்தான்.

முட்டாளே... மறுபடியும்உளறாதே...! உன் அக்கா சிங்காரியை நான் காதலிக்கவும் இல்லை. ஏமாற்றித் துரோகம் செய்யவும் இல்லை. தெரியுமா?

அவள் விழிக்க அவனே பேசினான்.

ஏனெனில்... உன் அக்கா சிங்காரியை யாரென்று கூட தெரியாது. அவளை என் வாழ்க்கையில் சந்தித்ததும் கிடையாது!

அவன் ஆவேசமாய் கத்தியதைக் கேட்டு ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்து விட்டாள் அவள்!

என்ன சொல்றகிறான் இவன்?

சிங்காரியைத் தெரியாதா? பார்த்தது கூட இல்லை என்கிறானே?

இல்லை. நீங்கள் சொல்வதுபொய்!

மறுபடியும் ஓங்கி கத்தினாள் அவள்.

அவன் பேசாமல் கைகளைக் கட்டியபடி அவள் முன்னால் வந்தான்.

படபடவென அவன் நெற்றியில் கோடுகள் உருவாகி யோசனைகளாய் உருப்பெற்றன

இப்போது எனக்குப் புரிகிறது... என தனக்குள் முணுமுணுத்தபடி வேகமாய் பின்னோக்கிச் சென்றவன் அதே வேகத்தில் மேஜை டிராயரைத் திறந்து உள்ளிருந்த ஒரு புகைப்படத்தை எடுத்தான்.

அதை அப்படியே அவளை நோக்கி வீசினான்.

பறந்து வந்த புகைப்படத்தை கைகளால் பிடித்தான் அவள்.

அந்த.... போட்டோவைப் பார்! அதில் இருப்பது இளித்துக் கொண்டு இருப்பதுதான் உன் அருமை அக்கா சிங்காரிதானே?

அவன் துடித்துக் கேட்க.. அவளும் ஒருவித துடிப்புடனே டக்கென பார்வையை ஓட்டியவள் மெல்ல அதிர ஆரம்பித்தாள்.

போட்டோவில் இருந்தது சிங்காரியேதான்! யாரோ ஒரு ஆணின் கழுத்தை வளைத்தபடி சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்!

யார்... இது?

அக்கா... சிங்காரி இன்னொரு ஆணுடன் இப்படி நெருக்கமாய்...?

அவள் திகைக்க... இடி போன்ற கர்ஜனைக் குரலில் அவளுக்கு விளக்கினான் அவன்.

அவன்தான் குமார்! உன் அக்கா சிங்காரியின் உண்மையான காதலன்! சிங்காரி காதலித்ததும் அவனைத்தான். இருவரும் சேர்ந்து திட்டம் போட்டு உன்னை ஏமாற்றியிருக்கிறார்கள்..

அவள் மறுபடியும் விழித்தாள்.

நீங்கள் சொல்வது புரியவில்லை.. என்றாள்.

முட்டாளே. உனக்கு புரியும்படியே சொல்கிறேன். என்னுடைய ராஜா இண்டஸ்ட்ரீஸ் கம்பெனிக்குப் போட்டியாக பேரிங்குகள் தயாரிக்கும் கம்பெனிதான் குமார் இண்டஸ்ட்ரீஸ். அந்த குமார் இண்டஸ்ட்ரீஸின் முதலாளி தான் அந்தக் குமார். எங்கள் இருவருக்கும் தொழிலில் பலத்த போட்டி. அந்த தொழில் போட்டி பொறாமை காரணமாக என்னை ஒழிக்க எண்ணித்தான் இந்தக் கேவலமான நாடகமாடியிருக்கிறான். அதற்கு அவனது காதலியான உனது அக்காவும் துணை போயிருக்கிறாள்....

மகேந்திரன் சொல்லச் சொல்ல மதுமதிக்கு தலையில் இடி விழுவது போல் இருந்தது. இருந்தாலும் அவன் சொல்வதை அவ்வளவு சுலபத்தில் நம்பவும் முடியவில்லை.,

அவள் வார்த்தைகளை முடிப்பதற்கு முன் அவன் ஆவேசமாகக் கத்தினான். அதேதான்! உனக்கு இப்பவாவது புரிந்ததா முட்டாளே? அந்தக் குமார் சொல்லித்தான் உன் அக்கா உன்னிடம் நாடகமாடியிருக்கிறாள். நான் அவளைக் காதலித்து ஏமாற்றி துரோகம் செய்து விட்டது போல் எல்லாம் நடித்திருக்கிறாள். நீயும் அதை நம்பி... என்னை காதலிப்பதுபோல் நடித்து மயக்கி அந்த பேரிங்கு ரகசியங்களை என்னிடம் இருந்து திருட்டுத்தனமாய் அபகரித்திருக்கிறாய். கூடவே இருந்து கல்லுளி மங்கினியாய் எனக்குத் துரோகம் செய்திருக்கிறாய்



அவன் சொல்லச் சொல்ல தாங்க முடியாதவளாய் காதுகளைப் பொத்தினாள் அவள்.

இல்லை! இல்லை... அவளும் ஆங்காரமாய் மூச்சு வாங்க கத்தியவள், ஒரு போதும் அப்படி நடந்திருக்காது. நீங்கள் சொல்வதெல்லாம் பொய்.. நான் நம்ப மாட்டேன்! என்றாள் அதே வேகத்துடன்.

அவள் திரும்பத் திரும்ப அதையே சொல்ல அவள் பக்கத்தில் வந்தவன் ஆவேசம் வந்தவனாய் அவள் கையைப் பிடித்து அப்படியே தரதரவென இழுத்து அறையின் முன்புறம் கொண்டு வந்து அவளை வெளியே தள்ளிவிட்டான்.

முதலில்... போ! உன் அருமை அக்காவைப் போய்ப் பார்! அவளிடம் கேள். அதன்பின் என்னிடம் வந்து பேசு... போ...! போய்விடு... என் முன் நிற்காதே..!

அவன் காட்டுக் கத்தலாய் கத்தினான்.

அவன் கத்தலை தாங்க முடியாமல்அவள் விறுவிறுவென வெளியே நடந்தாள்.

வெளியே வந்தவள் நேராய் சிங்காரி வேலை பார்க்கும் ஷிப்பிங் அலுவலகத்தை நோக்கி நடந்தாள்.

என்னதான் இங்கு நடக்கிறது? இவன் பாட்டுக்கு அது இதுவென உளறுகிறான்? சிங்கரி... நம் அக்கா... அவள்... இப்படியெல்லாம் செய்வாளா... என்ன?இவன் தன் குட்டி வெளிப்பட்ட ஆத்திரத்தில் என்னென்னவோ பிதற்றுகிறான்!

கொதிப்புடன் நினைத்தவளாய் சிங்காரியின் அலுவலகத்தை அடைந்தாள்.

அங்கு அவளுக்கு ஓர் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

ரிசப்ஷனில் சிங்காரி என்ற பெயரை உச்சரித்ததுமே ரெடிமேடாய் பதில் சொல்லி ஒரு கடிதத்தை நீட்டினாள் வரவேற்பு பெண். நீங்கள் சிங்காரியின் தங்கை தானே? உங்கள் சகோதரி இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள். மேலும் சிங்காரி வேலையை ராஜினமா செய்து விட்டு போய்விட்டார்கள்.

மதுமதிக்கு தூக்கி வாரிப் போட்டது.

என்ன வேலையை ராஜினமா செய்து விட்டு போயாயிற்றா...? இருக்காது... காலையில் கூட போனில் பேசியிருக்கிறேன்...

மதுமதி சொல்ல பதிலுக்கு வரவேற்பாளினி, நீங்கள் சொல்வது சரிதான். சிங்காரி காலையில் வேலைக்கு வந்தார்கள். சரியாக ஒரு மணி நேரத்திற்கு முன்னதாககத்தான் எம்.டிவிடம் தனது ராஜினாமா கடிதத்தைக்கொடுத்து வேலையை விட்டு விலகுவதாகச் சொன்னார்கள். என்னிடமும் இந்தக் கடிதத்தை கொடுத்து நீங்கள் வந்தால் கொடுக்கும்படி சொல்லிவிட்டு அலுவலகத்தை விட்டுச் சென்று விட்டார்கள்.... சொல்லி முடித்ததும் அதிர்ச்சியான மதுமதிஅதே அதிர்வுடன் அந்த சிங்காரி கொடுத்துச் சென்ற கடிதத்தைப் பிரித்தாள்.

படிக்க... படிக்க... அவள் விரல்களே நடுங்கியது. அதில்...

மது, என்னை மன்னித்து விடு. நான் நிஜமாக காதலித்தது குமார் இண்டஸ்ட்ரீஸ் அதிபர் குமாரைத்தான்! அவரக்காக உன்னை பகடைக்காயாய் பயன்படுத்திப் பேரிங்குகள் ரகசியத்தை மகேந்திரனிடம்இருந்து பெறுவதற்கே உன்னை மகேந்திரன் காதலிப்பது போல் நடிக்கச் சொன்னேன். நீயும் நான் நினைத்தது போல் மகேந்திரனை மயக்கி அந்த பேரிங்கு ரகசியங்களை திருடி என்னிடம் கொடுத்து விட்டாய். உன்னை அப்படி நான் உபயோகித்ததற்காக, உண்மையை உன்னிடம் இருந்து மறைத்ததற்காக என்னை மன்னித்து விடு. நான் விரும்பிய வாழ்க்கை எனக்கு இப்போது கிடைக்கப் போகிறது. அதற்காக உன்னிடம் இருந்து விடைபெறுகிறேன். நீயும்... நீ விரும்புகிற மாதிரி ஒரு வாழ்க்கையைத் தேடிக்கொள். உனக்காக அமைத்துக் கொள்!

இப்படிக்கு

உன் அக்கா சிங்காரி!

கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததை மூர்ச்சையடையாத குறையாய் அதிர்ச்சியோடு படித்தாள் மதுமதி.

அவளால் கொஞ்சமும் நம்பவே முடியவில்லை!



அக்காவா.. இப்படி! கூடப் பிறந்தவள் இப்படியொரு காரியம் செய்வாளா? திருட்டுத்தனம்செய்து உடன் பிறந்த தங்கைக்கே துரோகம் செய்திருக்கிறாளே!

அப்படியே விக்கித்துப் போனவளாய் இடி விழுந்தவள் போல் ரிசப்ஷன் சேரிலே உட்கார்ந்து விட்டாள்.

சிங்காரி... வேலைக்குச் சேரச் சொன்னது.. மகேந்திரன்... தன்னை காதலித்து ஏமாற்றி விட்டதாய் சொன்னது... எல்லாமே... அவள் ஞாபகத்தில் ஓடியது.

எவ்வளவு பெரிய... பொய்கள்... அவை?

என்ன....ஒரு நாடகம்! எவ்வளவு கச்சிதமாய் உண்மை போல் நம்மிடமே சிங்காரி நடித்து ஏமாற்றி இருக்கிறாள்!

எப்படி அவளுக்க இந்த மனது வந்தது?

அப்படியானால் மகேந்திரன் சொல்வது போல் அவள் காதலித்தது குமாரைத்தான்! தன் காதலனுக்காக அவனுடைய தொழில் வளர்ச்சிக்காக... மகேந்திரன் தொழிலை சரிந்து போகச் செய்ய.... நம்மூலம் ஒரு கபட நாடகத்தை சிங்காரி தொடங்கி நன்றாக ஆடியிருக்கிறாள்!

நாமும் அதைக் கொஞ்சம் கூட உணராத கூமுட்டையாய் அவள் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டி இருக்கிறோம். அவள் சொன்னபடி எல்லாம்கேட்டு.. மகேந்திரனிடம் இளித்து குழைந்து... காதலிப்பது... போல்... எல்லாம் நடித்திருக்கிறோம். கடைசியில் அவனிடமே அவனுக்குத் தெரியாமல் அலுவலக ரகசியங்களை களவாடி வந்திருக்கிறோம்... எவ்வளவு...கீழ்த்தரமாய்... நடந்து என்ன ஒரு தரக்குறைவான காரியத்தை செய்திருக்கிறோம்?

நினைத்து நினைத்துப் பார்த்த மதுமதி அப்படியே வேதனையில் துடித்தாள்.

பிரமை பிடித்தாற் போல் ரொம்ப நேரம்அப்படியே உட்கார்ந்திருந்தவள் மெல்ல உணர்வுக்கு வந்துஅந்த ஷிப்பிங் அலுவலகத்தை விட்டு வெளிவந்தாள்.

தளர்வான நடையுடன் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சிங்காரி இந்த ஷிப்பிங் கம்பெனி வேலையை ராஜினாமா செய்தாகியேமும் அவளுக்குப் புரிந்து போயிற்று.

நாடகம் முடிந்ததும், செய்முறை ரகசியங்கள் கைக்குக் கிடைத்ததும் வேஷத்தை கலைத்து விட்டாள்!

ஆமாம்! எங்கு போனாள் அவள்?

வேலையையும் விட்டு விட்டாள். வீட்டிற்கும் இனி வரப்போவதில்லை. அப்படியானால்...?

ஒரேயடியாய் எல்லாவற்றையும் தலைமுழுகி விட்டு அந்தக் காதலனாரோடு ஐக்கியமாகி விட்டாளோ?

ஆமாம்! அப்படித்தான் இருக்கும்! நான் விரும்பிய வாழ்க்கையை எனக்கு அமைத்துக் கொண்டேன். என்னைத் தேட வேண்டாம் என்றல்லவா எழுதி வைத்து விட்டு ஓடியிருக்கிறாள்!

பாவி! எவ்வளவு பெரிய துரோகத்தை செய்திருக்கிறாள். நம் விரல்களை வைத்தே நம் கண்களை குத்தச் செய்திருக்கிறாளே! இவளுடைய நாடகத்தால் சம்மந்தமே இல்லாத மகேந்திரனின் வாழ்க்கையில் நம்மை விளையாட வைத்து நமக்கு தீராத பழியையும் உண்டு பண்ணி விட்டாளே!

வெறுப்பாய் நினைத்தவாறு சோர்வாய் நடைபோட்டு வந்தவள் வீட்டையும் அடைந்து விட்டாள்.

வீட்டைத ;திறந்து உள்ளே செல்ல மனம் கூட இல்லாதவளாய் முன் சிமெண்டுத் திண்டில் பொத்தென அமர்ந்தாள்.

சிங்காரி அந்தப் பணக்காரனுடன் சென்று ஒட்டிக்கொண்டாள். தனக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டாள். இனி இங்கு இந்த வீட்டிற்கு ஒரு போதும் வரமாட்டாள். வீட்டை மட்டுமா... அவளையும், சொந்தக் தங்கையையும், இனி நீ எக்கேடும் கெட்டுப்போ... என்பது போல உதறித் தள்ளிவிட்டாளே!


அவளை சும்மா விடக் கூடாது... என்னவாவது செய்ய வேண்டும். நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்க வேண்டும் என்றெல்லாம் நினைப்பு கோபமாய் ஓடியது.



ஆனால் மறுகணமே இப்படி இதயமே இல்லாமல் அவளை ஏமாற்றி... அம்போ என விட்டு விட்டு சென்றவளிடம் என்ன முறையிட்டு... என்ன நியாயம் கேட்க முடியும்? இனி அவள் மூஞ்சில் முழிப்பதே பாவம்... என்றும் நினைப்பு ஓடியது.

மதுமதி இப்படி நினைத்துக் கொண்டிருக்க யாரோ படபடவென அவள் தோளைத் தட்டுவது கண்டு உணர்வுக்கு வந்தாள்

நிமிர்ந்து பார்த்தவளுக்கு மேலும் அதிர்ச்சி! கோபம் சிவக்க... உருட்டும் விழிகளோடு நின்று கொண்டிருந்தான் மகேந்திரன்!



## 8

மகேந்திரனை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

ஆத்திரம் பொறுக்காமல் அவனே வீடு தேடி வந்து விட்டான்.

என்ன முழிக்கிறாய்? உன் அக்கா அந்தச் சீமைச் சிங்காரி எங்கே?

அவன் கேட்டதும்ஒரு கணம் அவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

அவன் கோபம் அதிகமாயிற்று.

ஏய், உன்னைத்தான் கேட்கிறேன்...! காது கேட்கிறதா.. இல்லை... அதுவும் செவிடாய் போய் விட்டதா? சொல்... சிங்காரி... எங்கே?

கத்தினான் அவன்.

மதுமதி வெலவெலத்தவளாய் மெல்ல எழுந்து கையில் வைத்திருந்த சிங்காரியின் கடிதத்தை நீட்டினாள்.

அதைப் பிடுங்காத குறையாய் வாங்கினவன் விறுவிறுவென அதில் பார்வையை ஓட்டினான். வாசகங்களை படிக்க படிக்க அவன் முகம் கோபத்தில் மேலும் சிவப்பானது.

அப்படியே படித்தவன் அதே வேகத்தில் லெட்டரை அவள் மூஞ்சியிலேயே வீசினான்.

படித்தாயா? இப்போதாவது புரிகிறதா? உன் அக்காவின் சுயரூபம் தெரிந்ததா?

அவன் ஆவேசமாய் கத்த அவள் குற்ற உணர்ச்சியில் அதற்கும் பேசாமலிருந்தாள்.

அவனுள் வேகம் கூடியது.

வாயைத் திறந்து பதில் சொல் முட்டாளே! இன்னும் ஏன் பித்துப்பிடித்தாற் போல் நிற்கிறாய்? உன் மரமண்டைக்கு இப்போதாவது புரிகிறதா?

அவள் மெல்ல நிமிர்ந்தவள் ஜொலிக்கும் அவன் கண்களை சந்திக்கும் திராணியின்றி திரும்பவும் குனிந்தாள்.

புரிகிறது.... என்றாள்.

என்ன புரிகிறது?

என் அக்கா ஏமாற்றி விட்டாள். நீங்கள் சொன்னபடிதான் நடந்திருக்கிறது....

எல்லாம் உன்... உன்னால்தானே?

அவள் தயக்கமாய் தலையசைத்தாள்.

அந்த பேரிங்கு செய்முறை விளக்கத்தைஜெராக்ஸ் பிரதியெடுத்து கொடுத்தது நீதானே?

அ...அ...ஆ...ஆமாம்...!

அவள் திக்கித் திணறிச் சொன்னாள்.

அவன் முன்னால் வந்து அவள் முகத்தை நிமிர்த்தினான். அவள் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் பொறி பறக்க ஒரு அறை விட்டான்.

அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. வலியால் துடித்து அப்படியே கன்னத்தைப் பிடித்தாள்.

சுருக்கென கோபமாய் நிமிர்ந்தவள் அவனது படி ஆவேசமான முகத்தைகண்டு அவனையே வெறித்தாள்.அவனோ அவளது இரண்டு





அக்ஷயாவின்
குடும்பநாவல்
'நந்தினி'யில்
உங்கள் அபிமான
எழுத்தாளர்
'அகிலா
கோவிந்த்'
எழுதும்



பூங்குயில்
யாரது?

தற்போது விற்பனையில்......

தோள்களையும் கைகளால் பிடித்து அவன் மென்னி குலுங்கும்படி உலுக்கினான்.

யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் ஜெராக்ஸ் எடுத்துக் கொடுத்தாளே...அது எவ்வளவு முக்கியம் எனப்து உனக்குத் தெரியுமா? அதை அந்த பேரிங்கு தொழிலை நம்பித்தான் என்னிடம் நூறு தொழிலாளர்களின் குடும;பம் இருக்கிறது என்பது உனக்கப் புரியுமா?

அவள் அதற்கும் ஒன்றும் புரியாதவளாய் விழிக்க ஆரம்பிக்க, மறுபடி அவளை பயங்கரமாய் உலுக்கியவன், பதில் சொல் முட்டாளே, என்னுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல். இன்னும் ஒன்றும் தெரியாத கல்லுளி மங்கினி போல் நீ நடித்தால்... உன்னை என் கைகளாபயே கொன்று போட்டு விடுவேன்... ம்ம்..... சொல்லு! என்றான் ஆவேசமாய்.

அவளுக்கு மூச்சடைத்தது. தன்னைஅவன் பிடிகளில் இருந்து விடுவித்து ஆசுவாசப்படுத்தினாள்.

எனக்க... சத்தியமாக,எதுவும் தெரியாது.. ஆ... ஆனால்... ஆனால். அந்த பேரிங்கு செய்முறைய்யை வைத்து... அவர்க்ள என்ன என்ன செய்ய முடியும்?

திக்கித் திணறி அவள் கேட்க, புலியாய்ப் பாய்ந்தான் அவன்.

என்ன செய்ய முடியுமா? நன்றாக கேட்டுக்கொளள்... முட்டாளே! என் கம்பெனி பேரிங்குகள் முதல் தரமானவை. நாட்டிலேயே அதிகமாக விற்பனையாகும் உயர்தரம்கொண்டவை. அதனால்தான் அதன் செ்முறை விளக்கத்தை ரகசியமாய் யாருக்கும் தெரியாமல் பாதுகாத்து வந்தேன். இப்போது அந்த ரகசியத்தை வைத்து அந்தப் போட்டிக் கம்பெனிக்காரன். நீ... கொடுத்தாயே குமார் இண்டஸ்ட்ரீஸ்... அவன் என்ன செய்வான் தெரியுமா?

அவன் நிறுத்தி விட்டுப் பார்க்க, என்ன செய்ய முடியும்?என்றாள் திரும்பவும் அப்பாவியாய்.

அவன் மறுப்படியும் கர்ஜித்தான். அந்த செய்முறை ரகசியங்களை வைத்து உடனடியாக போலியான பலவகை பேரிங்குகளை உற்பத்தி செய்து சந்தையில் விட்டு விடுவார்க்ள. அதனால் என்ன ஆகும் தெரியுமா? எனது கம்பெனி ஒரிஜினல் பேரிங்குகள் போல் நிறைய டூப்ளிகேட்டான போலி



பேரிங்குகள் குறைந்த விலையில் வந்து எனது பேரிங்குகளின் விற்பனையை, தரத்தை பாதித்து விடும். அதன் பின் அவ்வளவுதான். எனது உற்பத்தி சரக்கை எந்த வாடிக்கையாளரும் வாங்கமாட்டார்கள். ஒரே வாரத்தில் கம்பெனியை இழுத்து மூடிவிட்டு தெருவிற்கு வந்துவிட வேண்டியதுதான்!

அவன் ஒரே மூச்சாய் சொல்லி முடித்து விட்டான். எரிச்சலும் ஆவேசமும் கொண்டவனாய் அவளைப் பிடித்து உலுக்கினான். இப்போது புரிகிறதா? நீ எவ்வளவு முட்டாள்தனமான மடத்தனமான காரியத்தைச் செய்திருக்கிறாய் என்று?

அவளால் பதில்பேச முடியவில்லை.தலையை குனியத்தான் முடிந்தது.

ஓரளவு முழு விஷயத்தையும்அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. மகேந்திரனின் போட்டி கம்பெனிக்காரன்தான் அந்தக் குமார். நேரிடையாக தொழிலில் போட்டி போட முடியாமல் குறுக்கு வழியை கையாண்டிருக்கிறான். அதற்கு அக்கா சிங்காரி தங்கை என்றும் பாராது துணை போயிருக்கிறாள். மதுமதியை பகடைக்காய் ஆக்கி ரகசியத்தை தெரிந்து கொண்டு ஓடி விட்டாள்.

இப்போது எப்படி பார்த்தாலும் தப்பு செய்தவள் அவள்... அவள்தானே?

அக்கா..... சிங்காரி சொன்னாள் என்றால் அவளுக்க புத்தி எங்கே போயிற்று?

கொஞ்சமாவது யோசித்தாளா? அக்கா பேச்சு அப்படியே கிளிப்பிள்ளையாய் நம்பி சொன்னதையெல்லாம் செய்திருக்கிறாளே?

ஒருவேளை... காதலிப்பது போல் நடிப்பது... மயக்க முயல்வது.. எல்லாமே... பாவம்தான்... அதைவிட அவனுக்குத் துரோகம் செய்வது போல் அந்த ரகசியங்களை திருடவும் செய்திருக்கிறாளே!

எவ்வளவு பெரிய குற்றம் அது!

அவன்... மகேந்திரன் மீது எவ்வித தவறும் இல்லையே! மேலும் அக்கா சொன்னது போல் அவன் ஏமாற்றுக்காரனோ, கொடூரமானவனோ இல்லையே!

அவன் மீது வெறுப்பும் பழி வாங்கும் கோபமும் வரவேண்டும் என்பதற்காக இல்லாததும் பொல்லாததுமாய்ச் சொல்லி கதை கட்டியது செங்காரிதானே?

எது... எப்படியோ... போகட்டும்! இவ்வளவு பிரச்சினைகளுக்கும் மூல காரணம் அவள்தான். அவள் மட்டும் எந்த நிலையிலாவது சுதாரித்திருந்தால் எல்லாவற்றையும் தடுத்திருக்கலாம். ஆனால் இப்போது எல்லாம் கை மீறி போய்விட்டது.

ஆக... தவறு செய்தது அவள்தான்.அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டியவளும்அவள்தான்!

அவன் அவளுக்கு என்ன தண்டனையைக் கொடுத்தாலும் மனப்பூர்வமாய் அதை ஏற்றுக் கொண்டு தண்டனையை அனுபவிக்க வேண்டும்!

மதுமதி மனதுள் முடிவெடுத்து திடமாய் நிமிர்ந்த போது அவன் கைகளைக் கட்டியபடி அவள்முன் நின்று கொண்டு அவள்முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த மூஞ்சிக்கு பெரிய மகாராணி போல் சிந்தனை வேறா...? எனக் கத்தியவன் சட்டென அவள் தாடையை இறுகும்படி பிடித்து முகத்தை அங்கும் இங்கும் திரு;பபினான்.

இந்த அழகை வைத்துக் கொண்டுதானே என்னை மயக்கப் பார்த்தாய்! மயக்கினாய்? என்றவன், சே! நானும் காணாததைக் கண்டது போ; உன்னிடம் மயங்கித் தொலைத்திருக்கிறேனே....! என்றபடி வெறுப்பான எரிச்சலோடு அவள் முகத்தை தள்ளிவிட்டான்.

அவன் சொல்லச் சொல்ல... அவள் பயங்கரமாய் திடுக்கிடவும் செய்தாள்.

என்ன சொன்னான்?

காணாததைக் கண்டது போல் உன்னிடம் மயங்கித் தொலைத்திருக்கிறேனே....

அப்படியானால்...?



அவன்தான் காதலிப்பது போல் நடித்திருக்கிறான்... ஏமாற்றியிருக்கிறான்!

அவன் நடிக்கவில்லை. நிஜமாகவே அவளை விரும்பியிருக்கிறான்.

அதுதானே உண்மை?

அவனைப் பற்றி எண்ணியவள் அந்தக் கோணத்தில் அவனைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாளா?

நிஜமாகவே அவன் அவளை காதலித்திருக்கிறான். மனதுள் அவளுக்காக உருகியிருக்கிறான்!

அதை இப்போது அவள் உணரும் போது அவளுக்கு உயிரே போவது போல் இருந்தது.

நிமிர்ந்து ஒரு தரம் அவனைப் பார்த்தாள். இந்த நெடுநெடு உயரமும், வசீகர முகமும் கூர்மையான பார்வையும் கொண்ட அவனதுஆண்மை அவளைக் காதலித்திருக்கிறது. அதைஉணராமல் அவள்தான் பேதை போல் இருந்திருக்கிறாள். கொண்டிருந்த காரியத்திலேயே தனது கவனத்தைவைத்திருக்கிறாள்!

அந்த நிலையிலும் அவனது மனம் தன்னை நாடி காதலித்ததை உணர்ந்தபோது அவள் மனதில் இனம் புரியா பெருமிதம் உண்டானது.

ஆனால்... என்ன இருந்து.. என்ன பயன்?

அவள் இப்போது இருக்கும் நிலையே வேறு! ஒரு பெருங்குற்றத்தை செய்த தண்டனைக் குற்றவாளியாய் அல்லவா அவன் முன் நிற்கிறாள்?

தலைகுனிந்து கூனிக் குறுகி நின்றவள் சட்டென ஒரு முடிவிற்கு வந்தவளாய் நிமிர்ந்தாள்.

இதோ பாருங்கள், பெரிய தவறு நடந்து விட்டது.இந்த தவறுக்கு என்னையறியாமல் நான் காரணமாகி விட்டேன்.இந்த தவறுக்கு முழுப் பொறுப்பேற்று நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். அத்துடன்...

அவள்மேற்கொண்டு கோர்வையாய் பேசமுடியாமல் நாவறண்டவளாய் விக்கித்துப் போய் நிற்க... அவன் எரிச்சலாய் பக்கத்தில் வந்து அவளை அடிக்காதக் குறையாய்ப் பார்த்தான்.

மன்னிப்புக் கேட்டால்... மன்னிப்புக் கேட்டால்.... எல்லாமே சரியாகி விடுமா? நீ செய்த தவறுகளுக்கெல்லாம் விமோசனம் கிடைத்து விடுமா?

அவன் தலையை பலமாய் வெட்டினாள்.

இல்லை... இல்லை... நான்ட அப்படிச் சொல்ல வில்லை...

பின் என்ன சொல்ல வருகிறாய்?

நான் செய்த தவறுக்க தண்டியுங்கள். நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும், நான் ஏற்றுக் கொள்கிறேன்....

அவன் அதற்கு அருசையாய் முகத்தை வெட்டினான். உளறாதே-முட்டாளே! உனக்கு தண்டனை கொடுப்பதினால் எனக்கென்ன கிடைக்கப் போகிறது? எனது தொழில் சாம்ராஜ்யத்தை உன்னுடைய மோசமான செகை மூலம் ஒரே நாளில் சரித்து விட்டாயே? அதை எப்படி நான் சரி செய்வது?

அவன் கேட்டதும் உண்மையை உணர்ந்தவளாய் அவன் விழிக்கத்தான் ஆரம்பித்தாள்.

அவனோ,என்ன... நான் சொல்வது புரியவில்லையா? நீ அந்த ரகசியத்தை உன் அக்கா மூலம் கொடுத்து விட்டாய். அது போலி உற்பத்தியாளர்களின் கைக்குப் போய் ஒரே மாதத்தில் டூப்ளிகேட் பேரிங்குகள் நிறைய சந்தைக்கு வந்துவிடும். அவைகளை கவனிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாது. இதனால் பல லட்ச ரூபாய் நஷ்டங்களும் தொழில் சரிவும் ஏற்படும். இந்த இழப்புக்கு உன்னால் என்ன செய்ய முடியும்? பதில் சொல்...!

அவன் கேட்க கேட்க மதுமதி பதில் சொல்ல முடியாமல் அப்படியே வாயடைத்துப் போனாள். அவன் சொல்வது உண்மைதானே! எவ்வளவு பெரிய தொழில் இழப்பு இவனுக்கு! படிப்படியாய் உழைத்து முன்னேறி ஒரு நல்ல நிலையில் இருப்பவனின் காலையல்லவா இடறியிருக்கிறாள்? அவனை ஏமாற்றி படுகுழியில் அல்லவா தள்ளி விட்டிருக்கிறாள்.

இதற்கு... என்ன செய்வது... எப்படி பிராயச்சித்தம் தேடுவது?

அவள் திகைத்துப் போய் அப்படியே விக்கித்தவள்ளாய் நின்று கொண்டிருக்க... அவன் சிவந்த கண்களுடன் புலியாய் அவளைச் சுற்றி




வந்தான். மேலும் மேலும் ஆத்திரமாய் பார்த்தவனின் கண்களில் ஒருவித வெறி கூடியது.

என்ன சொன்னாய்? தண்டனையை ஏற்றுக் கொள்வாயா...?என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வாயா? என்றான். அவள் சொன்னது ஞாபகம் வந்தவனாய் அதே கோபத்துடன்.

அவள் பலமாய் தலையசைத்தாள்.

எந்தத் தண்டனையானாலும் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்கிறேன்! என்றாள் அவள் பவ்யமான குரலில்



## 9

என்ன தண்டனையானாலும் ஏற்றுக் கொள்கிறேன்! என்ற மதுமதிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அவன் முகத்தையே திகிலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

பலவித உணர்ச்சிக் கலவைகளில் திளைத்து அவனது முகம் அப்படியே தீவிர சிந்தனைக்குப் போனது.

டக்கென யோசித்து முடிவெடுத்தவன் போல் நிமிர்ந்தான்.

நான் சொன்னபடி நீ நடக்க வேண்டும். நடப்பாய் தானே?

கண்டிப்பாய் நடக்கிறேன்....

ஏறக்குறைய ஒரு பள்ளி மாணவி போலத்தான் தலையாட்டியபடி அவள் சொன்னாள்.

முள்ளை...முள்ளால்தான் எடுக்கப் போகிறேன் என்றான் அவன்.

அவள் விழிப்பதை உற்றுக் கவனித்தான்.

எந்த தவறை நீ என்னிடம் செய்தாயோ...அதே தவறை மீண்டுமொருமுறை உன்னைச் செய்ய வைக்கப் போகிறேன். இம்முறை எனக்காக...

அவள் கண்களை அகல விரித்து ஆச்சரியப்பட்டது அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியிருக்க வேண்டும்.

இன்னுமா புரியவில்லை...? எந்த பேரிங்குகளின் ரகசியத்தை என்னிடம் திருடி அந்த குமார் இண்டஸ்ட்ரீஸ் குமாரிடம் கொடுத்தாயோ... அதே போல்.. அந்த பேரிங்குகளின் பார்முலா ஒன்றை குமாரிடம் இருந்து திருடி என்னிடம் கொடுக்க வேண்டும்....

அவன் சொல்லச் சொல்ல... அவள் விக்கித்துதான் போனாள்.

என்ன முழிக்கிறாய்..? இதுதான் இப்படி நீ இப்படி செய்வதுதான்... நான் உனக்கு தரப் போகும் தண்டனை! அவன் முழுதாய்ச் சொல்லியும் முடித்தான்.

கடவுளே! தண்டனையா இது? எந்த தவறைச் செய்து இவனிடம் மாட்டிக் கொண்டாளோ...அதே தவறை திரும்பவும் செய்யச் சொல்கிறானே!

அவள் தலைசாய்த்து அதிர்ந்து நின்றது அவனுக்க கேலிப் பொருளாகியது.

என்ன.. எதையோ... தெரியாததைச் சொல்லியது போல் ஸ்தம்பித்து நின்று விட்டாய்?நான் சொல்லியது... உனக்கு நன்கு தெரிந்த திருட்டுத் தொழில்தானே? அதை மறுபடியும் செய்ய என்ன தயக்கமா?

ஐயோ என்ன இது?அவனைத் திருடி என்றே முடிவு பண்ணிவிட்டானா?

அவள் வேண்டுமென்று திட்டம் போட்டா வந்து திருடினாள். சிங்காரியின் பேச்சை நம்பி சூழ்நிலையால் தானே திருடி ஆகிவிட்டாள்!

அவள் மேலும் மேலும்யோசித்ததில் அவன் பொறுமை இழந்திருக்க வேண்டும்.

டக்கென தனது கைவிரல்களால் படபடவென அவள் மகத்திற்கு நேராய் சுண்டினான்.



ஹேய்....இதோ பார்... என்றான் உறுமலாய்..

இந்த ஆராய்ச்சி செய்வதுபோல் யோசிப்பதை முதலில் நிறுத்து. எனக்கு உடனே பதல் தெரிந்தாக வேண்டும். நான் சொன்னபடி நடக்கிறாயா? அல்லது கம்பி எண்ணுகிறாயா?

இந்த வகையான மிரட்டலை அவள் கொஞ்சமும் எதிர்பாராததால், எ...ன்...னது...?என்றாள் மொத்தமும் அதிர்ந்தவாறு.

அட... இது கூடவா... உன் சின்ன மூளைக்குப் புரிய வில்லை? எனது திட்டதிற்கு சம்மதிக்காவிட்டால் நான் போலீசிடம்உன்னைப் பற்றி என்னுடைய ரகசியங்களை திருடி விற்றதாய்ச் சொல்லி புகார் செய்து விடுவேன். சட்டப்படி தண்டிப்பும்... களி திங்க வேண்டிய சூழ்நிலையும் உனக்கு ஏற்படும்....

என்ன ஜெயிலுக்கு அனுப்பி விடுவீர்களா?

அவள் விக்கித்துப் போய் கேட்க அவன் அசால்டாய் கைகளைத் தட்டினான்.

பின் நீ செய்த திருட்டு காரியத்திற்கு உன்னை மாலை போட்டி:டுஅரண்மனைக்கா அனுப்ப முடியும்?

அடுத்த **அக்ஷயா** மாத நாவலில்

**அகிலாகோவிந்த்**

எழுதும்

**"பூவினும் மெல்லிய பூங்கொடி!"**

விறுவிறுப்பான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

ஆனால்... ஆனால்... இது...

அவள் திணறினாள்.

சொல்லு... சொல்ல வந்ததை முழுசும் சொல்லு...

அவன் விரட்டினான்.

இது... தவறு... தவறு... அல்லவா?

தவறுதான். ஆனால் ஏற்கனவே செய்து பழகிப் போன ஒன்றுதானே?

அவள் பதில் சொல்லாமல் விழித்தாள்.

அவன் குனிந்து ஒரு கணம் அவளை உற்றுப் பார்த்தவன், இப்படி கண்களை அடிக்கடி பெரிதாய் விழித்துக் கொண்டு சும்மா... சும்மா... போஸ் கொடுக்காதே. எனக்கு நீ முன்பு என்னை மயக்குவதற்காக காதலித்த ஞாபகம்தான் வருகிறது... எனவும் சட்டென குற்றவுணர்ச்சியோடு விழிகளைத்தாழ்த்தி குனிந்தாள் அவள்.

அவன் மறுபடியும் கைகளால் சொடுக்கிட்டவன், எங்களது பிசினஸ் அகராதியில்தப்பு + தப்பு சரியென்று ஆகிவிடும். மேலும் நீ செய்த பச்சை துரோகத்தை இது ஒன்றால்தான் சரி பண்ண முடியும். இதைத்தவிர வேறு வழி என்ற ஒன்று இருந்தால்... அது...குள்ள நரியான உன் மூளைக்குத் தெரிந்தால்.... அதை உடனே கூறு. நானும் செயலாற்றப் பார்க்கிறேன்...

பல்லைக் கடித்துக் கொண்டு அவள் பேசாமல் நின்றது அவனுக்கு மறுபடியும் எரிச்சலைக் கிளப்பியது.

கேட்பதற்கு முதலில் பதில் சொல்...

இல்லை... அப்படி.... எதுவும் எனக்குத் தோன்றவில்லை...

அப்படியானால் சரி, உடனே என் வழிக்கு வா. நான் சொன்னபடி செய்யத் தயார் ஆகு...

அவள் மறுபடியும் விழிகளை உயர்த்தி மலங்க மலங்க விழித்தாள்.

நான் என்ன செய்ய வேண்டும்?



அப்படிக் கேள். சொல்கிறேன்... என்றபடி புருவம் சுருக்க பார்த்தவன், நீ திரும்பவும் உன் அக்கா சிங்காரியிடம் போக வேண்டும்... என்றான்.

என்ன சிங்காரியிடமா?

அவள் அலறாத குறையாய் நிமிர்ந்தாள். அவன் எரிச்சலானான்.

ஏன்... பெரிதாய் கூக்குரலிடுகிறாய்? உன் அக்காவிடம் தானே போகச் சொல்கிறேன்?

அவள்... இனி என் அக்காஇல்லை. துரோகி. என் வாழ்வை கெடுக்க முயன்ற பெரும் துரோகி...!

அவள் துடித்துச் சொல்வதை அதிசயமாய் பார்த்தவன் அலட்சியமாய் கேட்டான்.

அவள் உன் வாழ்வை கெடுத்தவள் துரோகி என்றால்... என் பிசினஸ் சாம்ராஜ்யத்தை கெடுத்த நீ யாராம்... சொல்லு.?

அவள் பதில் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்தாள்.

அவன் சொல்வது சரிதானே? நயவஞ்சகமாய் குள்ளநரித்தனமாய் சிங்காரி இவளிடம் செய்தது போல் இவளும் இவனிடம்நடந்து கொண்டிருக்கிறாளே!

அப்படியானால்.... அவளைப் பொறுத்தமவரையில் இவளும் துரோகிதானே!

அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

இப்படிப்பட்ட தங்கைக்கு அக்காவா இருப்பவள் துரோகியாக இல்லாமல் பெரும் தியாகியாவா இருப்பாள்? ஆனாலும் உங்களை பெற்றவர்க்ள பெரும் புண்ணியவதிகளாகத்தான் இருக்க வேண்டும்!

பெற்றவர்களைச் சொன்னதும் மதுமதிக்கு சுர்ரென்றது.

தயவு செய்து எங்கள் பெற்றவர்களைப் பற்றி மட்டும் குறை சொல்லாதீர்கள். சிறு வயதிலேயே தாய் தந்தையர்களை இழந்தவர்கள் நாங்கள்..

அவள் இரக்கமாய் கெஞ்சலாய்க் கேட்டதற்கும் அசராமல் ஒரு குத்து குத்தினான் அவன்.

அடடா...அப்படியா?ஒரு வேளை இப்படிப்பட்ட அருமையான மகள்களை பெற்று விட்டோம் என்ற பூரிப்பில் உடனே போய் சேர்ந்து விட்டார்களோ.. என்னவோ? என்றான்.

கடவுளே...!


அவள் காதுகளைப் பொத்திக் கொண்டு ஓரிரு நிமிடத்தில்தன்னை அமைதிப்படுத்தியவாறு நிமிர்ந்தாள்.

சரி, சிங்காரியை தேடிப் போகிறேன். போய் என்ன செய்ய வேண்டும்.?

போய்... எனக்குவேலையும் போய் விட்டது. நடுத்தெருவில் ஆதரவில்லாமல் நிற்கிறேன். எனக்கு ஆதரவு கொடு... என கெஞ்ச வேண்டும். எப்படியாவது நீ அந்த பங்களாவில் நுழைய வேண்டும். பின் சமயம் பார்த்து அந்தபேரிங்கு ரகசியங்கள் இருக்குமிடத்தை கண்டுபிடித்து அவைகளைத் திருட வேண்டும். புரிகிறதா?என்று கேட்டான் அவன்.

புரிகிறது...

பயத்துடன் மெல்ல தலையசைத்தாள் அவள்.



## 10

மதுமதிக்கு திக்கென்ற அதிர்ச்சி அலைதான் உடம்பு முழுவதும் பரவியது.

யார் முகத்தில் முழிக்கவே கூடாது என்று நினைத்தாளோ அவள் முகத்திலேயே விழிக்கும்படிச் சொல்கிறானே!

சகோதரியா அவள்? தங்கை என்று கூட பாராமல் அவளையே பகடைக் காயாய் வைத்து ஆடி படுகுழியில் அல்லவா தள்ளியிருக்கிறாள்?



என்ன ஒரு நெஞ்சழுத்தம் இருந்திருந்தால் ஒரு லெட்டர் மட்டும் எழுதி வைத்துவிட்டு ஓடியிருப்பாள்?

யோசித்தவள் திரும்ப எப்படிச் சென்று அவளைப் பார்ப்பது...? என்ன விதமாக அவளிடம் பேசுவது? என குழம்பினாள்.

ஆனால் அவன் மகேந்திரன் தெளிவாக இருந்தான்.

அதெல்லாம் எனக்குத்தெரியாது. என்ன செய்வாயோ... எப்படிப் போவாயோ! நீ கண்டிப்பாய் அங்கு போயாக வேண்டும். உன் அருமை அக்காவிடம் நீலிக் கண்ணீர் விட்டு நடிக்க வேண்டும். அடலையாய் ரோட்டில் நிற்பதைப் போல் கதற வேண்டும். அப்பிக் கெஞ்சினால் தான் அவள் உன்னை ஏற்றுக் கொள்வாள். நம் திட்டமும் பலிக்கும்...

இதைத் தவிர வேறுவழியே இல்லையா?

அவள் நப்பாசையாய் மறுபடியும் கேட்டுத்தான் பார்த்தாள்.

அவன் பெரிதாய் சிரித்து டக்கென நிறுத்தியபடி முறைத்தான்.

வழி இருக்கிறது... கம்பி எண்ணும் வழி!

இவனிடம் இனி பேசிப் பிரயோஜனமில்லை... என அத்தோடு நிறுத்திக் கொண்டாள் அவள்.

அதன் பின் அவன் தனது செல்போன் நெம்பரைக் கொடுத்து அப்படி வீட்டினுள் சிங்காரி அவளை ஏற்றுக்கொண்டதும் ரகசியமாக உடனே அவனுக்குத் தெரிவிக்கச் சொன்னான்.

அதன் பின் அவ்வப்போது போனில் அவன் அவளுக்கு நடக்க வேண்டிய முறைகளை,திருட வேண்டிய அலுவலக குறிப்புகளை பற்றி விளக்குவானாம். அவளும் அதன்படி செயல்பட வேண்டுமாம்!

தேவைப்பட்டால் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் நகருக்கு மத்தியில் இருக்கும் காந்தி பார்க் கில் சந்தித்து அவனிடம் ஆலோசனையும் பெற வேண்டுமாம்!

அவள் அவனுக்க தேவையான அலுவலக ரகசிய குறிப்புகளை திருடி எடுத்துக் கொடுத்து விட்டால்... அத்தோடு அவள் வேலை முடிந்ததாம்... எக்கேடும் கெட்டுப்போ...! என அவளை விடுவித்து விடுவானாம்!

அப்படி அதை: அந்த ரகசிய குறிப்புகளை எடுக்க எவ்வளவு நாள் ஆகும்? என அப்பாவியாய் அவள் கேட்க அதற்கு அவன் ஏளனமாய் பார்த்தான் அவளை.

அது.... நீ நடந்து கொள்கிற முறையைப் பொறுத்து என்றான்.

நடந்து கொள்கிற முறை என்றால்?

உன் தாராளத்தைப் பொறுத்து...

தாராளமா?

உடையில்... உடைமுறையில் நீ காட்ட வேண்டிய தாராளம்!

உடையிலா..? நீங்கள் சொல்வது புரியவில்லை.

ம்ஹூம்...! டியூப் லைட்தானே நீ...? இல்லா விட்டால் உன் அக்கா, உன்னை இப்படிக் குமுட்டையாக நினைத்து ஏமாற்றுவாளா? ம்ம்...உனக்கு புரியும்படியே சொல்கிறேன். உன் அக்காளின் காதலன் அந்த குமார் இண்டஸ்ட்ரீஸ் குமார் ஒரு சபலக் கேஸ்தான். கொஞ்சம்தளுக்கி மினுக்கி நீ நடமாடினால் அப்படியே கிறங்கி விடுவான். அதனால் உடைகளிலும் உன் செயல்களிலும் நீ தாராளத்தைக் கடைப்பிடித்தால் நம் வேலை எளிதில் முடிந்து விடும்....

நான் ஒன்றும் அந்த ரகப் பெண் இல்லை.. என்றாள் உஷ்ணமாய்.

எந்த ரகம்? என்றான் அவன் புரியாதவன் போல்.

அவன் புரியாதது போல் கேட்டது அவளை மேலும் சூடேற்றியது.

காரியத்திற்காக... இதுபோல் அசிங்கங்களை செய்வது.... எனக்குப் பிடிக்காதது! என்று அழுத்தமான குரலில் அவள் சொல்ல... அவன் கைகளைத் தட்டினான்.

அடடா.?! சாத்தானுக்கு எப்போது ஞானோதயம் வந்தது? என்றான்.

அவள், என்ன நான் சாத்தானா? என்பது போல் விழிகளை விரித்து முறைக்க, பிறகு... என்னம்மா நீ? அதற்குள் மறந்து விட்டாயா?இதே போன்ற சாகச காரியத்திற்குத்தானே... என்னிடம் காதலி வேஷம் போட்டாய்...? என்றவன் ஏதோ ஞாபகம் வந்தவனாய், நானும் ஒரு அப்பாவி மடையன்தான். காதலி வேஷம் போட்ட உன்னை அப்படியே சந்தடி சாக்கில்



கட்டிப் பிடித்து... முத்தம் கொடுத்து... என்னென்னவோ செய்திருக்க வேண்டும்... அதை விட்டுவிட்டு...

அவன் முடிக்கும் முன்பே அவள் சீறினாள். அப்படிச் செய்தால்... அதை வேடிக்கை பார்த்தவாறு என் கைகள் ஒன்று பூப்பறித்துக் கொண்டிருக்காது.

மகேந்திரன் அதற்கும் பதிலடியாய், ஆமாம்... ஆமாம்... நிச்சயம் பூப்பறித்துக் கொண்டு இருக்கத்தான்... இருட்ட வந்த இருடியின் கரங்கள் அல்லவா அவை... என்றான் மறுபடியும்குத்தலாய்.

அவள் பல்லைக் கடித்தபடி குனிந்தவள் ஓரிரு நிமிடங்களில் விரைப்பு கொண்டவள் போல் நிமிர்ந்தாள்.

இப்போது என்ன.. உங்களுக்கு அந்தக் குமார் இண்டஸ்ட்ரீஸ் குமார் வைத்திருக்கும் அந்த அவரது பேரிங்குகளின் ரகசிய பார்முலா பைல்கள் வேண்டும் அவ்வளவுதானே?

அவ்வளவேதான்.

அதை... எப்படியும் எப்பாடுபட்டாவது உங்களிடம் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்....

அது போதும் எனக்கு....

அதற்குப் பின் என்னை மன்னித்து விடுவித்து விடுவீர்கள்தானே?

அவள் கேட்டதும் அவன் உடனே பதில் சொல்லாமல் பக்கத்தில் வந்து நேருக்கு நேராய் அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்தான்....

உன்னை விடுவித்து விடுவேன். ஆனால்...

ஆனால்....?

உன்னை... ஒருபோதும்மன்னிக்க மாட்டேன்.

என்ன... என்ன சொல்கிறீர்கள்?

என்னை... எனது மென்மையான உணர்வுகளை காதல் என்ற பெயரில் வேஷம் போட்டு ஏமாற்றிய வேஷக்காரி தானே... நீ? உன்னை எப்படி மன்னிக்க முடியும்? இந்த ஜென்மத்தில் உனக்கு மன்னிப்பு கிடையாது...

முகம்முழுவதும் வெறுப்போடு அவன் அந்த வார்த்தைகளை உதிர்த்தபோது அவள் ஆடித்தான் போனாள். அவன் உள் மனதை எவ்வளவு காயப்படுத்தியிருக்கிறோம் என்பது புரிந்தது.

இந்நிலையில் அவளால் அவனிடம் வேறு என்ன சொல்ல முடியும்? தன்னையே உறுத்து நோக்கிய அவனது விழிகளைச் சந்திக்க முடியாதவளாய் அப்படியே குனியத் தான் செய்தாள்.

அதன் பின் அவனிடமிருந்து நீ போகலாம் என்ற உத்தரவு வந்ததும் விறுவிறுவென அவள் வெளியே நடந்தாள். அவள் வெளியேறும் சமயம் மறுபடியும் அவனது கண்டிப்பான குரல் எழுந்தது. ஞாபகம் இருக்கட்டும். இன்னும் ஒரே வாரத்தில் உன் அக்கா வீட்டினுள் நுழைந்து உன் வேலையை ஆரம்பித்துவிட வேண்டும்... என்னை ஏமாற்ற மட்டும் நினைக்காதே... நினைத்தால், தொலைத்துவிடுவேன்!

எச்சரிப்பது போல்... ஆரம்பித்து மிரட்டலாய் முடித்திருந்தான்.

அவள் நடுக்கத்தால் ஆடிய உடம்பை அப்படியே உதட்டை அழுந்தக் கடித்து நிறுத்தியபடி நடந்தாள்.

ரொம்ப நேரம் பேசினதாலும், களைப்பாலும் நாவறண்டிருக்க... சாலையோர பெட்டிக்கடை ஒன்றில் நின்று சோடா ஒன்று வாங்கி மடமடவென குடித்தாள்.

கையில் வைத்திருந்த சிறிய மணி பர்ஸில் இருந்து சில்லரைகளை எடுத்துக் கொடுத்தவள், மீதமுள்ள பணத்தை எண்ணிப் பார்த்தாள்.

ஐந்து பத்து ரூபாய் தாள்கள் மட்டுமே இருந்தது.

இதுபோதும்... என நினைத்தவள் மறுபடி வீட்டை நோக்கி நடந்தாள். அவளும் அக்காவும் மட்டும் வசிப்பதற்கென வடிவமைக்கப்பட்டது போலான சிறிய குச்சு வீடு அது. நார்க் கட்டிலும், கொடியிலும் அவளது சேலைகளே ஒன்றிரண்டு தொங்கிக் கிடந்தது. சிங்காரி தன் துணிமணிகளை எல்லாம் பாக் செய்து கொண்டு போயிருக்க வேண்டும். பாவி! ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இரவோடு இரவாய் கிளம்பி விட்டாளே!

என்ன ஒரு நெஞ்சழுத்தம் அவளுக்கு! சொந்தத் தங்கை உடன் பிறந்தவள் என்று கூட பாராமல் ஒரு வசதியான பணக்காரத்தனமான வாழ்க்கைக்காக பாசத்தையே தூக்கி எறிந்து விட்டாளே!



நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்விகள் கேட்க வேண்டும் என நினைத்தவள்... இனியும் அவளை நினைத்து பயனில்லை. நடப்பதை பார்ப்போம் என்ற உணர்வுடன் பரணிலிருந்த பழைய டிரங்குப் பெட்டி ஒன்றை எடுத்தாள்.

திறந்து தனது பழைய கோட்டா சேலைகளை அடுக்கினாள். குட்டிக் கூரா பவுடர், சிறிய முகக்கண்ணாடி, கறுப்பு ரிஸ்ட் வாட்ச், டிகிரி மற்றும் தட்டெழுத்து சர்டிபிகேட்டுகளை என எல்லாவற்றையும் வைத்து மூடினாள்.

மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு பார்த்தபோது வீட்டில் ஒரு பெரிய தவலைப் பானையும், நாலைந்து அலுமினிய பாத்திரங்களுமே மிஞ்சியிருப்பதைக் கண்டாள். வீட்டுக்கார அம்மாளுக்கு பாதி மாத வாடகை இருநூறு கொடுக்க வேண்டும். அதற்கு ஈடாக இந்தப் பொருட்களை வைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டியதுதான்.

முடிவெடுத்து கிளம்பியவள் வீட்டுக்கார அம்மாளிடம் சாவியைக் கொடுத்து விஷயத்தைச் சொன்னாள். பதறிப்போன அவள், அக்காவா இப்படியெல்லாம் செய்தாள்? என்னால் நம்பவே முடியவில்லை கண்ணு... என நிஜமான அன்புடன் கேட்டபோது... இவளுக்கு இருக்கும் பாசம் கூட அக்காவிற்கு இல்லாமல் போயிற்றே என்று ஏங்கினாள் அவள்!

மதுமதிக்கு நினைக்க... நினைக்க அந்த விபரீதம் புரிந்து விட்டது. சிங்காரி ஓரளவே சொல்லியிருந்தாலும் மகேந்திரன் சொன்னதை வைத்து அவள் திட்டம் முழுவதும் தெரிந்து போயிற்று.

அவள் அதிர்ந்தது கொஞ்சமல்ல. உடம்பே நடுங்குமளவுக்கு அவளுள் அதிர்ச்சி ஓடியது.

சிங்காரி... சொந்த... உடன் பிறந்த சகோதரி. அவளா இப்படி?

சிங்காரியக்கா... சிங்காரியக்கா.. என நொடிக்கொருமுறை சிறுவயதில் அழைத்து அவள் பின்னாலேயே சுற்றிய தங்கைக்கு அவள் காட்டும் பாசம் இதுதானா?

அத்தை பூரணத்தின் அரவணைப்பில் இருவரும் வளர்ந்தபோது, பாசம் காட்டி உண்மையாகத்தானே இந்த சிங்காரி இருந்தாள்.நடந்து கொண்டாள்!

என்று படித்து டிகிரி முடித்து வேலைக்குச் சென்றாளோ... அப்போதில் இருந்துதான் அவளிடம் மாற்றம்!

என்று படித்து டிகிரி முடித்து வேலைக்குச் சென்றாளோ...அப்போதில் இருந்துதான் அவளிடம் மாற்றம்!

இது... என்...ஃபேஸ் க்ரீம்... இது... என்... ஐ... லைனர்... இருது... என் பர்ஃப்யூம்... நீ தொடாதே! என அவள் எச்சரித்தபோதுதான் முதல் முறையாய் சிங்காரியின் அந்த முகத்தை அவள் அறிந்தாள்.

பின் அத்தையின் மறைவுக்குப் பின் முழுப் பொறுப்பையும் அவள் ஏற்றுக் கொண்டபோது அவளது அன்புக் குரல் அடிக்கடி அதிகாரக் குரலாய் மாறி கர்ஜிப்பதைலேசாய் உணர்ந்தாள்.

அப்படிச் செய்யாதே! அங்கு போகாதே! என அடிக்கடி அவள் அதட்டி உருட்டுவதைக் கூட ஒரு அக்கா தங்கையை வழிநடத்தும் அறிவுரையாகவே எண்ணி ஏற்றுக் கொண்டாள் அவள்.

வாங்குகிற சம்பளத்தில் பெரும் பகுதியை விலையுயர்ந்த புடவைகளாய் தனக்கு வாங்கிக் குவிப்பாள் சிங்காரி. மதுமதிக்கோ... எப்பவாவது ஓரிரண்டு சேலைகளே கிடைக்கும். அதுவும்முகத்திலடிப்பது போலான மலிவு விலை பட்டிக்காட்டுச் சேலைகளையே அவளுக்கு வாங்கிக் கொடுப்பாள்.

என்ன கலரக்கா இது? என மதுமதி அருவையாய் புருவம் உயர்த்தினால்கூட இல்லை மது.உனக்குத் தெரியாது. இது ஆண் துணையில்லாத வீடு. நீ பகட்டாக நாலு துணிகளை போட்டுக் கொண்டு நடமாடினால் அது நாலுபேர் கண்களை உறுத்த ஆரம்பித்துவிடும்! என்பாள்.

அந்தக் கொள்கை,அவளுக்கு கிடையாதா? அவள் மட்டும் ஜிகினா மினுமினுப்பில் விலையுயர்ந்த சேலைகளை கட்டிக் கொண்டு போவது நாலு பேரை உறுத்தாதா...? என்ற கேள்வியும் மதுமதி மனதில் எழும்.

சரி...வேலை பார்ப்பவள்... சம்பாதிப்பவள்... தன்னை விட வயதில் மூத்தவள்.அவள் இஷ்டப்படியே நடந்து கொள்ளட்டும் என்று அப்போதெல்லாம் விட்டு விடுவாள் மதுமதி.

அதுபோல் சிங்காரி வேலை/ முடிந்த பிறகும் எங்காவது போவாள். விடுமுறை தினங்களிலும் யாரையாவது பார்க்கப் போவதாய் சொல்லி ஊர்



சுற்றி வருவாள். ஆனால் மதுமதி கல்லூரி விட்டு ஒரு ஐந்து நிமிடம் தாமதமாக வந்தால் கூட... அவளை விரட்டு விரட்டு என விரட்ட ஆரம்பித்து விடுவாள்.

அதைக்கூட மதுமதி தவறாக நினைக்காமல் ஒரு தாயின் கண்டிப்புடன் சிங்காரி நடந்து கொள்வதாய் நினைத்துக் கொள்வாள்.

அதேபோல் வீட்டு வேலைகளைச் செய்வதிலும் சிங்காரி சோம்பேறித்தனமாய் முழுவேலைகளையும் மதுமதி தலையிலேயே கட்டி விடுவாள்.

தினமும் மதுமதி அதிகாலை எழுந்துஅரக்கப் பரக்க சமையலைச்செய்து இரண்டு பேருக்கும் டிபன் பாக்ஸில் உணவைத்தயார் செய்து விட்டுத்தான் அவள் கல்லூரிக்க கிளம்ப முடியும். சிங்காரி சாவகாசமாய் எட்டு மணிக்க எழுந்து மதுமதி தரும் பெட் காபியை குடித்தபடி பேப்பர் படிப்பாள். ஒற்றையாளாய் ஓடியாடி அவள் செய்த உணவையும் குறை சொல்லாமல் இருக்க மாட்டாள்.

இந்த துவையலில் காரம் அதிகம். இந்தச் சாம்பாரில் சுவையே இல்லையே... என்ன பெண் நீ... இந்த சிறு வேலை கூட உனக்குச் செய்யத் தெரியாதா?என்பாள்.

மதுமதிதான் அவள் எது சொன்னாலும் கோபப்படாமல் போவாள். அவள் அத்தையின் மறைவிற்குப் பிறகு. சம்பாதிக்க ஆரம்பித்த பிறகு வீட்டின் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டாள். அதனால் அவளுக்க இப்படி அதிகாரம் செய்து கர்ஜிக்க உரிமை இருக்கிறது எனவும் நம்பினாள் மதுமதி.

அதனாலே அவள் அடிக்கடி கையை உயர்த்தி அதட்டும் தொனியல் எச்சரித்துப் பேசும்போதும்அதை வித்தியாசமாக எண்ணிக் கொள்ள மாட்டாள். ஒரு அக்கா தன் தங்கையை கண்டிப்போடு வளர்க்கிறாள் என்றே நினைத்துக் கொள்வாள்.அதுபோல் அவள் ஷாப்பிங், வெளியே என கிளம்பினாலும், மதுமதி ஆவலாய் முன் போய், நானும் வருகிறேனக்கா என கெஞ்சுவாள். அப்போதெல்லாம் எரிந்து விழுவாள் சிங்காரி. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? இன்னும் சிறுமி போல் கடை காட்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாயா? வயசுப் பெண்ணாய் லட்சணமாய் வீட்டில் அடங்கிக் கிடக்கவேண்டும். புரிகிறதா?என உருட்டல் போட்டவுடன் சரியக்கா... என தலையசைப்புடன் குனிந்து விடுவாள் மதுமதி.

அப்போதததெல்லாம் அக்கா முன்பு போல தன்னிடம் பாசமாய் இருக்க மாட்டாளா? என ஏங்குவாள். தன்னிடம் அன்பொழுக பேசாமல் எப்போதும் எரிந்து விழுகிறாளே... என வருந்துவாள்.

மேலும் சிங்காரி தன்னிடம் அக்கா என்பதை விட ஒரு இயந்திரத் தன்மையாய் எப்போதும் நடந்து கொள்வதையே மதுமதி கவனித்து வந்திருக்கிறாள். ஒரு கட்டத்திற்கு மேல் சிங்காரி தன்னுடன் ஒரே வீட்டில் இருந்தாலும் தன்னிடம் ஒரு இடைவெளி விட்டே விலகி இருப்பதையும் உணர்ந்தாள் மதுமதி.

போகப் போக...அக்கா சிங்காரியின் சுபாவமே இப்படித்தான் என்று விட்டும் விட்டாள். ஆனால் இப்போதுதான் மதுமதிக்கு எல்லாம் தெரிகிறது. அவளால் உணர முடிகிறது.

அவள்தான் அக்கா.. அக்கா... என சிங்காரி மேல் அதீத பாசத்தை வைத்திருக்கிறாள். ஆனால் சிங்காரி அவளை தன் அன்புத் தங்கையாக எண்ணவோ பாசம் காட்டவோ இல்லாமல்தான் வளர்ந்திருக்கிறாள்.

அப்படி உண்மையான பாசம் வைக்காமல் வளர்ந்ததினால்தான் கல்நெஞ்சக்காரி போல் இப்படியொரு காரியத்தை செய்துவிட்டு, எக்கேடும் கெட்டு நீ போ! என மதுமதியை அம்போவென தவிக்க விட்டுச் சென்றிருக்கிறாள் சிங்காரி!



## 11



டிரங்குப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வீதியில் இறங்கி விடுவிடுவென நடந்தாள். வேகமாய்ச் செல்லும் தன்னை ஒரு சிலர் வித்தியாசமாய்ப் பார்ப்பதைஉணர்ந்து வேகத்தைக் குறைத்தாள்.

இனி... யார்.. எப்படிப் பார்த்தால்... என்ன? என்ன நினைத்தால்... என்ன? என்ற நினைப்புமேலோங்கியது. இதுநாள் வரை அக்கா! அக்கா! என வாழ்ந்து விட்டு திடும்மென தன்னந் தனியே வெட்டவெளிக்கு வந்து விட்டதுபோல் தோன்றியது.



ஆனாலும்.... அப்படி இல்லையே! அந்த அன்பு பாசக்கார அக்காவிடம் சென்று ஒட்டிக் கொள்ளத்தானே இப்போது போகிறாள்? ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்இப்படி ஆவார்கள்.... என்ற நினைப்பும் ஓடியது.

கூடவே.... சொந்த அக்காவிடம் வேஷம் போட்டு நடிக்கத்தானே இப்போது செல்கிறாள்? அவள் செய்த அந்த துரோகத்தை அந்த தப்பைத்தானே இப்போது இவள் செய்யப் போகிறாள்? என்ற எண்ணம் எழுந்து உறுத்தியது.

அவள் அவளது உண்மையான காதலனான குமார் இண்டஸ்ட்ரீஸ் குமாருக்காக தன்னிடம் நடித்துத் துரோகம் செய்தாள்.

அதேபோல்... இவளும்அதனால் பாதிக்கப்பட்ட ராஜா இண்டஸ்ட்ரீஸ் மகேந்திரனுக்காக சிங்காரியிடம் நடந்து அவளுக்கு துரோகம் செய்ய வேண்டும்.

முன்னது... சிங்காரி செய்தது பாவம் என்றால்... அவள் செய்யப் போவது பரிகாரம்!

செய்த தப்பிற்கான தண்டனையும் கூட!

அவள் அதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அதனால் சிங்காரியிடம் நடிக்க வேண்டியிருப்பது பற்றி அவள் எவ்வித உறுத்தலும்கொள்ளத் தேவையில்லை.

ஒரு பைல் ரகசியங்களை திருடிக் கொடுத்ததற்கு இன்னொரு பைல் ரகசியங்களை அதேபோல் திருடி பாதிக்கப்பட்டவனிடம் கொடுத்து விட்டால் போதும்.

அவள் செய்த தப்பும் சரியாகிவிடும்.

அதன் பின் மகேந்திரனும், எப்படியும் போ..என விடுவித்து விடுவான்.

அதன் பின்..?

யோசித்தவள்.. கொக்கியாய் ஒரு கேள்வி தாக்க... திகைக்கத்தான் செய்தாள்.

அதன்பின்... அவ்வளவுதானா?

ரகசிய பைலைக் கொடுத்ததும் உனக்கு எனக்குமான கணக்கு முடிந்தது. நீ போகலாம்... கைகாட்டி உதறி விடுவானா?

அதன் பின் அவனுக்கு ஒன்றும் தோன்றாதா?

அவள் குற்றமற்றவள், செய்த தவறுக்கு தண்டனையையும் அடைந்தவள் என்பதை உணர்ந்து அவன் மனம் மாறாதா இல்லை வேறுவிதமாய் யோசிக்காதா?

முன்பு அவன் அவளை விரும்பியது மனம் உருகக் காதலித்தது பற்றியெல்லாம் நினைத்து ஒரு முடிவுக்கு வருவானா?

இல்லை... இவள் நடிப்புக்காரி.... சாகஸக்காரி...என நினைத்து வெறுத்தது ஒதுக்கி விடுவானா?

அவன் முன்பு சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் எதிரொலித்தது.

இந்த அழகை வைத்துக் கொண்டுதானே என்னை மயக்கினாய்? நானும் காணாததைக் கண்டது போல் உன்னிடம் மயங்கித் தொலைத்திருக்கிறேனே!

வேதனையும் வெறுப்புமாய் அவன் மனதில் அவளுக்கு இடம் கொடுத்து விட்டதைப் பற்றி நொந்தபடி அவன் வெளியிட்ட வார்த்தைகள் அல்லவா அவை!

அவ்வளவு தூரம் நம்மை நேசித்திருக்கிறானா? அவன் இதயத்தில் அவளுக்கு இடம் கொடுத்து பூஜிக்க அல்லவாசெய்திருக்கிறான்!

அவளும் அதுவரை காதல் வேஷம் போட்டவள் அவன் நல்லவன் என்ற உண்மை தெரிந்ததும், உண்மையிலே தன்னை விரும்புகிறான் என்பது தெரிந்தும் துடிக்கத்தானே செய்தாள்!

அந்த நிமிடம் அந்த நொடியில் இருந்து அவன் மேல் அளவு கடந்த அன்பு வந்து விட்டதுதானே!

அன்பு என்ன அன்பு....? அது.... அது... காதல் தானே! என்ன காலம் கடந்த காதல்! எல்லாம் முடிந்த பிறகு வரும ஞானோதயம்!

அதுத்தபடி நடந்தவள்... ஒரு கணம் நினைப்புகளை நிறுத்தினாள்.



என்ன... இது....? நடந்தவைகளையே நினைத்து.... சதா மனதால் புலம்பிக் கொண்டு...?

ம்ஹூம்! இனி நடப்பவைகளைப் பார்ப்போம்!

முதலில் சிங்காரி.... முன்னால் போய் இதே கோலத்துடன் நிற்க வேண்டும். அவளை நம்ப வைக்க வேண்டும்.

அதுதான் முக்கியம்.

சிங்காரி சாகஸக்காரி மட்டுமல்ல கெட்டிகாரியும் கூட.

அவளை லேசில் நம்பி விட மாட்டாள்.

அவள் நம்புவது போல் நடிக்க வேண்டும்.

எப்படி நடிப்பது?என்னவெல்லாம் பொய் சொல்வது?

மனதில் ஒரு கணம் சில பேச்சுக்களை டயலாக்குகள் போல் ஓடவிட்டு ஒத்திகையும் பார்த்துக் கொண்டாள்.

சிங்காரி...குமார் இண்டஸ்ட்ரீஸ் குமாருடன் அவரது பங்களாவில் இருப்பதாய் தகவல் அறிந்தாள்!

அந்தக் குமாரின் பங்களா நகரின் உயர்ரக குடியிருப்பான லயன்ஸ் காலனியில் இருந்தது. அட்ரஸ்ஸை விசாரித்தவள் ஒரு ஆட்டோ பிடித்து லயன்ஸ் காலனிக்குள் நுழைந்தாள்.

ஆட்டோவிற்கு முப்பது ரூபாய் பணம் போக கையில் சிறிய மணி பர்ஸில் எஞ்சியிருந்தது இருபது ரூபாய் மட்டுமே. பசி வயிற்றைக் கிள்ளவும் எதிரே தெரிந்த டீக்கடை ஒன்றில் ரொட்டியும் டீயும் வாங்கி வயிற்றை நிறைத்தாள். இப்போது கையில் இருப்பது பத்து ரூபாய் மட்டுமே. உள்ளபடியே.... உண்மையாகவே இப்போது அவளது சொத்து அந்த பத்து ரூபாயும் அந்த பழைய டிரங்குப் பெட்டியும்தான்!

ஒரு கணம் சிங்காரி ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என பிடிவாதம் பிடித்தால் என்ன செய்வது? என்ற பயமும் எழுந்தது.

அழுது கண்ணீர் விட்டு காலைப் பிடித்து கெஞ்சியாவது...? பெண்ணிற்காக பேயே இரங்கும் என்று சொல்கிறார்கள். இந்த சிங்காரி இரங்க மாட்டாள்?

அப்படி இரங்காவிட்டாலும் அவனை வைத்து சூத்ரதாரியாய் ஆடிய... அந்த குமார் இன்டஸ்ட்ரீஸ் குமார்.. அவளைப் பார்த்தது கூடக் கிடையாதே! வேறு வழியில்லை என்றால்.. அவனிடம் கெஞ்சி அவன் காலைப் பிடித்தாவது உள்ளே நுழைந்து விட வேண்டும்!


சினிமாப் படங்களில் ஜேம்ஸ்பாண்ட் செய்வது போல் இஐடி வேலைதான்! எத்தனுக்கு எத்தன் ரகம்தான்!

யோசித்தபடியே திரும்பவும் நடந்தான். நெம்பரைப் பார்த்து பங்களாவைக் கண்டுபிடித்தாள்.

பங்களா... பெரும்பரப்பளவில் முன்புறம் குரோட்டன்ஸ், மணிப் ப்ளான்ட் என விதவிதமான செடிகளும் ஆள் உயர மரங்களும் மறைந்திருக்க... குளுமையாய் பிரும்மாண்டமாய்த் தெரிந்தது. போர்டிகோவில் விலையுயர்ந்த கார்கள் சாதுவாய் நிறுத்தப்பட்டிருந்தது.

தன்னை எக்கேடும் கெட்டுப் போ... என தவிக்க விட்டு விட்டுஇந்தச் சொகுசான பங்களாவில்தான் சிங்காரி சிங்காரமாய் வாழ்க்கை நடத்துகிறாளா? காலிங் பெல்லில் கை வைத்து கோபமாய் அழுத்தினாள்மதுமதி.

உள்ளிருந்து... பெரிய தேக்குமரக் கதவைத் திறந்தபடி வந்தது.. சிங்காரி.. சிங்காரியேதான்!



## 12

விலையுயர்ந்த சேலை, கை நிறைய தங்க வளையல் ஜொலிப்பு, ஃபேஸ் க்ரீம், லிப்ஸ்டிக் என பர்ஃப்யூம்கள், குட்டையாய் வெட்டப்பட்டு அழகாய் பாப் கட் செய்யப்பட்ட முடி...பணக்காரர்களுக்கே உரித்தான ஒய்யார நடை... அப்படி... ஒரு நடை போட்டு ஸ்டைலாய் வருவது... சிங்காரியா....? நம் அக்கா சிங்காரிதானா?

கண்களை விரித்துதான் மதுமதி நம்ப முடியாமல் பார்த்தாள்.



சந்தேகமில்லை... சாட்சாத் அது சிங்காரியே தான்!

ஒரே நாளில்... அதுவும் இருபத்தி நாலு மணி நேரத்திடில்.. பரம்பரை பணக்காரி போல்... கோடீஸ்வரி போல் அல்லவா ஆகி விட்டாள்! அந்த நடை... அந்த மிடுக்கு...!

திக்கான அரக்கு கலர் சேலை ஒன்றை சுற்றிக் கொண்டு, சாயம் போன ஹாண்ட் பேக்குடன் தனது மாநிறத்தை மாற்ற ஒரு வண்டி பவுடரை அப்பியபடி நடந்த அந்த சிங்காரியா இவள்? எப்படி.... எப்படி... மாறிவிட்டாள்? எல்லாம்.... பணம்! பணம் படுத்தும் பாடு...!

அவள் திகைத்தது போலவே....அவளை அங்கு சற்றும் எதிர்பார்க்காத சிங்காரியும் அதிரத்தான் செய்தாள்!

அதுவும்மதுமதி பெட்டியும் கையுமாய் நின்றது அவள் நிலையை உணர்த்தியது.

நெற்றியில் சிந்தனைக் கோடுகள் தாக்க.... ஒருகணம் அப்படியே ஸ்தம்பித்துதான் நின்றாள்.

தன்னைப் பார்த்ததும் ஆசையாய், மதுக்குட்டி.... என ஓடிவரும் சிங்காரியா இப்படி பேதலித்தவள் போல் திகைத்து நிற்பது? பாவி, கேட்டைத் திறப்பதா...இல்லை அப்படியே விரட்டி விடுவதா.... என நினைக்கிறாளோ! அப்படியானால்..... இவ்வளவு நாள் ஆசை வார்த்தைகளைச் சொல்லி அன்பு காட்டியது எல்லாம் வேஷமா?

தனக்கு ஒரு நல்ல சொகுசான வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்பதற்காக போடப்பட்ட நடிப்புதானா?

அவளுக்கு அப்படி வேஷமும் நடிப்பும் போடத் தெரியும்போது... அவள் கூடப் பிறந்த தங்கை அவளுக்கு மட்டும் நடிக்கத் தெரியாமல் போய் விடுமா?

அக்கா.... என பாசமாய் கத்தியபடி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே ஓடினாள் மதுமதி.

சிங்காரி இப்படி கல் மனதாய் நடப்பதை எண்ணியதாலோ... என்னவோ அவள் கண்களிலும் நீர் கசிந்தது. பொலபொலவென சிங்காரி கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்அவள்.

அவள் நினைத்தது போலவே...அவளதுசெய்கை நடவடிக்கை எல்லாம் சிங்காரியைத் திகைப்படையச் செய்திருந்தது.

அக்கா.... என பாசமாய் விளிக்கிறாள்! ஆசையாய் வந்த கட்டிக் கொள்கிறாள்...!

இவளுக்க.... கோபம் வரவில்லையா? நம் மீது ஆத்திரம் கொள்ளவில்லையா?

அப்படியானால்.... நமதுசுயரூபத்தைஇவள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லையா? பாசமான அக்காவாகத்தான் நம்மை இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறாளா?

சிங்காரி கண்களை இடுக்கி... தன்னைக் கட்டிக்கொண்டு அழும் மதுமதியையே உற்றுப் பார்த்தாள்.

சரிதான்....! மதுமதி இன்னும் பாசமாய்த்தான் இருக்கிறாள்! அவளுக்க தான் நடித்து ஏமாற்றியது எவ்விதத்திலும் கோபத்தை ஏற்படுத்தவில்லை! எப்படி.... எப்படி.... இது சாத்தியம்? என நினைத்தாள்.

அதிலும் மதுமதி கழுத்தைக் கட்டிக் கொண்டு விசித்து அழுதது--இவள் நிஜமாகவே நம் மீது ரொம்பவும் பாசம் வைத்திருக்கிறாள். போலவே... என அவளை திகைப்படையவும் செய்தது.

இவளை எடுத்தெறிந்து பேசி விரட்டுவது சாத்திய மில்லையே... என்ன செய்வது? என அவள் குழம்பினாள்.

அவள் அப்படிக் குழம்புவது தெரிந்தே மதுமதி தன் நடிப்பையும் கூட்டினாள்

அக்கா... அக்கா... அவர்....அந்த மகேந்திரன்.... விஷயம் தெரிந்ததும்.... என்னை.... என்னை அடித்து விட்டார். அக்கா... சொல்லியபடி கேவலுடன் ஆரம்பித்து. ஒரு விக்கலும் விக்கினாள் அவள்.

என்ன... என்ன.... அடித்தாரா... நிஜமாகவா?

ஆமாம்.. அதுவும் செவிட்டில்! படபடவென பலமான அடிகள்! அதைவிட... அவர்... அவர்... என்னை... என்ன செய்ய நினைக்கிறார் தெரியுமா?

என்ன... செய்ய... நினைக்கிறார்? ஒன்றுமே தெரியாத அப்பாவி போல் சிங்காரி கேட்டாலும் பதட்டம காட்டினாள் மதுமதி.





என்னை... என்னை.... கொன்று விடத் துடிக்கிறார். அவரால் முடியாவிட்டாலும்.. கூலி ஆட்களை விட்டு ஏவியாவது... என்னைக் கொலை செய்து விடுவாராம். உலகத்தின் எந்த மூலைக்குப்போனாலும் விடமாட்டாராம்.... அவருக்கு பயந்துஅவரிடம் இருந்து தப்பித்து... பெட்டியும்கையுமாக ஓடி வந்து விட்டேன்....

திக்கித் திணறி வேண்டுமென்றே மூச்சு வாங்கி சொல்லி முடித்தாள் மதுமதி.

அதற்குள் பேச்சு அரவம் கேட்டு உள்ளிருந்து வாட்ட சாட்ட உருவத்துடன் இடுங்கிய கண்களுமாய் தாடியுடன் வெளிவந்தான் அவன்.

மதுமதி அவனை உற்றுப் பார்த்தாள்.

அவளுக்குப் புரிந்து விட்டது!

மகேந்திரன்...அவளிடம் எடுத்டதுக் காட்டி புகைப்படம் ஒன்றில் சிங்காரியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு நின்றவன் இவன்தானே?

அப்படியானால்.... அந்தக் குமார் இண்டஸ்ட்ரீஸ் குமார் இவன்தானா?

தொழிலில் நேரடியாய் போட்டிபோடுவதை விட்டு விட்டு பேடித்தனமாய் பெட்டைத்தனமாய்...பெண்ணை விட்டு ரகசியங்களை எடுத்து வரும்படி சிங்காரியிடம் சொன்ன கதாநாயகன் இவன்தானா?

இந்த நீளமான மூஞ்சும், குப்பை போன்ற தாடியும், இடுங்கிய கண்களும்...இவன்தான் சிங்காரியின் காதலனா....?இந்த மூஞ்சியை எப்படி இந்தச் சிங்காரி ரசித்தாள்...? காதலித்தாள்?

எல்லாம் இவனிடமுள்ள பணம். அதுதான் காரணமாயிருக்க வேண்டும். அதைக் கண்டுதான் சிங்காரி மயங்கியிருக்க வேண்டும்.!

அதற்கு மேல் மதுமதி யோசிக்க விடாதபடி பெரிதாய் தொண்டையை கனைத்தபடி வந்த குமார் இருவரையும் மாறி மாறி பார்க்க ஆரம்பித்தான்.

மதுமதி சட்டென யோசித்தவள்,இவன் சிங்காரியிடம் கேட்டு விஷயத்தை புரிவதற்குள் நாமே இவனுக்கு உணர்த்திவிட வேண்டும் என முடிவெடுத்தாள்.



அதனாலே மறுபடியும் கேவி ஒரு பெரிய விம்மலுடன் அழுகையை வரவழைத்து சிங்காரியின் கழுத்தை கட்டினாள். பாரக்கா, அந்த மகேந்திரன் உண்மை தெரிந்த என்னை அடித்து துரத்தி விட்டார். என்னைக் கொன்று விடுவதாக மிரட்டுகிறார். இனி எனக்கு... நீதான் கதியக்கா? உன்னைவிட்டால்...என்னைக் காப்பாபற்ற...எனக்கு அபயம் கொடுக்க.. யாருமில்லை! உன் காலடியே கதி... என இருக்கிறேன்க்கா!

மதுமதி தான் படித்த கதைகள் பார்த்த சினிமாக்களில் இருந்த ட்யலாக்குகளை எல்லாம் ஞாபகப்படுத்தி தன் பேச்சில் கொஞ்சமும் சந்தேகம் வராதபடி நடிக்கத்தான் செய்தாள்.

எல்லாம் பேசி முடித்து விட்டு சிங்காரியின் முகத்தை. முகக் குறிப்பை அறிய லேசான விழியோர பார்வை பார்த்தவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

இவள் இவ்வளவு சொல்லியும் இவ்வளவு கெஞ்சியும் முகம் குறிப்பை லேசான விழியோர பார்வை பார்த்தவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

அவள் இவ்வளவு சொல்லியும்இவ்வளவு கெஞ்சியும் அவள் இளகவில்லை. பபாறை போல்தான் முகம் இறுகிக் கிடந்தது. பாவி, இவ்வளவு கல் நெஞ்சமா உனக்கு?

ஆனால் பக்கத்தில் நின்ற குமார் எல்லாவற்றையும் சட்டென புரிந்து கொண்டவன், தன் கண்களை கழுகுப்பார்வை போல் ஆக்கி மதுமதியை நன்கு உற்றுப் பார்த்தான்.

உண்மையில் அவன்இப்போதுதான் மதுமதியை முதல் முறையாக பார்க்கிறான்.

ஏதோ இந்தச் சிங்காரியின் தங்கை. அவளை வைத்து மகேந்திரனிடமிருந்து ரகசியங்களை பெறப் போகிறோம்..என தொழில் ரீதியாகவே இருந்து விட்டதால் மதுமதி பற்றி அவன் தெரிந்து கொள்வதில் முன்பு ஆர்வம் காட்டவில்லை.

ஆனால்... இப்படி ஆளை வீழ்த்தும் அபார அழகுடன் தங்கையாய் ஒருத்தி வந்து நிற்பாள் என அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! அதுவும் இப்படிக் கேவி அழும்போது கூட... என்னமாய் அந்த அழகு... ஜொலிக்கிறது. இவள் மட்டும் சிரித்தால்... அந்த முத்துப் பல் புன்னகையில் அழகு எப்படி இருக்கும்? என அவனுக்கு புத்தி [illegible]

அதனாலே... அவள் இரண்டு கண்களையும் நன்கு விரித்து உற்றுப் பார்த்தாள். அதைக் கவனித்த மதுமதி. சரியான... சமலக்கேஸ்.. மச்சான்தானே! என முடிவுக்கு வந்தவள் இந்த அக்காப் பேயிடம் இப்படிக் கெஞ்சிக் கொண்டிருப்பதை விட இவனிடம் சுலபமாய் காரியத்தை சாதித்து விடலாம் போல என தீர்மானித்தாள். அதனாலே, நீங்களே சொல்லுங்கள் அத்தான், அந்த மகேந்திரன் உண்மை தெரிந்து என்னை விரட்டுகிறார். அவரிடம் தப்பித்து உயிருக்கு பயந்து நோன் ஓடி வந்திருக்கிறேன். இனி நான் எங்கே போக முடியும்? நீங்களே சொல்லுங்கள் அத்தான்!

அவள் மறுபடியும் அந்த அத்தானில் வேண்டுமென்றே அழுத்தம் கொடுத்து உச்சரித்தாள்.


அவள் நினைத்த மாதிரியே அந்த ஒரு வார்த்தை அத்தானில் அவன் குமார் அடித்தான் போயிருந்தான்! மயில்... இவ்வளவு அழகு என்று பார்த்துக் கொண்டிருந்தால், அத்தான் என அது கூப்பிட்டு தோகை விரித்துஅல்லவா அவன் முன்ஆட ஆரம்பித்து விட்டது. இனியும் இடிதத புளி போல் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதா..? டக்கென... சிங்காரியின் தோள்களைத் தட்டினான் அவன்.

என்ன... இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? உன் தங்கையின் இந்த நிலைக்கு நாம் தானே காரணம்? அவள் வேறு எங்கு போவாள்..? இங்கு நம்முடனே தங்கட்டும்!

அவன் அப்படி முத்து உதிர்த்ததும்தான் மதுமதிக்கு மூச்சே வந்தது. அப்பாடா! போட்ட நாடகம்... செய்த அழுகை வீண் போகவில்லை! நம்மை நம்பி விட்டார்கள்... வீட்டினுள் நுழைய வழி கிடைத்து அதுபோதும்!

ஆனால்... சிங்காரியின் நம்ப முடியாதவளாய் மதுமதியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

என்ன இருந்தாலும்அவளுக்கு தன் தங்கையை தங்கையின் குணத்தைப் பற்றித் தெரியாதா? அவளாவது லேசில் அழுகிறதாவது!



## 13

சிங்காரி மதுமதியை நம்பவில்லைதான்!



ஆனால் சூழ்நிலை அவளை நம்பவைத்தது. அவள் நம்பித்தான் ஆக வேண்டும்

வேறு வழியில்லாமல் தன்னை அணைத்துப் பிடித்திருந்தவளை, முதல் முறையாக கைகளை அனுப்பி அவளும் தோளோடு அணைத்துப் பிடித்தாள்.

மதுமதி அந்த அவளின் அணைப்பை வேண்டா வெறுப்பாய்த்தான் பார்த்தாள்.

என்ன பெண் இவள்! தன் வாழ்க்கையையே சீரழியும் அளவுக்கு நாடகமாடி துரோகம் செய்திருக்கிறாள். அதுவும் உடன் பிறந்த சொந்தத் தங்கையிடம்! கொஞ்சமாவது...உறுத்தல்.... ஒரு குற்ற உணர்வு கூட இல்லையே!

இனி.. என்னுடனே... இரு... நான் உன்னை பார்த்துக் கொள்கிறேன்.. என்றாள் சிங்காரி.

அவள் எதிர்பார்த்த முத்து வார்த்தைகளை இப்போதாவது உதிர்த்தாளே... என்றுதான் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டும். என்று நினைத்த மதுமதி தன் பங்கிற்கு, ரொம்பவும் நன்றியக்கா. என்றாள் உணர்ச்சிக்குரலில்.

அத்தோடு குமார் தன் பங்கிற்கு பெரும் தலையாட்டலுடன் அவள் டிரங்குப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடப்பது தெரிந்தது.

அதைக் கவனித்த சிங்காரியின் முகம் சட்டென கடுகடுத்தது.

அதைக் கொடுங்கள் இப்படி! அவளே தூக்கி வருவாள்! என்றாள்.

குமார் நீட்ட... அதை பவ்யமாய் வாங்கிக் கொண்டு நடந்தாள் மதுமதி.

பங்களாவின் உள்ளே.. விஸ்தாரமான ஹால்... பொய பெரிய அறைகள்... விலையுயர்ந்த விளக்குகள், கம்பீரமான குஷன் மெத்தைகள்... சீருடையில் பணியாட்கள்...

சரிதான்! சிங்காரி இங்கு மகாராணி போலத்தான் வாழ்க்கை நடத்துகிறாளே!

சட்டென ஏதோ ஞாபகம் தாக்க... திரும்பி சிங்காரியின் கழுத்தைப் பார்த்தான்.

கெட்டியான முறுக்குத் தங்கத்தில் தாலி!

அட... கல்யாணமும் கட்டியாயிற்று..? சரிதான்... நீ பலே ஆள்தான்! புளியங்கொம்பு போல் ஒரு பணக்கார இளிச்சவாயனைப் பிடித்து.. கழுத்தில் தாலியும் கட்ட வைத்து விட்டாயே!

அவள் கழுத்தில் பார்ப்பதின் பார்வையை உணர்ந்து சிங்காரி புரிந்து கொண்டவள், கல்யாணம் ஆகி விட்டது. அவசரக் கல்யாணம்! என்றாள் அதே அவசரக் குரலில்.

எனக்குக் கூட சொல்லாமல் கல்யாணம் செய்து கொண்டாயா?

பொங்கிய குமுறலை அடக்க முடியாமல்தான் அந்தக் கேள்வியைக் கேட்டாள் மதுமதி.

அவள் சிங்காரிக்கா சமாளிக்கத் தெரியாது.

பார்... மது.... என மறுபடியும் தோளோடு அவளை அணைத்து பாசத்தைக் காட்டியவள், ரொம்பவும்சிம்பிளாய் நாங்கள் செய்த கொண்டோம். அவரது பிசினஸ் நண்பர்கள் தவிர வேறு யாரும் வரவில்லை.. என்றவள், சரி... அதை விடு.... என பேச்சையும் மாற்றினாள்.

அந்த... மகேந்திரன் ரகசியங்களை நீ திருடியது தெரிந்ததும் ரொம்பவும் ஆத்திரப்பட்டிருப்பானே?

அவள் மகேந்திரனை அப்படி அலட்சியமாய் ஒருமையில் விளித்துப் பேசியதை மதுமதி ரசிக்காதவளாய் வெறும் தலையை மட்டும் ஆட்டினாள்.

கூடவே அவளுக்கு இன்னொரு சந்தேகம்.

அந்த பேரிங்குகள்... பற்றிய... ரகசிய... பைல்கள் அது எங்கே...? என்ன செய்தீர்கள்? என்றாள். சிங்காரி கைகளை விரித்தாள்.

அதைக்கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்தாயிற்று....

கொடுக்க வேண்டியவர்களா...? அப்படியானால் அது... உனக்கு உங்களுக்கு தேவைப்படாதா?

மது.. அந்த ரகசிய பைல்களை வைத்து மகேந்திரன் உற்பத்தி செய்யும் பேரிங்குகள் போல் டூப்ளிகேட் பேரிங்குகள் செய்து அவன் பிசினஸ் சாம்ராஜ்யத்தை தரைமட்டமாக்குவதுதான் எங்களது திட்டம். ஆனால் அந்த டூப்ளிகேட் பண்ணும் வேலையை நாங்கள் செய்ய வேண்டியது இல்லை. எத்தனையோ உப்புமா கம்பெனிகள் சிறு முதலீட்டில் தொழில் செய்வோர் இருக்கிறார்கள். அவர்களிடம் கொடுத்தால்... அவர்கள் உடனே அதே போல் டூப்ளிகேட்டை உருவாக்கி சந்தையில் விட்டு விடுவார்கள். அதனால் குமார் அந்த ரகசிய பைல்களை அப்படி டூப்ளிகேட் தயாரிக்கும் ஒருவருக்கு உடனே கொடுத்து விட்டார். அவரும் தயாரித்து இந்நேரம் போலி பேரிங்குகள் சந்தைக்குப் போயிருக்கும்...



அப்படியானால் அந்த மகேந்திரனின் தொழில் அந்த பேரிங்குகளின் விற்பனை அப்படியே பாதிப்படைந்து விடுமா?

பாதிப்படைவத... என்ன...? சுத்தமாய் விற்காமல் போய்விடும். அந்த மகேந்திரன் வேறு வழியில்லாமல் கம்பெனியையே இழுத்து மூடும் நிலைக்குப் போய்விடுவான். எப்படியும் ஒரு மூன்று மாதங்களுக்குள் அவன் வாடிக்கையாளர்களை, விற்பனையாளர்களை எல்லாம் இழந்து தொழிலே செய முடியாயத அளவுக்கு தள்ளப்பட்டிடுவான்.

சரி, இதனால் என்ன லாபம்?

மதுமதி அப்பாவியாய் கேட்க சிங்காரி தன் நெற்றியில் ஸ்டைலுக்காக புதுசாய் புரள விட்டிருந்த முடிகளை தள்ளியபடி பார்த்தாள். என்ன அப்படிக் கேட்டு விட்டாய்? அந்த மகேந்திரன் தனது கம்பெனிதான் தரமானது நெம்பர் ஒன் என ஜம்பமடித்துக் கொண்டிருந்தான். எங்களிடம் சவால் கூட விட்டிருந்தான்....

சவாலா....?

சவால்தான்! தன்னை யாரும் பிசினஸில் ஜெயிக்க முடியாது என்ற சவால்தான்... ! அந்த சவாலைத்தான் என் குமார் ஏற்றுக் கொண்டு அவனுக்கு பதிலடி கொடுக்கும் விதமாய் உன் மூலமாய் பைல்களை எடுத்து டூப்ளிகேட் பேரிங்குகள் தயாரிக்கவும் ஏற்பாடு செய்த விட்டார். இனி மகேந்திரன் அவ்வளவுதான். என் குமாருக்கு இனி போட்டியாளரும் கிடையாது. பிசினஸ் எதிரிகளும் கிடையாது. அவர்தான் பேரிங்குகளின் உற்பத்தியில் நெம்பர் ஒன். நினைத்ததைச் சாதித்து விட்ட சாதனையாளர்...

சிங்காரி குமாரை பெரும் சாகஸம் செய்து விட்டது போல் தூக்கி பேசியது மதுமதிக்கு எரிச்சலையே கிளப்பியது.

அதனாலே அவளுக்கு உரைக்க வேண்டும் என்பதற்காகவே சொன்னாள்.

என் மூலமாகத்தானே?

உன் மூலாமாகத்தான்! ஆனால்... உன்னை டைரக்ட்... செய்து... உனக்கு வழிகாட்டி போல் இருந்து செய்ய வைத்தது நான்தானே ! என அதற்கும் சிங்காரி பதிலடி சொன்னாள்.

ம்ஹூம்! திருடக் கற்றுக் கொடுத்து விட்டு அதில் நான்தான் கற்றுக் கொடுத்தேன் என்ற ஜம்பர வேவறா? என உள்ளுக்குள் அலுத்தவள் அதை வெளிக்காட்டாமல் தலையை மட்டும் அசைத்தாள்.

அத்தோடு அந்த பேச்சையும் நிறுத்தினாள். அவளுக்கு இப்போது நடந்த விஷயங்களின் முழுப் பின்னணியும் புரிந்தது.

குமார், மகேந்திரனின் தொழில் வளர்ச்சியைக் கண்டு ஜீரணிக்க முடியாமல் பொறாமைப்பட்டு இப்படியொரு மட்டரகமான காரியத்தைச் செய்ய நினைத்திருக்கிறான். அவனது ஆசைக்கு அவனது அன்புக் காதலி சிங்காரியும் சம்மதித்து இருவரும் பிளான் போட்டிருக்கிறார்கள். சொந்தத் தங்கை என்றும் பாராது அவளையே பகடைக்காயாய் மகேந்திரனிடம் அனுப்பி... காரியத்தை சாதித்திருக்கிறாள் சிங்ககாரி.

யோசித்துப் பார்த்த மதுமதிக்கு சிங்காரியைப் பார்த்து அந்தக் கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை. அடக்க முடியாமலே கேட்டாள்.

இதற்கு... நீ... ஏன் என்னிடம் பொய் சொல்லி நடிக்க வேண்டும்? என்றாள் அவளை நேருக்கு நேராய் கண்களைப் பார்த்தபடி.

பொய்யா...? எதைச் சொல்கிறாய்? என்றாள் புரியாதவள் போல் சிங்காரி.

அதாவது... மகேந்திரனை நீ காதலித்ததாகவும் அவர் உன்னை ஏமாற்றி விட்டதாகவும்... என்னிடம் சொன்னது...

அவள் மேற்கொண்டு பேசுவதற்குள் கடகடவென பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டது போல் சிரித்தாள் சிங்காரி.

என்ன சிரிக்கிறாய்?

அது வேறு ஒன்றுமில்லை.... ஒரு சிறிய காரணத்திற்காகத்தான்... என்றாள் பீடிகையாய்.

சிறிய காரணமா?

ஆமாம்.. நீ சின்னப் பெண்... உலக விஷயங்களில் எல்லாம் உனக்கு அவ்வளவு புரியாது. அதிலும் பிசினஸ் விஷயங்கள் எல்லாம் சுத்தமாய் உனக்குப் பிடிபடாது. அதனாலே அப்படி ஒரு பொய்யை சொன்னேன்... உன்னை நடிக்கச் செய்தேன். இதில் தவறேதும் இல்லையே...? என கைகளை விரித்து அலட்சியமாய் சிரிக்கவும் அவளையே உறுத்துப் பார்த்தாள் மதுமதி.

அவள் தன்னையே அப்படி உறுத்துப் பார்ப்பதை குறுகுறுப்பாய் உணர்ந்தவள், ஏன் இந்த அக்காவிற்காக... இது கூட செய்ய மாட்டாயா... மது...? என்றாள் குரலில் பெரிதாய் பாசத்தைக் காட்டுவது போல்.

அவளின் பேச்சைக் கேட்ட மதுமதிக்கு ஆத்திரமே வந்தது. அக்காவிற்காக இதைக் கூட செய்ய மாட்டாயா...? இதே வார்த்தைகளைத்தானே அப்போது மகேந்திரனிடம் நடிக்கச் சொன்னபோதம் உருக உரகச் சொல்லி சம்மதிக்க வைத்தாள்.?

பாசத்தைக் காட்டி வேஷம் போட்டு விட்டு அதை நியாயப்படுத்தவும் பார்க்கிறாளே? என்று நினைத்தவள், இவளை நாசூக்காய்



பேசி தப்பிக்கப் பார்க்கும் இவளை விடக் கூடாது. நன்றாக குட்ட வேண்டும் என நினைத்தாள்.

அதனாலே, எல்லாம் சரியக்கா, ஆனால் என்னை அப்படி அம்போ என விட்டுவிட்டு ஒரு லெட்டரில் எழுதி வைத்துவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் இரவோடு இரவாய் ஓடி வந்துவிட்டாயே... அது எதற்கு? பதில் சொல்! என்றாள்.

ஆனால் சிங்காரியாவது... பேச்சில் அசருகிறதாவது?

என்ன... நான் உன்னை அம்போ எனவா விட்டு விட்டேன்? இல்லையே... நீ எப்படியும் என்னைத் தேடி வருவாய் எனத் தெரியும். அதனால் காத்திருந்தேன். நீயும் வந்தவிட்டாய்... உன்னை என்னோடு சேர்த்துக் கொண்டேன். இப்போது புரிகிறதா? பெரிதாய் கைகளை நீட்டி மடக்கி அவள் சிங்காரி சொன்னபோது எந்தவித உணர்ச்சியுமில்லாமல்தான் அதைப் பார்த்தாள் மதுமதி.

அவள் இன்னமும் தன்னை நம்பவில்லை என்பதைப் புரிந்து கொண்ட சிங்காரி, யோசித்துப் பார் மது. இந்த அக்கா... எது செய்தாலும்... உன் நன்மைக்காக உன் வளர்ச்சிக்காகத்தான் இருக்கும். இப்போது பார், அக்காவான நான் உனக்கு இருக்கிறேன். என்னுடைய அரவணைப்பில் உனக்கு எல்லாம் கிடைக்கும்! போதுமா? எனவும் மதுமதிக்கு திடுமென அந்த ஞாபகம் வந்தது.

ஆனால்... எனக்கு வேலை போயிற்றே! இனி புதிய வேலை ஒன்றைத்தான் தேட வேண்டும்! என்றாள் வேண்டுமென்றே சலிப்பான குரலில்.

அவள் நினைத்த மாதிரியே அதற்கு சட்டென பதில் சொன்னாள் சிங்காரி.

நீ ஏன்... வேறு எங்கோ போய் வேலை தேடி அலைய வேண்டும்? நம் அத்தான் கம்பெனியிலேயே ஒரு வேலையைப் பார். அது உனக்குப் போதாதா?

அவள் சொன்னதும் ஆஹா! இதைத்தானே எதிர்பார்த்தேன்! வலையில் மீன் வசமாக மாட்டுகிறது! விடக் கூடாது! அப்படி மாட்டினால்தான் குமாரின் அலுவலகத்தில் நுழைந்து அந்த மகேந்திரன் சொன்ன பைல் ரகசியங்களை திருட முடியும்! செய்த பாவத்திற்கு பரிகாரத்தை தேடிக் கொள்ளவும் முடியும்!

சந்தோஷம் கொண்டவளாய், ரொம்பவும் நன்றியக்கா... ! என்றாள் குரலில் உணர்ச்சியோடு பேசுவது போல்.

சிங்காரியோ மதுமதி தன் பாசத்தைக் கண்டு இறங்குகிறாள்... என நினைத்தவள் தொடர்ந்து. அத்தோடு என் வேலை முடிந்து விடாது மது. உனக்கு நல்ல வரன் பார்த்து கட்டி வைக்க வேண்டியதும் என் பொறுப்பு தான்! என்றாள்.

அதுவரை பக்கத்தில் நின்று பேசாமல் அவர்கள் பேசுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த குமாரும் தன் திருவாயைத் திறந்து அது என் பொறுப்பும் கூட! என்று அழுத்தமாய் உச்சரிக்க மதுமதி திரும்பி அவனை உற்றுப் பார்த்தாள்.

அப்போதுதான் அவளும் அதை கவனித்தாள். குமாரின் கண்கள் அடிக்கடி அவள் மேல் திருட்டுத்தனமாய் பார்வையை பதித்து விலகுவது தெரிந்தது. இனி காய்களை எப்படி நகர்த்த வேண்டும் என்பதும் புரிய ஆரம்பிக்க... மதுமதியின் இதழ்களில் குறுநகையொன்று மெலிதாய் படர ஆரம்பித்தது.



## 14



மதுமதி நினைத்த மாதிரியே எல்லாம் நடந்தது. குமாரின் பிரம்மாண்டமான பங்களாவில் அவளுக்கென ஒரு சிறிய அறை தங்கிக் கொள்ள ஒதுக்கப்பட்டது.

குமார் தாராள மனதுடன் பெரிய அறை ஒன்றைக் காட்ட, வேண்டாம், வேண்டாம்... பெரிய அறையில் தனியே தங்குவதற்கு அவள் பயப்படுவாள்! என சிங்காரி அவசரமாய் மூக்கை நுழைத்தாள்.

சரி.. குளிர் வசதி செய்யப்பட்ட ஏஸி அறையில் தங்கட்டும் என்ற போதும் குறுக்கே வந்து. ஏ.ஸி. எல்லாம் அவளுக்கு ஒத்துக் கொள்ளாது. சாதாரண சிறிய அறை ஒன்றே போதும்! என சிங்காரி சொல்லி.. பங்களாவின் ஓரமாய் இருந்த பழைய குப்பைகள் நிறைந்த அறையொன்றை செலக்ட் செய்து மதுமதியை தங்கிக் கொள்ளச் சொன்னாள்.

அன்புத் தங்கையல்லவா... பின் இப்படித்தானே அன்பைக் காட்ட முடியும்... ! என மனதுள் இகழ்வாய் நினைத்தாலும் புன்னகையுடன் தலையாட்டினாள் அவள்.

தங்குமிடமா... முக்கியம்? செய்யப் போகிற வேலைதானே முக்கியம்! இரு... சிங்காரி... இந்த முறை உனக்கு நன்றாகப் பாடம் புகட்டுகிறேன். உனது புத்தியை தெளிய வைக்கிறேன்!



மனதுள் உறுதியெடுத்துக் கொண்டாலும் எதையும் வெளியே காட்டாதவளாய்த்தான் நடமாடினாள் அவள்.

முதலாம் நாள் சாதுவாய் வீட்டில் அடங்கிக் கிடந்து விட்டு மறுநாள்.. டூத் பேஸ்ட், ஐ லைனர், என சில பொருட்கள் வாங்க வேண்டும் என்று சிங்காரியிடம் பொய் சொல்லிவிட்டு, தனியாக வெளியே கிளம்பினாள்.

வெளியே வந்ததும் முதல் வேலையாய் காயின் பாக்ஸ் தொலைபேசி மூலம் மகேந்திரனை தொடர்பு கொண்டாள்.

அது மகேந்திரனின் பிரத்யேபோன் என்பதால் அவனே எடுத்தான். அவன் கேட்க ஆரம்பிக்கும் முன்பே படபடவென விஷயத்தைக் கொட்டினாள் அவள்.

மூச்சு வாங்க அவள் சொன்னதும், பலே... ! பலே... ! என உற்சாகமாகி முதலில் வெகுவாய் பாராட்டுவது போல் பேசியவன், பின், நீ என்ன சும்மாவா? என்னையே நடித்து மயக்கியவளாயிற்றே! சரியான நல்ல பாம்பின் கவர்ச்சி உனக்கு! உன் அழகு முன் உன் அந்த அபாரநடிப்பு முன்.. குமார் எல்லாம் வெறும் தூசுதான்.. ! என பாராட்டுரையே வஞ்சப் புகழ்ச்சியாக்கி அவன் பேச அவள் மருகத்தான் செய்தாள்.

நல்ல பாம்பு கவர்ச்சியாமே! அவ்வளவு கொடியவளா... அவள்?

தெரியாமல், உணராமல் செய்த தவறுதானே ! அதையே குத்தி குத்தி காட்டுகிறான். அவள் சுவு இரக்கமற்ற கொடியவள் என முடிவே பண்ணிவிட்டானா?

நம்மை இப்படியேதான் வில்லி போல் நினைத்து கொண்டிருப்பானா? ஒர போதும் நம்ப மாட்டானா?

ஆதங்கமாய் நினைத்து அவள் மௌனமாக அவன் சீற்றம் தணியாமலே பேசினான்.

இதோ பார்... புதிதான உறவில் சொகுசான வாழ்க்கையில்... நீ செய்ய வேண்டிய காரியங்களை மறந்து விடாதே. எப்படியும் அந்த ரகசிய பைல் எனக்கு வேண்டும்.... புரிகிறதா?

புரிகிறது... ஸார்... என்றாள் அவளும் குரலை உயர்த்தியவாறு.

அப்புறம்.. இன்னொரு விஷயம்...

சொல்லுங்கள் ஸார்...

இன்னும் சரியாக ஒரு வாரம் கழித்து... அதாவது வரும் ஞாயிற்றுக்கிழமை.. என்னுடன் பேச.. என்று சொல்ல வந்தவன் சட்டென. போனில் பேச வேண்டாம். நேரிடையாகவா எனவும் அவள் திகைத்தாள்

நேரிடையாகவா?

ஆம். உன்னை நான் பார்க்க வேண்டாம்! என்றான் அவன் வாயில் இருந்து இப்படியொரு வார்த்தைகள் வரவதைக் கண்ட, டக்கென சந்தோஷக் குமிழ் ஒன்று மனதல் பூக்க, என்ன என்னை பார்க்க வேண்டுமா, என ஆவலானாள் அவள்.

மறுநிமிடமே அவளது சந்தோ□க் குமிழ் உடைந்தது.

வெறும் போனில் மட்டும் பேசிக் கொண்டிருந்தால்.. போதாது. உன்னை நேரில் எப்படியும் நான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தான் நீ ஏமாற்றாமல், அப்படியே நான் சொன்னபடி நடந்து கொள்கிறாயா என்பதைப் புரிந்து கொள்ள மடியும்....

ம்ஹூரும்! இவன் நம்பப் போவதே இல்லை... என நொந்த உற்சாகம் முழுவதும் இறங்கியவளாய், சரி.. ஸார்.... என்றாள்.

ஞாயிற்றுக்கிழமை... சிறுவர்கள விளையாட்டுப் பூங்காவான காந்தி பார்க்கிற்கு வந்துவிடு. அங்கு உனக்காகக் காத்திருக்கிறேன்! சொல்லி விட்டு அவளது பதிலுக்குக் காத்திராமல் ரிசீவரை வைத்து விட்டான் மகேந்திரன்.

ரிசீவரை வைத்துவிட்டு உதட்டைக் கடித்தபடி நடந்தாள். அவன் அவளை சந்தேகிப்பது சரிதானே ! எப்படி ம்புவான் அவன்?

முதலில் அக்காவுக்காக அவனிடம் வேஷம். இப்போது அவனுக்காக அக்காவிடம் வேஷம் என கூத்தாடிட போல வேஷம் கட்டி நடிக்கும் அவளை... எப்படி... அவனால் நல்லவள் என நினைக்க முடியும்.?

தொடர்ந்து அதையே சிந்தித்தவள் அவனிடம் எப்படியாவது தான் குற்றமற்றவள் நல்லவள் என்பதை புரிய வைத்துவிட வேண்டும்... உணர வைத்துவிட வேண்டும் என மிகவும் விரும்பினாள்.

ஆனால் மகேந்திரன் அந்த ரகசிய பைல்களை எடுத்துக் கொடுக்கும் வரை வேறு எது பற்றியும் சிந்திக்க மாட்டான் என்பது புரிந்தது.

அதனாலே அந்த பைல்களை எடுத்துக் கொடுத்து விட்டு... நிதானமாய் அவனிடம் பேச வேண்டும். பேசி முன்பு தான் அப்படி நடந்து கொண்டதற்கான காரணத்தை விளக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிக் கொண்டாள்.

அனால்.. அவன் பைலை வாங்கி விட்டு அடுத்த கணமே... உன் வேலை முடிந்து விட்டது... நீ போகலாம் என துரத்தியடித்து விடுவான் என்ற சிந்தனையும் ஓடியது.

மறுபடியும் அவன் நெஞ்சுருக பேசிய வசனம் அவள் சிந்தனையில் ஓடியது. உன்னை மனதில்... உயர்ந்த இடத்தில்... வைத்து பூஜித்துக்



கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் உன் செய்கையால் பாழ்படுத்தி விட்டாயே! அவன் வேதனையோட சொன்ன வார்த்தைகள் மறுபடியும் ஊசியாய் அவள் மனதைத் துளைத்தது.

அவள் முட்டாள்தான்! வடிகட்டிய முட்டாள்தான்!

அப்படி நடிப்பிற்காக அவள் காதலித்தாலும் அவன் உண்மையில் தன்னைக் காதலக்க ஆரம்பித்து விட்டான் என்பதை தெரிந்து கொண்டாவும், மாறி இருக்கலாம் அல்லவா? சிங்காரியின் வார்த்தைகளை நம்பி மாறாமல் அவனை ஏமாற்றுவதிலே குறியாய் இருந்து விட்டாளே!

நினைத்தபடியே தன்னைத் தானே நொந்து கொண்டு பங்களாவிற்குத் திரும்பினாள். பங்களாவில் சிங்காரியைப் பார்த்ததும், எல்லாவற்றுக்கும் காரணம் இவள்தானே? என்ற ஆத்திரம் வந்தது.

அடக்கிக் கொண்டு பார்த்தாள். சிங்காரி மறுநாள் முதல் குமார் இண்டஸ்ட்ரீஸில் அவளுக்கு அக்கவுண்டிங் செக்ஷனில் வேலை ரெடியாயிருப்பதைச் சொன்னாள்.

மாதம் ஐயாயிரம் சம்பளமாம். மற்றபடி அலவன்ஸ் அது இதுவென எல்லாம் அவளுக்கு உண்டாம். என்னடா இவள் இவ்வளவு அக்கறையாய் சொல்கிறாளே... என மதுமதி நிகைத்தபோது, அடுத்த சிங்காரி சொன்ன வார்த்தைகள் அவள் கரிசனம் காட்டிய ரகசியத்தைப் புரிய வைத்தது.

அப்படியே... வேலையும் நல்ல சம்பளமும் கிடைத்து விட்டால்... நீ இங்கே பங்களாவில் அடைந்து கிடக்க வேண்டிய அவசியமில்லை. எங்காவத லேடீஸ் ஹாஸ்டல் ஒன்றில் தங்கிக் கொண்டு... வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்கலாம்... என்ன நான் சொல்வது சரிதானே?

அவள் பேசி முடித்ததும் அவளது நோக்கம் மதுமதிக்கு நன்றாகப் புரிந்து விட்டது. எப்படியாவது இங்கிருந்து நம்மை விரட்டிவிட வேண்டும் என்பதில் குறியாயிருக்கிறாள்!

ஆனால்... அவளால் உடன் போக முடியாதே! அந்த ரகசியங்களை எடுத்துக் கொண்டுதானே இங்கிரு;து போகமுடியும்?

அதனாலே மதுமதியும் அவசரமாய் அக்கா, நீ சொல்வது சரி... ஆனால், அந்த மகேந்திரன் கண் கொத்திப் பாம்பாய் என்னைப் பழிவாங்கத் தேடிக் கொண்டிருக்கிறார். அவர் கண்ணில் படாமல் ஒரு இரண்டு மாதம் இங்கேயே உன்னுடன் தங்கிக் கொள்கிறேன். அதன் பின் லேடீஸ் ஹாஸ்டலுக்கு மாறிக் கொள்கிறேன். எனவும் வேறு வழியில்லாதவளாய் சிங்காரி தலையாட்டினாள்.

அவன் சொன்னது போலவே மறுநாள் முதல் குமார் இண்டஸ்ட்ரீஸ் வேலைக்குச் செம்பி விட்டாள் மதுமதி.

பேரிங்குகளின் தனி உற்பத்திப் பிரிவுடன் விஸ்தாரமான பரப்பளவில் இருந்தது குமார் இண்டஸ்ட்ரீஸ். ஏறக்குறைய மகேந்திரனின் கம்பெனியைப் போலத்தான் எல்லாம். அங்கும் அக்கவுண்டிங் பிரிவில் இடையிடையே பணியாற்றிய அனுபவம் இருந்ததால் சந்தோஷமாய் பணியை ஏற்றுக் கொண்டாள்.

ஆனால் குமார் பத்து மணிக்கு அலுவலகம் வந்தவன் முதல் வேலையாய் அவளைத்தான் கூப்பிட்டனுப்பினான்.

எம்.டி.வரச் சொன்னார்... என்று பணியாள் வந்து அழைத்ததும் பவ்யமாகத்தான் போனாள் அவள். ரூமில் நுழைந்து அதே பவ்யத்துடன் குட்மார்னிங் ஸார்! என்றாள். அக்காவை விட இவனிடம் கரெக்ட்டாக நடிக்க வேண்டும். இவனிடமிருந்துதான் அந்த ரகசியங்களைத் தெரிந்து கொண்டு களவாட முடியும்!

ஜாக்கிரதை உணர்வுடன் அவள் விழிகளை மெல்ல உயர்த்த.... அவள் பயப்பட வேண்டிய அவசியமே இல்லாததுபோல் சீட்டை விட்டு எழுந்து கைகளைத் தட்டிக் கொடுத்தான் குமார். அட.... என்ன மது? எம்.டி கூப்பிடுகிறார் என்றதும் என்னை எம்.டி என்றே நினைத்து விட்டாயா? என பெரிய ஹாஸ்யத்தைக் கண்டது போல் சிரித்தவன் நிறுத்தியவாறு, மற்றவர்களுக்குத்தான் நான் எம்.டி. உனக்கு நான் எப்போதும் உன் அக்காவின் கணவன்தான். உன் அன்பு அத்தான்தான்! என முடிக்க, மதுமதி ஒரு கணம் திகைத்து விட்டு, என்ன இருந்தாலும் நீங்கள் முதலாளி. நான் உங்களிடம் வேலை பார்ப்பவள்... என மீண்டும் நூல் விடுவது போல் அந்தப் பவ்யத்தைக் காட்டினாள்.

அவள் நினைத்தது போலவே, குமார் தலையை வெட்டி பெரிய வெக்சர் அடிக்க ஆரம்பித்தான். அவன் பேசுவதைக் கூட கவனியாமல் அவனையே உற்றுப் பார்த்தாள் மதுமதி.

அவள் குமாரும் பேசிக் கொண்டிருந்தாலும், அவனது பார்வை திருட்டுத்தனமாய் அடிக்கடி அவள் உடம்பை ஊடுரவி ரசித்துக் கொண்டிருந்தது.

மகேந்திரன் சொல்லியது போல், இவன் சரியான சபலக் கேஸ்தான். இவனை வீழ்த்துவத சுலபம் என்று நினைத்தாள் மதுமதி.

அதற்கேற்றாற்போல் குமார் ஏதேதோ பேசியவன் கடைசியில் முத்தாய்ப்பு வைத்தது போல், மதுமதி, நீ உன் அக்காவை விட எவ்வளவு அழகாய் இரக்கிறாய் தெரியுமா, என்றான் பேச்சை முடிப்பது போல்.





# 15



மதுமதிக்கு ஒரு விஷயம் தெளிவாய் புரிந்து விட்டது மகேந்திரனை ஒப்பிகையில் குமார் புத்திசாலியோ திறமை சாலியோ அல்ல. பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கும் தொழில் சாம்ராஜ்யத்தை அவன் பங்குக்கு நடத்தி வருகிறான்.

தன் திறமையை வைத்து தொழிலில் முன்னேறத் தைரியமில்லாதவனாய் குறுக்கு வழியைத் தேடுகிறான். மகேந்திரன் தன் திறமையால் பேரிங்குகள் உற்பத்தியில் புதுப்புது மாடல்களை உருவாக்கி சந்தையில் அறிமகபப்படுத்துவது அவனுக்கு எரிச்சலைக் கிளப்புகிறத. வெகுவேகமாக பேரிங்குகளின் விற்பனையில் நெம்பர் ஒன் இடத்தை பிடித்து விட்ட அவனது சாதுர்யம் குமாருக்கு பொறாமையை ஏற்படுத்தியது.

அதனாலே எதிராளியை போர்க் களத்தல் நேருக்கு நேர் சந்திக்க முடியாத கோழையாய் குறுக்கு வழியை கையாண்டிருக்கிறான். சிங்காரி மூலம் தன்னை பகடைக்காயாய் உபயோகித்து கீழ்த்தரமான களவுச் செயல் ஒன்று செய்து அதன் மூலம் மகேந்திரனின் தொழிலில் பெரிய சரிவு ஒன்றை ஏற்படுத்தி இரக்கிறான்.

மகேந்திரன் கோபப்பட்டது.. வெறியாய் ஆத்திரப் பட்டது.. எல்லாம் நியாயமே!

குறுக்கு வழியில் செயல்பட்டவனை குறுக்கு வாயிலேயே அவன் வீழ்த்த நினைப்பதும் சரியான செயல்பாடுதான்!

எப்படியும் அவன் நினைப்பு போலவே நாமம் செயல்பட்டு குமாரின் பேரிங் உற்பத்தி ரகசியங்களை களவாடி மகேந்திரனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

தப்புக்குத் தப்பு... சரியாகி விடும்!

கோணலாகி விட்ட கணக்கை நேர்ப்படுத்தி விடலாம்!

மறுபடியும் அவள் சிந்தனையில் இருந்து மீண்டவளாய் நினைவுக்கு வந்தபோது தான் இன்னமம் குமாரின் அறையிலேயே நிற்பதையும் குமார் இன்னமும் ஜொள்விடாத குறையாய் தன்னையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருப்பதையும் உணர்ந்தாள்.

இந்த ஜொள் மன்னனை... என்ன செய்ய? என ஒரகணம் நினைத்தவள்... ஸார். என்றாள் அவனையும் நினைவுலகத்திற்கு கொண்டு வரும் முயற்சியாக.

ம்... சொல்.. மதுமதி என்றான் அவனும் அந்த பார்வைகிறக்கத்தில் இருந்து மீள்பவனாய்.

மதுமதியின் நினைவில் பேச வேண்டிய விஷயம் சட்டென உரைத்தது.

ஸார்... எனக்கு... நம் கம்பெனியைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.... ஸார்... என்றாள்.

கம்பெனி பற்றியா?

புதியதாக வேலைக்கு சேர்ந்திருக்கிறேன். நம் கம்பெனி பற்றி, பேரிங்குகளின் உற்பத்தி பற்றியெல்லாம் நான் தெரிந்து கொள்வது அவசியம்தானே... ஸார்...?

அவள் குரலில் பவ்யம் காட்டி கேட்டதற்கு பலமாய் தலையாட்டினான் குமார்.

கண்டிப்பாக... மதுமதி நீ மட்டுமல்ல. நம் கம்பெனியின் ஒவ்வொரு ஊழியரும் இதுபற்றி தெரிந்து வைத்திருப்பது அவசியம்... என்றவன் மேஜை மேல் கிடந்த பெரிய பைல் ஒன்றை விரித்தான்.

இங்கு வா... இதில் நம் கம்பெனியில் செயல்பாடுகள் பற்றி விளக்கமாய் படங்களுடன் இருக்கிறது... என்றபடி பைலைக் காட்டி ஒவ்வொன்றாய் அவளுக்கு விளக்க ஆரம்பித்தான் குமார்.

மதுமதி... உன்னிப்பாய் கவனித்தாள். குமார் இண்டஸ்ட்ரீஸில் உற்பத்தி திறன் மட்டும் வியாபார பிற்பனை எல்லாம் மகேந்திரனின் கம்பெனியை விட குறைவாய் ஏறக்குறைய பாதி அளவே இரப்பதைக் கவனித்தாள்.

உற்பத்தியில் சரியான தரத்தை அவன் காட்டாததால் சந்தையில் இரண்டாம் தர பேரிங்குகளாகவே மத்திரை குத்தப்பட்டு சுமாரான விற்பனையே நிலவி வரவதையே மதுமதிடி கவனித்தாள்.

அதனாலே இவனது பேரிங்குகளுக்கு டூப்ளிகேட் வடிவங்கள் வந்து விட்டால்... ஒரே நாளில் அவன் அம்பேல்தான். அவன் கம்பெனி காலியாகி விடும்தான். பழிக்குப் பழியாய் மகேந்திரன் போட்டிருக்கும் திட்டமும் அதுதானே !

யோசித்தவாறு குமார் சொல்லிய கம்பெனி விபயங்களை எல்லாம் அக்கறையாய் கேட்டாள். அவைகளை அப்படியே மனதில் பதிய விட்டுக்



கொண்டாள். பின் அவளது அக்கவுண்டிங் செக்ஷனுக்கு வந்த வேலை பார்க்க வேண்டியதாயிற்று.

அன்றாட வரவு செலவுகளை கணக்கிட்டு டேலிசெய்ய வேண்டியது அவளுடைய பொறுப்பு. இரண்டு மூன்று நாள் அந்த வேலையை சிரத்தையாய்ப் பார்த்தவள் நான்காம் நாள் சலிப்படைந்தாள்.

இப்படியே கணக்கு வழக்குகளைப் பார்த:துக் கொண்டிருந்தால் எப்படி? உற்பத்திப் பிரிவு.. மற்றும் பேரிங்குகளின் டிசைனிங் பிரிவு பகுதியில் அல்லவா அவள் நுழைய வேண்டும்!

அங்கு சேர்ந்தால்தானே அந்த பேரிங்குகளின் வடிவமைப்பு ரகசியங்களைத் தெரிந்து கொள்ள முடியும்? சமயம் வரும்போது எளிதாய் களவாட முடியும்:.

யோசித்தவள் இன்னொர விஷயத்தையும் கவனித்தாள்.

குமார் என்னதான் ஜொள் விடுபவனாய் அவளையே உரிக் உரிக்கப் பார்த்தாலும் கம்பெனி விஷயங்களைப் பற்றி பேசும் போது சிரத்தையாகி வேலையில் அக்கறை காட்டுவதைக் கவனித்தாள்.

அதனால் இவனைப் பார்வையாலோ, செய்கைளாலோ மயக்கி பேரிங்கு ரகசியங்களைத் தெரிந்து கொள்ள முடியாது என்பதும் புரிந்தது.

என்ன வழி செய்ய? என்று அன்று இரவு தூக்கம் வராமல் ரொம்ப நேரம் சிந்தித்தாள்.

மகேந்திரன் சொன்ன வார்த்தைகள்தான் மின்னல் கீற்று போல அவள் மனதில் ஓடியது.

முள்ளை... முள்ளால்தான் எடுக்க வேண்டும்...

டிசைனிங் பிரிவில் அவள் நுழைய வேண்டும் என்றால் அவள் டிசைனிங் ஏதாவத செய்தாக வேண்டும்.

அப்படி ஏதாவது டிசைனிங் செய்தால்தான் தனக்கு அதில் ஆர்வம் இருப்பதாகக் காட்டிக் கொண்டு அந்தப் பிரிவிற்குள் நுழைய முடியும்.

யோசித்தவள் மறுநாளே பொது லைப்ரரி ஒன்றுக்குச் சென்று பேரிங்குகளின் வடிவமைப்பு சம்பந்தமான பெரிய பெரிய புத்தகங்களைப் படிப்பதற்காக எடுத்து வந்தாள். இரவு தூக்கத்தை விரட்டியவாறு உட்கார்ந்து படித்தாள்.

மெல்ல... அவளுக்கு பேரிங்குகள் பற்றி அதன் தன்மை, வடிவமைப்பு, பற்றியெல்லாம் விளங்க ஆரம்பித்தது. அந்த விபரங்களை

நன்றாகத் தெரிந்த கொண்டு பேப்பரை எடுத்தவள் கொஞ்சம் கொஞ்சமாய் ஸ்கெட்ச் செய்து பார்த்தாள்.

அப்படி ஸ்கெட்ச் செய்யச் செய்ய புதுப்புது வடிவமைப்புகளில் பேரிங்குகளை உருவாக்கும் முறையும் விளங்க ஆரம்பித்தது. அப்படி புது வடிவமைப்புடன் ஸ்கெட்ச் செய்த பேப்பர்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் மறுநாள் குமாரிடம் நீட்டினாள் மதுமதி.

அவள் நினைத்தது போலவே ரொம்பவும் ஆச்சரியப்பட்டுப் போனான். என்ன... எல்லாம் நீ டிசைனிங் செய் ஸ்கெட்சுகளா? நம்பவே முடியவில்லை. உனக்கு இவ்வளவு திறமை இருக்கிறதா....? பாராட்டுக்கள்! என்றான். கூடவே பழம் நழுவிப் பாலில் விழுவது போல் டிசைனிங்கில் இவ்வளவு ஆர்வமாக இருக்கும் நீ இனி அக்கவுண்டிங் வேலை பார்க்க வேண்டாம். பேசாமல் பேரிங்கு உற்பத்தி டிசைனிங் பிரிவிற்கு வந்துவிடு! என முடிக்கவும் தன் இட்டம் வெற்றி பெற்றதைக் கண்டு பெரும் சந்தோஷம் கொண்டாள் அவள்.

மறு வாரமே அவள் டிசைனிங் பிரிவிற்கு நினைத்தபடியே வந்துவிட்டாள். அதையும் அன்று போனில் பேசும்போது மகேந்திரனிடம் தெரிவித்தபோது வெகுவாய் பாராட்டினான் அவன்.

அது நிஜமான பாராட்டா அல்லது முன்பு போல் வஞ்சப் புகழ்ச்சியா என அவள் சந்தேகிக்கும் போதே விளக்கமும் அளித்தான்.

உன் அக்காவிடம் இப்படி ஏமாற்ற நீ என்ன செய்வாய்.... என்ன திறமை இரக்கும் என நினைத்தேன்... பரவாயில்லை... உனக்கும் கொஞ்சம் மூளை இருக்கிறது. அதை நீ அபாரமாகத்தான் உபயோகப்படுத்தகிறாய், இனி நான் வழி சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நீயே பேரிங்கு ரகசியங்களை நெருங்கி விடவாய்... என்றான்.

அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை அவன் பார்க்கில் நேரில் சந்திக்க வேண்டும் எனக் கூறியதை நினைவுபடுதநியபோது, அதற்கு தேவையில்லை.... என்றான் சாதாரணமாய்.

அவனை இன்னும் இரண்டு நாளில் நேரில் பார்க்கப் போகிறோம்... என்று இருந்தவளுக்குத்தான் சட்டென ஏமாற்றமாய்ப் போயிற்று.

இருந்தாலும் தன் ஏமாற்றத்தை மறைத்தவளாய், என்ன... தேவையில்லையா? எனக் காரணத்தை அறிய முயன்றாள்.

உன் பேச்சைக் கேட்ட பிறகு... உன் மீது ஒர சிறு நம்பிக்கை என் மனதள் எழுந்திருக்கிறது. அதனால் நம் சந்திப்பு இந்த வாரம் வேண்டாம். அடுத்த முறை பார்த்துக் கொள்வோம்... என்றான்.




அவன் பதிலைக் கேட்டு எரிச்சல் கொள்வதா... சந்தோஷம் அடைவதா... என திகைப்பே அவளுள் ஓடியது.

சில நம்பிக்கை விதை போல் அவன் மனதுள் விழுந்திருக்கிறதாம்!

அது இன்னும் முளை விட்டு வளர வேண்டும் சிறு செடியாக உருவாக வேண்டும்... செடி மரமாக வேண்டும்

அதற்கு இன்னும் எத்தனை நாட்கள் எத்தனை மாதங்கள் ஆகுமா?

அதுவரை அவள் காத்திருக்க வேண்டும். காத்திருப்பாளா அவன்?




மதுமதிக்கு இப்படி காத்திருக்க வேண்டி கவலை என்றால் சிங்காரிக்கு வேறுவிதமாக இருந்தது.

அவளுக்கு தன்னுடன் பங்களாவில் மதுமதி இருப்பது தாங்க முடியாத ஜீரணிக்க முடியாத விஷயமாகவே இருந்தது.

அதனாலே எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டாள் மதுமதி லேசாக ஒரு விபரம் கேட்டாலே எரிந்த விழுந்தாள். அவளை எதாவத சாக்கு போக்கு சொல்லி விரட்ட முடியுமா என்பதிலே குறியாயிருந்தாள்.

மதுமதிக்கு முதலில் அவளின் அந்தச் சிடுமூஞ்சித்தனம் புரியவில்லை என்றாலும் ஓரிரு நாளில் அதைக் கவனித்து உணர்ந்து விட்டாள்.

இவளை என்ன செய்வது... எதற்கெடுத்தாலும் இநத வரத்து வருகிறாளே? எனப் பயந்தாள்.

சொல்லப்போனாள் அவள் பழைய சிங்காரியாகவே இல்லை. அவள் செய்யும் எந்த ஒரு வேலையிலும் மூக்கை நுழைத்து ஏதாவது குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்தாள். எதைச் சாக்கு வைத்தாவது குரலை உயர்த்தி அதட்டுவதிலேயே கவனமாயிருந்தாள்.

காலையில் எழுந்ததுமே அவளை பரபரப்பாக்கி விடுவாள். ஆறு மணியிலிருந்தே கிளம்பு... கிளம்பு... வேலைக்கு நேரமாயிற்று.... என பின்னாலேயே வந்து விரட்டுவாள்.

அக்கா... ஒன்பது மணிக்குத்தான் அலுவலகம். அதற்குள் ரெடியாகி விடுவேன்... என்றாலும் விட மாட்டாள். எட்டு மணிக்கே அவளைத் தயார்

செய்து நாலு இட்டிலிகள் அடைத்த டிபன் பாக்ஸுடன் வெளியே மதுமதியை தள்ளி விட்ட பிறகுதான் அவளுக்கு நிம்மதியே ஏற்படும்.

அவளுக்கு எங்கே ஒன்பது மணிக்கு காரில் கிளம்பும் குமாருடன் மதுமதி தொற்றிக் கொள்ள அடி போடுவாளா... என்ற உள்ளூர பயம். மதுமதி இதைப் புரிந்து கொண்டவள் காலையிலே அவளை எரிச்சல் படுத்த விரும்பாதவளாய் எட்டு மணிக்கே கிளம்பி பக்கத்து பஸ் ஸ்டாப்புக்கு வந்து விடுவாள்.

அதே போல் மாலை சில சமயம் வேலை முடிந்து கிளம்பும் போது அசடு வழிய குமார் அழைத்தாலும் நாசூக்காய் மறுத்து விடுவாள்.

கூடிய வரையில் சிங்காரியை எரிச்சல்படுத்தாமல் நடந்து காரியத்தைச் சாதிக்க வேண்டும். அவளைச் சீண்டுவதோ அவள் போபப்படும்படி நடந்து கொள்வதோ பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அறிந்திருந்தாள்.

ஆனால் சிங்காரியோ அவளுக்கு நேர் எதிர் மன ஓட்டங்களை கொண்டிருந்தாள். மதுமதியை எதற்காவது வம்புக்கிழுத்து எதையாவது சாக்கு வைத்து சண்டை போடலாமா என எண்ணினாள். அப்படி சண்டை என்று வரும்போது அதையே பெரிதாக்கி... ஒரு கட்டத்தில் நீ வெளியே போ... என் மன் நிற்காதே என விரட்டும் அளவுக்கு கொண்டு வந்து விடலாமே... எனவும் அவளுள் சிந்தனை ஓடியது.

ஆனால் மதுமதி அவளது எண்ணத்தைப் புரிந்து கொண்டாளோ என்னவோ... நொடிக்கொருதரம் அவள் அக்கா! என அவள் என்ன அதட்டி உருட்டினாலும் நீ சொன்னால் சரியக்கா! அப்படியே செய்கிறேன்... ! என பணிந்து போனாள்.

இப்படி எதிருக்கு எதிர் மல்லுக் கட்டாமல் பணிந்து போகிறவளை என்ன செய்வத எப்படி வம்பிழுப்பது எனக் குழம்பவே செய்தாள்..... சிங்காரி.

முதலில் யோசித்து அவளை நன்கு எரிச்சல்படுத்த வேண்டும் என நினைத்தாள். அவளுக்கு எது எதுவெல்லாம் பிடிக்குமோ அதையெல்லாம் செய்ய விடாமல் தடுத்தால், எரிச்சல் வந்து விடுமே என எண்ணினாள்.

முதல் கட்டமாய் மதுமதி அவ்வப்போது டி.வி.யில் செய்திகளைப் பார்ப்பதை வாக்கமாகக் கொண்டிருந்தாள். அதறகுள் நுழைந்து தடா போட்டாள் சிங்காரி. நீ டி.வி.யைப் பார்க்காதே. கண்ட கண்ட காட்சிகளைக் காட்டுவார்கள். நீ கெட்டு விடுவாயா; !

மதுமதிக்கு அவளின் உள்ளூர எண்ணத்தை அறிந்ததால், நீ சொன்னால் சரியக்கா, டி.வி. பார்ப்பதையே விட்டு விடுகிறேன்.. ! என



தலையை பலமாய் ஆட்டி, டூத் பேஸ்ட் விளம்பரத்தில் சிரிப்பது போல் பற்களைக் காட்டினாள்.

அடுத்து சிங்காரி குறி வைத்தது மதுமதியின் சிறிய டேப் ரிக்கார்டருக்கு. மதுமதி அந்த பழைய டேப் ரிக்கார்டரில் இரவில் அவ்வப்போது பழைய டி.எம்.எஸ். சுசிலா பாடல்களை மெய்மறந்து கேட்டு ரசிப்பதுண்டு.

அதைப் புரிந்திருந்த சிங்காரி ஒரு இரவில் அவள் அப்படி பாட்டைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது... அதை நிறுத்தி அப்படியே தூங்குவவள்... நம் ஸ்டேட்டஸுக்கு இது போன்ற பழை டேப்ரிக்கார்டரை வைத்திருப்பதெல்லாம் அவமானம். உனக்கு வேறு புது ஸ்டீரியோ செட் வாங்கித் தருகிறேன்! என்றபடி அந்த டேப்ரிக்கார்டரை டமாரென கீழே போட்டு உடைத்தாள்.

ஐயோ.... அக்கா.... ! என மதுமதி கோபமாய் கத்த வந்தவள் சிரமப்பட்டு, அடக்கிக் கொண்டாள்.

நீ சொன்னால் சரியக்கா... என்றபடி வேண்டுமென்றே தலையை பலமாய் ஆட்டி டூத்பேஸ்ட் இளிப்பை இளித்தாள்.

சிங்காரி அத்தோடு விடவில்லை. மதுமதி எப்போதும் புத்தகமும் கையுமாக அடிக்கடி திரிவதை பார்த்தவள் அடுத்த குறியை அதற்கு வைத்தாள். பொது நூலகத்தில் தினமும் புத்தகங்கள் எடுத்து படித்துக் கொண்டிருந்தவளை, வேண்டாம் மது ரொம்பப் புத்தகங்கள் படித்தால்.. மூளையே குழம்பி விடும்.... என்று சொல்வார்கள். அதனால் நீ படிப்பதை நிறுத்தி விடு... ! என அவள் நூலக உறுப்பினர் கார்டை இரண்டாகக் கிழித்துப் போட்டாள்.

மதுமதியோ அதற்கும் கோபப்படாமல் அடக்க முடியாத சிரிப்பொன்று சிரித்தாள். சரியக்கா! இனி புத்தகங்கள் படிப்பதையே நிறுத்தி விடுகிறேன்... என்றாள் காஞ்சலான குரலில்

சிங்காரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எது செய்தாலும் எப்படி எரிச்சல்படுத்தினாலும் தாங்கிக் கொண்டு சிரிக்கிறாளே... இவளை என்ன செய்வத... எப்படி கோபப்படுத்துவது...? என்ற சிந்தனையிலே அவளது புத்தி போயிற்று.

இரண்டு நாள் அதுபற்றி தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தவள், இறுதியாய் அதற்காக ஒர விபரீதமான மயற்சியையும் செய்த பார்க்கத் துணிந்தாள்.

அவள் இம்முறை அப்படி விபரீத பரிசோதனைக்கு தேர்ந்தெடுத்தது தனது கணவனான குமாரைத்தான். குமாரைத் தனியே அழைத்துச் சென்று தன் திட்டம் பற்றி விளக்கி அப்படி நடந்து கொள்ளுமாறு சொன்னபோது... அவள் திட்டத்தை கேட்டு ஒர கணம் குமாரே ஆடித்தான் போய்விட்டான்.

நீயா இப்படிச் சொல்கிறாய்..? அதுவும் அக்காவானா நீயா... இப்படி துணிந்து சொல்கிறாய்... செய்து விடவா? என்றான் குமார் தயங்குவதுபோல்.

வேறு வழியே இல்லை குமார்! என் தங்கையைப் பற்றி நன்கு எனக்குத் தெரியும். இப்படி ஏதாவது செய்தால்தான் அவள் இங்கிருந்து ஓடுவாள். இல்லையென்றால்... ஒரேடியாய் இங்கே டேரா போட்டு விடுவாள்... ! என்றாள் சிங்காரி அணித்தரமான குரலில்.

இப்படிச் செய்வது... உனக்குச் சம்மதம்தானே? நம்ப மடியாத குரலில் தான் குமார் திரும்பவும் கேட்டான்.

அட..... ஐடியா கொடுத்ததே... நான்தானே ! நீங்கள் தைரியமாகச் செய்யுங்கள்... மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். !

அடிக் குரலில் ஒய்யாரமாய் சிங்காரி சொல்ல பலமாய் தலையாட்டினான் குமார். அவனுள் கரும்பு தின்ன கசக்குமா? என்ற மன்மத நினைப்பும் ஓடியது.



## 17



அடுத்து வந்த மூன்று நான்கு நாட்கள் எதுவும் பிரச்சனையில்லாமல் சாதாரணமாக நகர்ந்தது கண்டு மதுமதிக்கே ஆச்சரியம்தான்!

சிங்காரி அவளை விரட்ட வேறு எதுவும் முயற்சி எடுக்கவில்லையா... அல்லது போதும்... விட்டு விடுவோம்... என நிறுத்தி விட்டாளா... என வியப்பு கொண்டாள்.

ஆனால் மறுநாள் குமார் அலுவலகத்திலும் சரி, வீட்டிலும் சரி வழக்கத்திற்கு மாறாக ஓர் வித ஊடுருவும் பார்வை பார்த்தபோது அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் இரவில் காற்று வாங்க தன் ரூமில் இருந்து வெளிவந்து மொட்டை மாடிப் பக்கம் வந்து நின்றபோது... பின்னா நிழல் போல் குமார் தோன்றியதைக் கண்டு ஆச்சரியம் கொண்டாள்.

இந்த நிலபொளியில் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா...? என்றபடி அசடு வழிய பேசிய குமார் அப்படியே அவளை



வர்ணிக்கவும் ஆரம்பித்தான். உன் மை விழிக் கண்கள் அதன் அபார வீச்சு, அந்த சின்ன ரோஜா நிற இதழ்கள், அதில் ஒளிரும் மத:துப் பல் புன்னகை, அந்த நெற்றியில் புரளும் ஸ்பிரிங் முடிக்கற்றைகள்... எல்லாம் எல்லாமே... அற்புதம்... அபாரம்... ! என்றவன் பேசியபடியே... டக்கென அவள் கரங்களைப் பிடித்தபோது திகைத்துதான் போனாள்.

ச்சீ... என்ன.... இது! விடுங்கள்... என ஓங்கி கோபமாய் உதறி விட்டாள் அவள்.

குமார் திகைக்காமல் அசட்டுச் சிரிப்பு சிரித்தான்

நீ கோபப்பட்டாலும்... அதிலும் ஒரு அழகுதான்! என்றபடி மறுபடியும் அவள் கைகளைப் பிடித்தான்.

அதிர்ந்தபடி மறுபடியும் தட்டி விட்டாள் அவள்.

அவனும் அதே வெட்கமில்லாத சிரிப்பு சிரித்து விட்டு, மது... கோபத்தில் கூட உன் விழிகள் விரிய அப்படி ஒரு கனல் பறக்கும் பார்வை... அது கூட எவ்வளவு அழகாய். நான் ரசிக்கும்படி இருக்கிறது தெரியுமா? என்றபடி மீண்டும் அவள் கைகளைத் தொட்டான்.

ஓங்கி உதறியவள் ஆத்திரமாக முறைத்தாள்.

இதோ பாருங்கள் குமார். வரம்பு மீறாதீர்கள். நான் அக்காவிடம் சொல்லி விடுவேன்!

அவள் சொன்னதும் கொஞ்சமும் அதிர்ச்சி காட்டாமல் தலையாட்டினான் அவன்.

கரெக்ட்! முதலில் அதைச் செய். அதற்காகத்தானே... இதற்கெல்லாம் செய்கிறேன்...

அவன் பிடிகையாய்ச் சொல்ல புரியாமல் விழித்தாள் அவள்.

நீ... முதலில் உன் அக்காவிடம் என்னைப் பற்றி புகார் செய். அப்போதுதான் உனக்குச் சில உண்மைகள் தெரியும்

உண்மைகளா?

ஆம்... உன்னை இன்னும் அதிர்ச்சியில் உறைய வைக்கும் சில உண்மைகள்...

மர்மமப்படத்தில் வருவது போல் டக்கென சொல்லிவிட்டு விறுவிறுவென அகன்றான் குமார்.

மதுமதிக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. ஊக போல் குமார் எதுவும் உளறுகிறானோ... என்றுதான் நினைத்தாள். ஆனால் அவன் சொன்ன

விதமும் பார்த்த பார்வையும் எதையோ அவளை புரிந்து கொள்ளும்படி உணர்த்துவதாய் தோன்றிற்று.

மேலும், அக்காவிடம் சொல்லி விடுவேன்... என்றால்.. பயப்படுவதற்குப் பதில், சொல்லு! என்கிறானே! அப்படியானால் இதில் நிச்சயம் ஏதோ விஷயம் இருக்கிறது அது என்னவென்று பார்த்து விடுவோம்!

மறுநாள் காலை முதல் வேலையாய் சிங்காரியைத் தேடிப் போனாள் மதுமதி. அக்கா... முக்கியமான விஷயம்.... என ஆரம்பித்தபோது, சொல்லு... சொல்லு... ! என அவள் பரபரப்பு காட்டியது, மதுமதிக்கு முதல் முறையாய் ஒருவித சந்தேகத்தை உண்டு பண்ணியது.

மெல்ல விஷயத்தை ஆரம்பித்தாள். அவர்... என் கைகளைத் தொட்டு வரம்பு மீறப் பார்த்தார்க்கா... என்று வெளிப்படையாய் சொல்லிப் பார்த்தும் எவ்வித அதிர்ச்சியும் காட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சிங்காரி.

அவள் எவ்வித பதிலும் சொல்லாத நிலை கண்டு அவளை உலுக்கியவள், அக்கா, உன்னிடம்தான் சொல்கிறேன். அத்தான்... அப்படி.... என வார்த்தைகளை நிறுத்த... கடகடவென சிரித்தாள் சிங்காரி.

மதுமதிக்கு திகைப்பு மிஞ்ச, என்னக்கா... சிரிக்கிறாய்? என்றாள் அதே அதிர்வோட

மதுமதி... உன்னை அப்படித் தொட்டது... உன் அத்தான்தானே? நீ ஏன் இந்த பயம் பயப்படுகிறாய்..? என்றவள் விடாது, அவருக்கு அப்படித் தொட்டுப் பேசுவது இயல்பான சுபாவம். அதே போல் உன்னிடமும்... என்ற போது அவசரமாய் குறுக்கிட்டு மறுத்தாள் மதுமதி.

இல்லையக்கா... ! அவர் என் அழகு பற்றியெல்லாம் தேவையில்லாமல் வர்ணித்து என்னை ஒருவிதமாகப் பார்த்து... இப்படியெல்லாம்... செய்யத் துணிந்தார். நான் சொல்வது நிஜம்.... என்னை நீ நம்பலாம்..

அவள் சீரியசான குரலில் சொன்னதற்கு மறுபடியும் கைகளை ஆட்டி கடகடவென சிரித்தாள் சிங்காரி.

அசடு... ! அசடு... ! என்றவள், அசடு போலவே பேசுகிறாயே...? இதெல்லாம் ஒரு விஷயமா? உன் அக்காளின் கணவன் உன் செல்லமான அத்தான் ஓர் இரண்டு வார்த்தை உன்னிடம் அன்பாக பேசினால் உடனே தப்பாக எண்ணி விடுவதா? விட்டுத் தள்ளு... என அதே சிரிப்பு சிரித்து விட்டு அகன்று விட்டாள் சிங்காரி.



மதுமதி திகைப்பாய் குழம்பத்தான் செய்தாள். அடித்து... ஆத்திரமாய் கோபப்படுவாள் என்று பார்த்தாள்.... ரசித்துச் சிரிக்கிறாளே! அதுவும் செல்ல அத்தானாம்... அன்பாக ரெண்டு வார்த்தைகள் பேசுகிறாராம்!

அவள் சிரிப்பை விட அவள் பேசிய வார்த்தைகளில் பொடி வைத்துப் பேசுவதுபோல் உணர்ந்தாள்.

சில மணி நேரம் கழித்து அலுவலகத்தில் குமாரைப் பார்த்தபோது, அக்காவிடம் சொன்னாயா...? புரிந்ததா? என்றான்.

அவன் புரியாமல் மறுபடியும் விழித்தாள். சொன்னேன்.... ஆனால் புரியவில்லை! என்றாள். பூடகமாய் சிரித்தான் குமார்.

புரியும்... என்றான்

புரியுமா?

இன்று மாலை டைனிங் ஹாலில் உனக்குப் புரியும்... புரிய வைக்கிறேன்!

சொல்லியபடி விஷமச் சிரிப்போடு அகன்றான் அவன்.

மதுமதிக்கு நடப்பது புரியவில்லை. இரண்டு பேரும் சொல்லி வைத்தாற் போல் விஷமச் சிரிப்பு சிரிக்கிறார்கள்... விஷயம் என்னவாக இருக்கும்...? என்றே குழம்பினாள்.

ஆனால் அவள் குழப்பத்திற்கு அவசியமே இல்லாமல் மாலை டைனிங் ஹாலில் எல்லாமே வெட்ட வெளிச்சமாய் அவளுக்குப் புரிந்தது.

முன்பெல்லாம் மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்து திரும்பிய மதுமதி அக்கா சிங்காரியுடன் டைனிங் டேபிளில் அமர்ந்து ஏதாவது கதை பேசியபடி தேநீர் அருந்துவது வழக்கமான ஒன்று. அதுபோன்ற சமயங்களில் மதுமதிதான் சுவாரஸ்யமாய்ச் சொல்லிக் கொண்டிருப்பாளே தவிர... சிங்காரி எவ்வித லயிப்புமின்றி வெறும்ம உம் கொட்டிக் கொண்டு கடனுக்கு கேட்பது போல் கேட்டுக் கொண்டிருப்பாள்.

அன்றும் அதேபோல் மதுமதி டைனிங் டேபிள் சேர் ஒன்றில் அமர்ந்தவாறு பணியாள் கொடுத்த தேநீரை சுவைத்தபடியே சிங்காரியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

வழக்கம் போல் லயிப்பு இல்லாமல் இருக்கும் சிங்காரி அன்று என்னவோ, அப்படியா அப்படியா...? என வியந்து அவள் சொல்வதை அக்கறையாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

விதமும் பார்த்த பார்வையும் எதையோ அவளை புரிந்து கொள்ளும்படி உணர்த்துவதாய் தோன்றிற்று.

மேலும், அக்காவிடம் சொல்லி விடுவேன்... என்றால்.. பயப்படுவதற்குப் பதில், சொல்லு! என்கிறானே! அப்படியானால் இதில் நிச்சயம் ஏதோ விஷயம் இருக்கிறது அது என்னவென்று பார்த்து விடுவோம்!

மறுநாள் காலை முதல் வேலையாய் சிங்காரியைத் தேடிப் போனாள் மதுமதி. அக்கா... முக்கியமான விஷயம்.... என ஆரம்பித்தபோது, சொல்லு... ! என அவள் பரபரப்பு காட்டியது. மதுமதிக்கு முதல் முறையாய் ஒருவித சந்தேகத்தை உண்டு பண்ணியது.

மெல்ல விஷயத்தை ஆரம்பித்தாள். அவர்... என் கைகளைத் தொட்டு வரம்பு மீறப் பார்த்தார்க்கா... என்று வெளிப்படையாய் சொல்லிப் பார்த்தும் எவ்வித அதிர்ச்சியும் காட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சிங்காரி.

அவள் எவ்வித பதிலும் சொல்லாத நிலை கண்டு அவளை உலுக்கியவள், அக்கா, உன்னிடம்தான் சொல்கிறேன். அத்தான்... அப்படி.... என வார்த்தைகளை நிறுத்த... கடகடவென சிரித்தாள் சிங்காரி.

மதுமதிக்கு திகைப்பு மிஞ்ச, என்னக்கா... சிரிக்கிறாய்? என்றாள் அதே அதிர்வோட...

மதுமதி... உன்னை அப்படித் தொட்டது... உன் அத்தான்தானே? நீ ஏன் இந்த பயம் பயப்படுகிறாய்..? என்றவள் விடாது. அவருக்கு அப்படித் தொட்டுப் பேசுவது இயல்பான சுபாவம். அதே போல் உன்னிடமும்... என்ற போது அவசரமாய் குறுக்கிட்டு மறுத்தாள் மதுமதி.

இல்லையக்கா... ! அவர் என் அழகு பற்றியெல்லாம் தேவையில்லாமல் வர்ணித்து என்னை ஒருவிதமாகப் பார்த்து... இப்படியெல்லாம்... செய்யத் துணிந்தார். நான் சொல்வது நிஜம்.... என்னை நீ நம்பலாம்..

அவள் சீரியசான குரலில் சொன்னதற்கு மறுபடியும் கைகளை ஆட்டி கடகடவென சிரித்தாள் சிங்காரி.

அசடு... ! அசடு... ! என்றவள், அசடு போலவே பேசுகிறாயே...? இதுவெல்லாம் ஒரு விஷயமா? உன் அக்காளின் கணவன் உன் செல்லமான அத்தான் ஓர இரண்டு வார்த்தை உன்னிடம் அன்பாக பேசினால் உடனே தப்பாக எண்ணி விடுவதா? விட்டுத் தள்ளு... என அதே சிரிப்பு சிரித்து விட்டு அகன்று விட்டாள் சிங்காரி.



மதுமதி திகைப்பாய் குழம்பத்தான் செய்தாள். துடித்து... ஆத்திரமாய் கோபப்படுவாள் என்று பார்த்தாள்... ரசித்துச் சிரிக்கிறாளே! அதுவும் செல்ல அத்தானாம்... அன்பாக ரெண்டு வார்த்தைகள் பேசுகிறாராம்!

அவள் சிரிப்பை விட அவள் பேசிய வார்த்தைகளில் பொடி வைத்துப் பேசுவதுபோல் உணர்ந்தாள்.

சில மணி நேரம் கழித்து அலுவலகத்தில் குமாரைப் பார்த்தபோது, அக்காவிடம் சொன்னாயா...? புரிந்ததா? என்றான்.

அவள் புரியாமல் மறுபடியும் விழித்தாள். சொன்னேன்... ஆனால் புரியவில்லை! என்றாள். பூடகமாய் சிரித்தான் குமார்.

புரியும்... என்றான்

புரியுமா?

இன்று மாலை டைனிங் ஹாலில் உனக்குப் புரியும்... புரிய வைக்கிறேன்!

சொல்லியபடி விஷமச் சிரிப்போடு அகன்றான் அவன்.

மதுமதிக்கு நடப்பது புரியவில்லை. இரண்டு பேரும் சொல்லி வைத்தாற் போல் விஷமச் சிரிப்பு சிரிக்கிறார்கள்... விஷயம் என்னவாக இருக்கும்...? என்றே குழம்பினாள்.

ஆனால் அவள் குழப்பத்திற்கு அவசியமே இல்லாமல் மாலை டைனிங் ஹாலில் எல்லாமே வெட்ட வெளிச்சமாய் அவளுக்குப் புரிந்தது.

முன்பெல்லாம் மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்து திரும்பிய மதுமதி அக்கா சிங்காரியுடன் டைனிங் டேபிளில் அமர்ந்து ஏதாவது கதை பேசியபடி தேநீர் அருந்துவது வழக்கமான ஒன்று. அதுபோன்ற சமயங்களில் மதுமதிதான் சுவாரஸ்யமாய்ச் சொல்லிக் கொண்டிருப்பாளே தவிர... சிங்காரி எவ்வித லயிப்புமின்றி வெறும்ம உம் கொட்டிக் கொண்டு கடனுக்கு கேட்பது போல் கேட்டுக் கொண்டிருப்பாள்.

அன்றும் அதேபோல் மதுமதி டைனிங் டேபிள் சேர் ஒன்றில் அமர்ந்தவாறு பணியாள் கொடுத்த தேநீரை கலைத்தபடியே சிங்காரியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

வழக்கம் போல் லயிப்பு இல்லாமல் இருக்கும் சிங்காரி அன்று என்னவோ, அப்படியா அப்படியா...? என வியந்து அவள் சொல்வதை அக்கறையாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கு குமார் தோன்றி விட்டான். குமார் வருவதைப் பார்த்ததும் சிங்காரி ஒரு வித பரபரப்புக்கு உள்ளாகுவதை மதுமதி கவனித்தாள்.

குமார் வந்தவன் நேராக மதுமதி பக்கம் வந்து அவள் பக்கம் கிடந்த சேரை, மேலும் அவளுக்கு நெருக்கமாய் இழுத்துப் போட்டு அவளை இடிக்காத குறையாய் அமர்ந்தான்.

அவனது செய்கையைப் பார்த்த மதுமதி திகைத்தாலும், நடப்பதைப் பார்ப்போம் என்ற எண்ணத்துடன் எவ்வித சலனமும் காட்டாதவளாய் இருந்தாள்.

அடுத்து அவளும் எதையோ பேசியபடி இளித்தவன் டக்கென தன் கைகளை எடுத்து அவள் தோளில் போட்டான்.

மதுமதி ஒரு கணம் திடுக்கிட்டுத்தான் போனாள்.

சிங்காரி முன்னிலையில் குமார் அவன் பாட்டுக்கு அவள் கழுத்தில் உரிமையோடு கை போட்டவாறு!

சிங்காரி முன்னிலையில் குமார் அவன் பாட்டுக்கு அவள் கழுத்தில் உரிமையோடு கை போட்டவாறு!

சிங்காரியோ எதுவுமே நடக்காதது போல் அவள் பாட்டுக்கு அதைக் கவனித்தும் கவனியாதது போல் பேசிக்கொண்டு.

மதுமதி திரும்பி குமாரை முறைத்தாள்.

அவன் அசடாய் புன்னகை புரிந்தான்.

முதலில் எடுங்கள் கையை! என்றாள் கோபமாய்.


அவள் வார்த்தைகளை விட அவள் முறைப்பைக் கண்டு பயந்து போனவனாய் குமார் டக்கென கைகளை எடுத்தான்..

என்னமது... கோபித்துக் கொள்கிறாய்...? நான் வேறு யாருமா? அத்தான்தானே...? என மறுபடியும் அசடு வழிந்தான்.

அதைவிட மதுமதிக்கு அதிர்ச்சி சிங்காரி நடப்பதையெல்லாம் எவ்வித சலனமுமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதுமதிக்கு அவளது இறுக்கமும் கேலியான முகத்தைப் பார்த்ததும் தெரிந்தது. இதுவும் அவளை வீட்டை விட்டு விரட்டப் போட்டிருக்கும் சிங்காரியின் திட்டம்தான் என்பதும் புரிந்தது.





# 18

குமார் தூக்கம் பிடிக்காதவனாய் அறையில் அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருந்தான்.

சிங்காரி சொன்னதெல்லாம் அவன் மூளையில் ரீங்காரமிட்டு ஓடியது.

நீங்கள் கொஞ்சம் என் தங்கியிடம் அப்படி என் முன்னிலையில் வரம்பு மீறி நடந்து கொள்ளுங்கள். அவள் பயந்து போவாள். நானும் எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை என்றதும் கொதித்து... கோபத்தில் வீட்டை விட்டே வெளியேற்றி விடலாம்...

சிங்காரி சொல்வதெல்லாம் சரிதான்.

அப்படி செய்தால் மதுமதி இங்கு இனி இருப்பதில் பாதகாப்பில்லை என வீட்டை விட்டு வெளியேறி விடுவாள்தான்.

அவளை அப்படி வீட்டை விட்டு வெளியேற விட்டு விடுவதாவது?

சிங்காரிக்குத்தான் மதுமதியை அவள் சொந்தத் தங்கையை பிடிக்கவில்லை...

ஆனால் அவனுக்கு?

மதுமதியை... பிடித்திருக்கிறதே!

அந்தத் தங்கச் சிலையாய் பளீரிடும் அபார அழகு... அந்த கிறக்கம் தரும் மைவிழிப் பார்வை. அழகான வடிவங்களில் செதுக்கி வைத்த சிலை போன்றான உடல் நயம்... கன்னக்குழி தோன்ற பளீரிடும் அந்தப் பூவிதழ் சிரிப்பு... எல்லாவற்றையும் வாய் பிளக்க ரசித்திருக்கிறானே ! இதையெல்லாம் வேண்டாம்... என விரட்டி அடிப்பதாவது?

காலம் காலமாய் உட்கார்ந்து பார்த்து ரசிக்க அல்லவா வேண்டும்?

அதற்கு ஒரு வழியும் இருக்கிறதே!

சிங்காரியைக் காதலித்து மயக்கியது போல் அவளையும் மயக்கி தன் வலையில் வீழ்த்தி விட்டால்?

அது போதுமே!

அவனது கழுத்தில் ஒரு மூனு முடிச்சைப் போட்டு சிங்காரியின் பக்கத்திலேயே ஜோடியாய் உட்கார்த்தி வைத்து விடலாமே!

அக்காள் தங்கை இருவரையும் மணந்த நபர்களைப் பற்றி அவன் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறானே ! அப்படி நிறைய பேரும் இருக்கிறார்களே!

அந்த லிஸ்டில் தானும் சேர்ந்து கொள்ள வேண்டியது தான்!

குமாரின் நினைவில் குதி போட்டு ஓடிய நினைப்பும் அதுதான்! அப்படி மதுமதியை மயக்கி காதல் வயப்படுத்தி அவளையும் தன் மனைவியாய் ஆக்கிக் கொள்வதை நினைத்துப் பார்க்கும் போதே அவனுக்கு பிரகாசமாய் இருந்தது.

அப்படி ஒன்று மட்டும் நடந்து விட்டால்.. வாழ்நாளில் தான் பெரும் பாக்கியவனாய்... ஆகிவிடுவோம்... என்ற கனவு பெரும் குளிராய் அவனை ஆட்டியது.

கூடவே, ஏன்.. அப்படி முடியாது? மதுமதி வீட்டிலேயே தன்னோடு இருக்கிறாள்... அவள் மனதில் மட்டும் எப்படியாவது இடம் பிடித்து விட்டால் போதும். பின் சிங்காரியை எப்படியாவது சம்மதிக்கச் செய்து அவள் கழுத்தில் தாலியையும் கட்டி விடலாம்...

குமார் அந்த நினைப்பில் பரவசமானவன் கவனமாகச் சிந்திக்கவும் ஆரம்பித்தான். இப்போது... சிங்காரி மதுமதியை வீட்டை விட்டு விரட்டப் பார்க்கிறாள்.

அதை முதலில் தடுக்க வேண்டும்.

இன்னொன்று... மதுமதியை விரட்ட அவனிடம் வரம்பு மீறி நடப்பது போல் நடக்கச் சொல்கிறாள்.

அது... அது... நாம் செய்யக் கூடாத.... ஒன்று.

அப்படிச் செய்தாலா;... மதுமதிக்கு நம் மீது வெறுப்பு வந்து விடும்... நம்மை சுத்தமாய் பிடிக்காமல் போய்விடும்...

நமக்கு மதுமதியின் மனதில் இடம் பிடிக்க வேண்டும். அவளுக்கு நம் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட வேண்டும்.

அதற்கு ஒரே வழி.... சிங்காரியிடம் மறுப்பதுதான்!

நீ சொல்லும் வழி சரிவராது. எனக்கு ரொம்ப கெட்ட பெயரை ஏற்படுத்தி விடும் என்று மறுத்து விடுவதான்!

சிங்காரி என்ன நினைத்தாலும் சரி.



அவன் நினைப்பா நமக்கு முக்கியம்? மதுமதி என்ன நினைக்கிறாள் என்றுதானே பார்க்க வேண்டும்?

அதற்கு... அதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது.

வேறு ஒன்றும் செய்ய வேண்டும்... அதாவது டபுள் கிராஸ் செய்ய வேண்டும்!

மதுமதியிடம் சிங்காரியை போட்டுக் கொடுக்க வேண்டும்.

அப்ரூவர் போல மாறி உன் அக்காதான் உன்னை விரட்ட இப்படியெல்லாம் செய்யச் சொல்கிறாள்... என சிங்காரியையே போட்டுக் கொடுக்க வேண்டும்.

நாம் நல்லவன் போல்... மதுமதிக்கு உதவி செய்வது போல் மாறிக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் மதுமதி நம்புவாள்.

அக்கா... இப்படி மோசமாய் நடந்து கொண்டாலும் அத்தான் நம் மீது பரிவு காட்டுகிறாரே அன்பாய் நடந்து கொள்கிறாரே... என்றெல்லாம் நினைப்பாள்.


அப்படி மதுமதி நினைக்க வேண்டும்... அவளை நினைக்க வைக்க வேண்டும்...

குமார் சிகரெட் புகை வளையங்களை ஊதியபடி அதே சிந்தனையுடன் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்.

தீவிர யோசனைக்குப் பின் அந்த முடிவிற்கும் வந்தான்.

மதுமதியிடம் சிங்காரி அப்படி இரக்கமில்லாமல் நடந்துகொள்வதை சுட்டிக்காட்ட வேண்டும். எதுவானாலும் நான் இரக்கிறேன். நான் பார்த்துக் கொள்கிறேன்... என்ற தைரியத்தை அவளுள் வரவழைத்து விட வேண்டும்.

யோசித்தவனாய் மனதுள் பலவிதமான கணக்குகளைப் போட்டு பரவசமாகிக் கொண்டிருந்தான் குமார்.



# 19

மறுநாள் அலுவலகத்தில் அவளை தனியே கூப்பிட்டு எல்லாவற்றையும் விளக்கினான் குமார்.

நேற்று நடந்ததை பார்த்தாயா? எல்லாமே சிங்காரியின் கண் முன் நடக்கிறது. கண் முன் செய்தேன்! அவள் ஏதாவது சொன்னாளா? பார்த்து ரசிக்கத்தானே செய்தாள்? இப்போது புரிந்ததலா... புரிந்ததா? என்றான் அதே படபடப்புடன்.

மதுமதிக்கு புரிந்தது மாதிரியும் இருந்தது. ஆனால் சில விஷயங்கள் இடித்தது. இவன் என்ன சொல்ல வருகிறான்? இவன் வாயாலே... கேட்போம்! என முடிவுக்கு வந்தவள், நீங்கள் புரியும்படி சொல்லுங்கள் என்றாள்.

குமார் முகம் பெரிதாய் விரிந்தது. மதலில் ஒரு விஷயத்தை தெளிவாய் தெரிந்து கொள். நீ எங்களோடு பங்களாவில் தங்கியிருப்பது சிங்காரிக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை...

ம்ம்... அது எனக்குத் தெரியும்! என்றாள் மதுமதி இறுக்கமான முகத்துடன்.

உனக்குத் தெரியுமல்லவா? அதுதான்... அதே தான் காரணம். உன்னை இங்கிருந்து சிங்காரி விரட்டப் பார்க்கிறாள். அதற்காக என்னை அப்படியெல்லாம் நடிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தினாள்...

அப்படியா?

நீதான் பார்த்தாயே? நான் அப்படிச் செய்யும்போது நீ முகம் சுளித்ததை உற்றுக் கவனித்தாளே! அவளது திட்டமே அதுதான்! நடப்பதைக் கண்டுபிடிக்காமல் நீ மிரண்டு ஓட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்! என்று சொன்னவன் அடுத்து சொன்ன வாக்கியம்தான் மதுமதிக்கு தூக்கியடிக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதில் நான் உன் கட்சி! என்றான் குமார் அழுத்தமான குரலில்.

என் கட்சியா?

ஆமாம்... மது! சிங்காரி பொறாமையாய் உன்னை... அதுவும் தன் சொந்தத் தங்கையை விரட்ட நினைப்பது எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதான் இந்த விஷயத்தில் கட்சி மாறிவிட்டேன். சிங்காரிக்குத் தெரியாமல் உனக்கு உதவப் போகிறேன்... என்றான் பீடிகையாய்.

அவன் பேசிய விதத்தைப் பார்த்தால் மனதில் ஏதோ பெரிய திட்டம் வைத்துக் கொண்டு பேசுவது போல் தெரிய நிஜமாகவே அதிர்ச்சிக்குப் போனாள் மதுமதி.

அவள் திருதிருவென விழிப்பதைப் பார்த்த குமார் அவள் மிரண்டு விட்டாள் என நினைத்து. நீ ஒன்றும் பயப்பட வேண்டாம் மது. சிங்காரியின்



திட்டத்தை நாம் இரவரும் சேர்ந்து முறியடித்து விடலாம். அதற்கு கெட்டிக்காரத்தனமான ஐடியா ஒன்றும் என்னிடம் இருக்கிறது.

ஐடியாவா?

ஆம். சிங்காரியிடம் இதுவெல்லாம் மோசமான செயல், ஒரு அக்காவே தங்கைக்கு இப்படியெல்லாம் செய்யக் கூடாது என தடுத்து விடுகிறேன்!

நீங்கள் சொன்னால் சிங்காரி கேட்டு விடுவாளா?

வேறு வழி? என்னை வைத்துதானே... இந்த டிராமாவை அவள் பண்ண முடிவெடுத்திருக்கிறாள்? நான் ஒத்துக்கொள்ளாவிட்டால் அவளால் என்ன செய்ய முடியும்?

குமார் எதையோ பெரியதாய் பாயிண்ட் பிடித்து பேசுவது போல் பேசிக் கொண்டிருந்தான்.

மதுமதிக்கு நிஜமாகவே பேரதிர்ச்சிதான்! சிங்காரி தன்னை விரட்ட இப்படித் தரக்குறைவாய் நடந்து கொள்வாள் என கொஞ்சமும் அவள் எதிர்பார்க்கவில்லை! ஒரு அக்கா தங்கைக்கு செய்கிற காரியமா இது.

விரைவாய் சிந்தித்தவள் சிங்காரியின் இத்திட்டத்தை முறியடிக்க குமாரின் பேச்சை நம்ப வேண்டிய, கேட்க வேண்டிய கட்டாயத்திலிருப்பதையும் உணர்ந்தாள். அனால் கூடவே குமார் எதற்காக நமக்கு உதவ வேண்டும்? எதனால் இந்த திடீர் கரிசனம்...? என்றெல்லாம் நினைப்பு ஆனால் நினைவுக்கு வந்தபோது குமாரே அதை அவளிடம் விளக்கிக் கொண்டிருந்தான். மது, உனக்கு நான் ஏன் சிங்காரிக்குத் தெரியாமல் இப்படி உனக்கு உதவ வேண்டும்? என்கிற சந்தேகம் எழும். அதற்கு வேறு ஒன்றுமில்லை. நான் உன் மேல் வைத்திருக்கும் பாசம்தான்...

பாசமா?

அம்.. தாய்... தந்தையற்ற.. ஆதரவில்லாத பெண் நீ ! சொந்த அக்கா கூட இப்படி விரட்ட நினைக்கும்போது... உன்னால் என்ன செய்ய முடியும்? அந்த இரக்கம்தான் அளவு கடந்த பாசமாக... மாறி.... உனக்கு உதவத் துடிக்கிறத. மேலும் நான் ஒன்றும் அந்நியன் இல்லையே.. உன் சொந்த அத்தான்தானே ! என்னைத் தாராளமாக நீ நம்பலாம். நான் உன் மீத வைத்திருப்பது உண்மையான அன்பு.

அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டு போக மதுமதிக்கு அவன் திரும்பத் திரும்ப உச்சரித்த அன்பு, பாசம் என்பதெல்லாம் இடித்தது. மேலும் அவன் அதை உச்சரித்த விதமும் எதையோ உணர்த்துவது போல் இருந்தது.

குமாரும் பெரிய அபத்தாந்தவன் போல் பேசியவன், இதோ பார்.. மது.. நீ இனி எதற்கும் கவலைப்பட வேண்டாம். சிங்காரி உனக்கு என்ன பிரச்சினை செய்தாலும் உடனே எனக்கு சொல்லிவிடு. நான் பார்த்துக் கொள்கிறேன். இனி உன்னைப் பாதுகாக்க வேண்டியது, கவனமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டியது... என் பொறுப்பு! என்றான் அழுத்தமான குரலில்

மதுமதி அவன் ரூமை விட்டு வெளிவந்து விட்டாள். சிங்காரியின் நடவடிக்கைகள் தரக்குறைவாய் மோசமாய் போய்விட்டது. அதைவிட குமார் இப்படி நடந்து கொள்வது பேசுவது புதிராகவும் இருக்கிறது. ஆசை ஆசையாய் சிங்காரியைக் காதலித்து கட்டியவன் எதற்காக கட்சி மாற வேண்டும்? எதனால் நம் மீது இரக்கப்பட வேண்டும்?

அதுவும் சிங்காரிக்கு எதிராக செயல்பட ரெடி என்கிறானே?

குமார் என்ன நினைக்கிறான்? அவனுடைய திட்டம்தான் பிடிபடாமல்தான் போயிற்று.

அந்த வார ஞாயிற்றுக்கிழமையன்று பூங்காவில் தன்னை வந்து சந்திக்குமாறு மகேந்திரன் போனில் அவளுக்க அறிவுறுத்தியிருந்தான்.

அதனாலே பழைய தோழி ஒருவளை சந்திக்கச் செல்வதாய் சிங்காரியிடம் சொல்லிவிட்டு பூங்காவை நோக்கி கிளம்பினாள். மகேந்திரன் குறிப்பிட்டிருந்த சிறுவர் பூங்கா ஆரம்பப் பள்ளி ஒன்றின் ஓரமாகவே அமைந்திருந்தது.

மதுமதி பூங்காவின் உள்ளே நுழைந்தபோது ஆங்காங்கு ஓரிரு சிறுவர் சிறுமியர் விளையாடிக்கொண்டிருக்க...பூங்காவின் பெரிய ஆலமரப் பக்கம் கைகளைக் கட்டியபடி அவளுக்காக காத்திருந்தான் மகேந்திரன்.

விரைப்பான கம்பீரத்துடன் அவன் நின்று கொண்டிருந்த விதம் கிரேக்க கற்சிலை வீரர்களை நினைவுபடுத்த... மெய்மறந்து பார்த்தவள் அவன் இருமும்சத்தத்தில் நினைவுக்கு வந்தாள்.

ஏதோ.. ஒரு முக்கியமான விஷயம் இருப்பதாக சொன்னாயே... என மகேந்திரன் ஆரம்பித்ததுமே படபடவென குமார் பற்றிய விஷயங்களை ஒன்று விடாமல் கொட்டினாள் அவள்.

அவள் பேசி முடிக்கும் வரை அமைதியாய் எல்லாவற்றையும் கேட்டவன் அவள் கடைசியில், எனக்கு குமாரின் நடவடிக்கைகள் புதிராய் பிடிபடால் இருக்கிறது... என்று முடிக்கவும் சிரிக்க ஆரம்பித்தான்.

அவள் திகைப்பாய் பார்க்க பதிலுக்கு அவளை உற்றுப் பார்த்தவன் நிஜமாக உனக்குப் புரியவில்லையா? என்றான்.



புரியவில்லை.. என்றாள் அவள் அப்பாவியாய்.

சரிதான், நீ டியூப்லைட்தானே! உனக்கு எங்கே புரியப் போகிறது

என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?

அவள் கோபமாய் கேட்க பதிலுக்கு முறைத்தான்அவன்.

ஒரு ஆண்... திடீரென அக்கறைப் பட்டாலோ கரிசனம் காட்டினாலோ... அதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்...?

வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

அவளும் உச்சரித்துப் பார்த்தவள் மறுபடியும் விழிக்கத்தான் செய்தாள்.

அவள் அப்படிட விழித்தது மகேந்திரனுக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

முட்டாளே! இது கூடவா புரியவில்லை?அவனது குறி நீதான்! உன்னை வளைத்து போட அவன் போடும் திட்டம்தான் இது!

அப்படியா நிஜமா?

அவள் அதிர்ச்சியாய் வியந்தாலும்அதைவிட அவன் தன்னைரகமாய் விளிப்பது மூளையில் சுருக்கென உரைத்தது.

முட்டாள்...!

மறுபடியும் அதே வார்த்தைகளை உபயோகிக்கிறான்.என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்இவன்?

என்னை... முட்டாள்... என்று சொல்லி ஆனந்தப்படா விட்டால்.. உங்களுக்க தூக்கமே வராதுஅப்படித்தானே? துடித்து முகம்சிவக்க கூம்பியது.


ஆனால் மறுநிமிடமே அவளை ஆறுதல்படுத்தும் விதமாய் அவள் தோள்களில் கை வைத்தான் மகேந்திரன்.

இது எந்த வகை உரிமையோ? என அவள் சினமாய் நினைத்தாலும் அதை விலக்க மனமில்லாதவளாகவே அவனைப் பார்த்தாள்.

இதோ பார்... மது, இதுதான் நமக்கு சரியான சந்தர்ப்பம். நான் நினைத்தது போல் குமார் மயங்கி உன் பக்கம்வந்து விட்டான்.இனி காய்களை நகர்த்துவது சுலபம். அந்த பேரிங்கு ரகசியங்களை குமாரிடம் இருந்து எளிதாய் தட்டிப்பறித்து விடலாம். அதனால் உடனடியாக நீ ஒன்று செய்ய வேண்டும்... என்றான்.

என்ன செய்ய வேண்டும்?

அவள் ஆவலாய் கேட்க... மகேந்திரன் சொன்ன பதில் அவளுக்கு எரிச்சலையே ஏற்படுத்தியது.



## 20

மதுமதிக்கு மகேந்திரன் என்னவோ ஏதோ சொல்லப் போகிறான் என்று பார்த்தால்...அவளுக்குபிடிக்காத... அந்த எரிச்சலைக் கிளப்பும் செயலையே செய்யச்சொன்னான்.

அவள் முகம் போன போக்கைப் பார்த்து, என்ன...எதுவோ போல அலுத்துக் கொள்கிறாய்? எல்லாம் உனக்குப் பழகிய... கை வந்த கலையான விஷயம் தானே?என மறுபடி குத்தலாய் சொன்னபோது அவள் நெஞ்சே வலித்தது.

என்னால் முடியாது...! என்றாள் திடமான குரலில்.

என்ன முடியாதா? என்னம்மா சொல்கிறாய்? உன்னை குமாரை காதலிக்கவா சொல்கிறேன்? காதலிப்பது போல் நடிக்கத்தானே சொல்கிறேன் என்றான் பெரிதாய் விளக்கம்கொடுப்பது போல்.

அவள் பேசாமல் உதட்டைக் கடித்தபடி விரைப்பாய் நின்றாள்.

ஒரு வேளை அப்படி நடிப்பது பிடிக்கவில்லை என்றால், நிஜமாகவே அவனை நீ காதலித்து....

மேற்கொண்டு அவன் சொல்வதற்கு நிமிர்ந்து கண்கள் விரிய முறைக்க... அவன் பேச்சை நிறுத்தி அப்படியே சாந்தமானான்.

அவள் வெடித்தாள்.

ஒரு அறியாமல் செய்து விட்டேன். அதே தவறை திரும்பத் திரும்ப செய்யச்சொல்கிறீர்களே. இது எந்த விதத்தில் நியாயம்?

நியாயம்தான்! ஒரு தப்பை சரி செய்ய இன்னொரு தப்புதானே செய்ய வேண்டியிருக்கிறது....

அப்படிச் செய்வதும் கூட தப்புதானே?என்றாள் அவள் விடாமல்.

அந்த தப்பை நீ...முதல் முறையாய் செய்யும்போதே யோசித்திருக்க வேண்டும்.... என்றான் அவன் பதிலடியாய்.

என்ன செய்ய...?அப்போது உங்களைப் போல் புத்தி சொல்ல.. என்னுடன் புத்திசாலி பக்கத்தில் இல்லையே



அவள்ஏற்ற இறக்கச் சொல்ல... அவனாவது விடுகிறதாவது?

நீ முட்டாள் என்பது எனக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம்தான். அதை நீயே ஒவ்வொரு முறையும் சொல்லிக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

அவள் பற்களைக் கடித்து மறுபடியும் முறைத்தாள்.அதை ரசிப்பாய் சிரித்துவிட்டு விஷயத்திற்கு வந்தான்.

இதோ... பார்.., வீணாக...ஏன்... பெரிய கற்பனைகளைப் பண்ணி குழம்புகிறாய்? முதலில் நான் சொல்வது போல் குமார் நடந்து கொள்கிறானா என்பதைக் கவனி! என்றான்

எப்படி...எப்படியென்று சொல்லுங்கள்!

மகேந்திரன் விளக்கினான்.

அதாவது... இனி...குமார் உன்னிடம் ரொம்பவும் பரிவு காட்டுவான். ரொம்பவும் குழைவான். ரோமியோ போல் காதல் ஜாடைகள், சேஷ்டைகள் செய்வான். இப்படியெல்லாம் செய்கிறானா...அவன் நடந்து கொள்கிறானா என்பதைக் கவனி. அப்படி அவன் நடந்து கொண்டால்... பதிலுக்கு நீயும் உன் வேலையைக் காட்டிவிட வேண்டும்....

அப்படி.... நான் என்ன செய்ய வேண்டும்?என்றாள், அவன் மறுபடியும் ஏதோ சிந்தனையில் அவள் பதிலுக்கு உறுத்துப் பார்த்தவன்,இப்படி டியூப் லைட்போல் கேட்டுக்கொண்டிருந்தால் நான் குத்தலாய்த்தான்தொடர்ந்து பேச வேண்டியிருக்கும்... என்றான் மிரட்டுகிற தொனியில்.

அவள் தலையை பலமாய் அவசரமாய் ஆட்டினாள்.

புரிகிறது... புரிகிறது

என்ன புரிகிறது?

குமார்... அப்படி நடந்து கொண்டால்.. அவன் மீது காதல் கொள்வது போல் நடிக்க வேண்டும். சமயம் வரும்போது அவனை ஏமாற்றி அந்த பேரிங்கு ரகசியங்களை கைப்பற்றவேண்டும்....

அப்பாடா..! சரியாகச் சொல்லிவிட்டாய்.. என் பிரச்சனை தீர்ந்தது.. என்றான் அவன் நிம்மதிப் பெருமூச்சோடு.

அவள் முன்னால் நின்றாலோ... இல்லை அவனுடன் பேசினாலோ ஏதோ தனக்கு அறிவே இல்லாதது போல் அஇவன் ஆக்கி விடுவதை உணர்ந்து அவளுள் சினமம் உண்டாயிற்று.

சரி... நான் கிளம்பலாமா? என்றாள் அதே ரோஷத்துடன்.

அதற்குள்... என்ன அவசரம்?

குரல் கனிய அவன் கேட்ட போது திடுக்கிட்டுத்தான் நிமிர்ந்தாள். அவன் பார்த்த பார்வையும் அவளுள் ஒருவித குறுகுறுப்பை உண்டு பண்ணியது.

சட்டென முகம் சிவந்தவளாய், நம்மை எதற்காக இப்படி உற்றுப் பார்க்க வேண்டும்? என்ற சந்தோஷ நினைப்பை ஓட விட்டவள் மறுகிடமே அவசரமாய் துடைத்தாள்.

இவளாவது... வேறு கோணத்தில் பார்ப்பதாவது? மறுபடியும் கூடித்துக் குதற...ஏதாவது குற்றத்தை தேடுகிறானோ... என்னவோ?

நீ கவலைப்படாதே! குமார், கண்டிப்பாக மயங்கியிருப்பான். இந்த ஆளை விழுங்கும் உன் அபார கவர்ச்சி முன் அவன் எம்மாத்திரம்.?

அவளைப் பார்த்துக் கொண்டே புகழ்வது போல் சொன்னதும் அவள் கோபத்தைக் கூட்டவே செய்தது.

அபார கவர்ச்சியாமே! அப்படி என்ன அரை குறையாகவா அவள் நடமாடுகிறாள்.

கவர்ச்சி... எனக்குப் பிடிக்காத விஷயம்... என்றாள் அவள் குரலில் அழுத்தமாய்.

அவன் அதற்கும் விளக்கினான்.

கவர்ச்சி என்று நான் சொல்வது உனது அபார அழகைத்தான்! அந்த மைவிழிப் பார்வை, இதழோடு ஓடும் குறுநகை, முத்துப் பற்கள் தெரிய அந்த நகைப்பு, எல்லாமே... எந்த ஒரு ஆணையும் சட்டென உன் மேல் வசீகரப்படுத்தி விடும்... சொல்லிவிட்டு அவன் உற்றுப் பார்க்க அவள் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் சிலை போலவே நின்று கொண்டிருந்தாள்.

இவனிடம் என்ன சொல்வது? என்ன பேசுவது? எதைச் சொன்னாலும் அதில் ஒரு குற்றம் கண்டுபிடிப்பான். அழகு... வசீகரம் என்று புகழ்ந்து... அப்படியே ஆளை மயக்கும் சாகசக்காரி என்று முடித்து விடுவான். இவனிடம் இப்படி குட்டு வாங்குவதற்கு பேசாமல் மரப்பாச்சி பொம்மை போல் உணர்ச்சியில்லாமல் நின்று விடலாம்.

அவள் மறுபடி உணர்வுக்கு வந்தபோது... அவன் விரல்களால் அவள் முகத்துக்கு நேராய் சொடுக்கியபடி,ஹலோ. என்ன என்னாயிற்று? திடீர்... திடீரென எதுவும் பேசாமல் ஏதோ கனவில் மூழ்கி விடுகிறாய்? என கேட்டுக் கொண்டிருந்தான்.



அப்படியெல்லாம்... ஒன்றுமில்லை என்றாள் அவசரமாய் மறுத்தவாறு.

அவன் மறுபடியும் உற்றுப் பார்க்க பேச்சை மாற்ற விரும்பியவளாய், உங்கள் தொழில் பேரிங்குகள் விற்பனை என்னவாயிற்று? குமார் கம்பெனி ஆட்கள் உங்களுக்கு எதிராக டூப்ளிகேட் பேரிங்குகளை சந்தையில் விட்டு விட்டார்களா? என்றாள்.

தான் ரகசியமாய் திருடி சிங்காரியிடம் கொடுத்த அந்த பேரிங்கு உற்பத்தியின் ஜெராக்ஸ் பிரதிகளால் பெரும்இழப்பை தொழிலில் சந்திக்க வேண்டியதாகி விட்டது. எல்லாம் உன்னால்தான். உன் அக்காவுக்காக நீ செய்த தவறால் என் பிசினஸ் சாம்ராஜ்யமே ஆட்டம் கண்டு விட்டது... என்றெல்லாம் அவன் புலம்பினது ஞாபகத்திற்கு வரவே... அவள் கேட்டாள்.

அவள் கேட்டதும் மகேந்திரனின் முகம் பெரும் சிந்தனைக்குப் போனது. நெற்றியைத் தேய்த்தபடி அவளைப் பார்த்தான்.

ம்ஹூம்... தொழில் பாதிப்புதான்.. என அலுத்தவன், குமார் நேரிடையாய் அவனே போலி பேரிங்குகளை தயாரித்து விற்காமல் சிறு சிறு கம்பெனிகளுக்கு அந்த செய்முறையை கொடுத்து விட்டான். அவர்கள் அதை சிறிதாய் ஒவ்வொரு இடங்களிலும் சந்தைப்படுத்தி வருகிறார்கள். இப்படியே அவர்கள் செய்தால்... சரியாக இன்னும் ஆறே மாதங்களில் என் மொத்த விற்பனையும் பாதித்துவிடும். கம்பெனியை இழுத்து மூட வேண்டிய அளவுக்கு நிலைமை போய்விடும் சொல்லிய அவன் முகத்தில் கவலையில் ரேகைகள் படர சொல்ல... அவளுக்கும்வேதனை மனதில் வாட்டிற்று.

எல்லாவற்றுக்கும் காரணம் அவள்தானே! அவள் மட்டும் அப்படி திருடிக் கொடுக்காமல் இருந்திருந்தால் முயற்சியில் சொந்த உழைப்பில் கட்டிய சாம்ராஜ்யத்தை எவ்வளவு எளிதில் சீட்டு கட்டுகளை குலைப்பது போல் கலைத்துவிட காரணமாகி விட்டாள்!

அவன் கோபப்படுவது.., தனக்கு தண்டனை கொடுப்பது எல்லாமே நியாயம்தான்! என்றதும் உணர்ந்தாள்.

வேறு... வழி... இதைத் தடுக்க முயற்சிகள் எதுவும் இல்லையா? என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

வழி இருக்கிறது... என்றான் மகேந்திரன் இறுக்கமான முகத்துடன்.

அவள் விழிகளை விரித்துப் பார்த்ததும் அதே இறுக்கத்தோடு பேசினான். இதற்கு ஒரே வழி... பேரிங்குகளின் தயாரிப்பு வடிவமைப்பை கொஞ்சம் மாற்றுவதுதான். அப்படி மாற்றம் செய்வது

வாடிக்கையாளர்களுக்கு பிடித்திருக்க வேண்டும். அவர்கள தரமாகத்தான் இருக்கிறது என நம்பி விட வேண்டும். அப்படிட அவர்களுக்கு பிடித்து விட்டால்.. எல்லாப் பிரச்சனையும் தீர்ந்துவிடும். டூப்ளிகேட் பேரிங்குகளால் எவ்வித பாதிப்பும்ஏற்படாதபடி தொழிலையும் காப்பாற்றிவிட முடியும்.

அவன் சொன்னதும் ஓரளவு நிம்மதி அடைந்தவளாய், அப்படியானால் பேரிங்குகளின் வடிவமைப்பை மாற்றிப் பார்க்கப் போகிறீர்களா? என்றாள்.

அதற்கும் மகேந்திரன் மெல்ல தலையசைத்தவன், அதுவும் அவ்வளவு எளிதான காரியம் இல்லை. பேரிங்குகளின் வடிவமைப்பை மாற்றுவதற்கு நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆராய்ச்சி செய்வது போல் செய்முறையில் ஈடுபட வேண்டும் அதற்காக இரவு பகலாய் விழித்துப் புது வடிவில் பல டிசைன்களை உருவாக்கி பார்த்துக் கொண்டிருக்கிறேன். எப்படியும் அதில் வெற்றி பெற்று விடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் அதைவிட..... குமாரிடம் இருந்துஅவனது பேரிங்குகளின் செய்முறை குறிப்புகளை நீ சீக்கிரமாக எடுத்துக் கொடுத்துவிட்டால்... எல்லாவற்றையும் உடனடியாக சமாளித்து விடலாம்....

சமாளித்து விடலாமா?

ஆமாம். குமார் தயாரிக்கும் பேரிங்குகள் போலவும் டூப்ளிகேட் பேரிங்குகள் வர ஏற்பாடு செய்துவிட வேண்டும். அப்படிச் செய்துவிட்டால்.. சந்தையில் நிறைய டூப்ளிகேட் பேரிங்குகள் விற்பனைக்கு வந்திருப்பதை வாடிக்கையாளர்கள உணர்ந்து கொள்வார்கள். அப்படி உணர்ந்து கொண்டால் தரம் பாரத்து நம் கம்பெனியின் முத்திரைகளை சரிபார்த்து வாங்கும் விழிப்புணர்வுக்கு வந்து விடுவார்கள, அப்படி வாடிக்கையாளர்கள விழித்து விட்டால், போலித் தயாரிப்பாளர்கள் ஏமாந்து விடுவார்கள். அவர்களால் போலித் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதும் விற்பனை செய்வதும் கஷ்டமாகி விடும்..

அவன் விளக்கமாய்ச் சொல்ல சொல்ல மதுமதிக்கு எல்லாம் புரிந்தது.. தன்னால்தானே... இவனுக்கு இந்த நிலை... என உள்ளூர வருந்தி வேதனைப்பட்டவள் அதே வேகத்தில் நிமிர்ந்தாள்.

ஒரு பத்து நாட்கள டயம் கொடுங்கள்... எப்படியும் அந்த பேரிங் செய்முறைகளை குமாரிடமிருந்து அபகரித்து உங்களிடம் கொண்டு வந்து தருகிறேன்! என்றாள் உறுதியான குரலில்.





# 21



சிங்காரிக்கு ஒன்றும் ஓடவில்லை.

சோபாவில் உட்கார்ந்திருந்தவள் கன்னத்தில் கை வைத்து தலைசாய யோசித்துக் கொண்டிருந்தாள்.

குமார்... அப்படியெல்லாம் மதுமதியிடம் வரம்பு மீறி நடந்து கொள்ளமாட்டான் என்று சொன்னது திகைப்பை ஏற்படுத்தி இருந்தாலும் அடுத்து அவன் சொன்ன வார்த்தைகள்தான் அவளுக்கு பெரும்அதிர்ச்சியையே ஏற்படுத்தி இருந்தது.

ஒரு கணம் குமார் சொன்னவைகளை எல்லாம் நினைத்துப் பார்த்தாள் அவள்.

வேண்டாம் சிங்காரி. அப்படி மதுமதியிடம் நடந்து கொள்வது ஆபது என்றான் குமார்.

ஆபத்தா?

ஆமாம். ஆபத்து அவளுக்கு மட்டுமில்லை. எனக்கும் சேர்த்துத்தான்...

பீடிகையாய் அவன் சொல்ல புரியாமல் அவனைப் பார்த்தாள் சிங்காரி.

என்ன சொல்கிறீர்கள்?

சிங்காரி, நான் அப்படி நடந்து கொண்டால் மதுமதி எரிச்சலாகி கோபித்துக் கொள்வாள். ஆனால் என் நிலையைப் பற்றி கொஞ்சமும் யோசித்துப் பார்...

உங்கள் நிலையா?

ஆமாம்... என்னதான்... எனது மச்சினியாக இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே! அவளை அப்படியும் இப்படியுமாக தொட்டு நடிக்க ஆரம்பித்தால்... அப்படிச் செய்வதினால் கூட என் மனதும் சலனப்பட்டு விடுமே! என்னையறியாமல் ஒருவித ஈடுபாடு வந்துவிடக் கூடாதே! நானும் ஒரு ஆண் மகன்தானே! அந்தக் கோணத்தில் யோசித்துப் பார். நான் அப்படி நடந்து கொள்வது பெரும் ஆபத்தில் கொண்டு போய்விடும். அதிலும் உன்

தங்கை இருக்கிறாளே... அவளுக்கு ஆளை மயக்கும் அபார அழகு... அதில் ஒருவன் விழுந்துவிட்டால்... பின் எழுவது அவ்வளவுதான்!

குமார் எச்சரிப்பது போல் பேசினாலும் உள்ளூர அவனது பேச்சின் அர்த்தம் புரிந்த சிங்காரி பயங்கரமாய்த் திடுக்கிடத்தான்செய்தாள்.

அதிலும் குமார் தன் முன்னிலையிலேயே அவளை ஆளை மயக்கும் அபார அழகு என குறிப்பிட்டது அவளை மிகவும் எரிச்சலடையச் செய்திருந்தது.

என்னை விடவா அவள் அழகு? என்றாள் அதே தாங்கமுடியாத எரிச்சலில்.

அது.. அது.. ஆமாம்.. என சொல்ல வந்த குமார் அவள் கோபத்தைக் கண்டு டக்கென வார்த்தைகளை மாற்றி, அது... அது... அப்படி மற்றவர்கள் சொல்கிறார்கள் என்று முடித்தான்.

தோள்களை குலுக்கி உதட்டைச் சுழித்தாள் சிங்காரி.

உண்மைதான்! மற்றவர்களை மயக்கி தான் பெரிய ரதி போல் என சொல்ல வைத்து விடுவாள். ஆனால் நிஜத்தில் அவளுக்குஅழகு.... என்ற ஒன்றுமே இடையவே இடையாது.

சிங்காரி தன் பங்கிற்கு சொல்லி திருப்திப்படுத்துக் கொள்வதைக் கண்டு குமார் உள்ளுக்குள் அட... அசடே.... அவள் அழகு முன் நீ பிச்சையல்லவா வாங்க வேண்டும்!
நான் மட்டும் உனக்கு முன்னதாக அவளைப் பார்த்திருந்தால்... நிச்சயம் அவளைத்தான் காதலித்து கட்டியிருப்பதால்... நிச்சயம் அவளைத்தான் காதலித்து கட்டியிருப்பேன்! பொறுமி விட்டு வெளியே எதையும் காட்டிக் கொள்ளாதவனாய் அவள் சொல்வதை ஆமோதிப்பது போல் தலையாட்டினான்.

சிங்காரி ஞாபகம் வந்தவளாய் சட்டென விஷயத்திற்கு வந்தாள். சரி, உங்கள் பிரச்சினை என்ன? அப்படி மதுமதியிடம் வரம்பு மீறி நடிக்க உங்களுக்கு பிடிக்கவில்லை. அப்படித்தானே?

அவள் கேட்க மறுபடியும் தலையை வேகமாய் ஆட்டினான் குமார்.

சிங்காரி தலையில் கை வைத்து மறுபடியும் தீவிர சிந்தனைக்குப் போனாள்.

இனி... இந்த விஷப் பரீட்சை வேண்டாம் என நினைத்தாள்.



என்ன இருந்தாலும் மதுமதி.. கல்யாணமாகாத பெண். குமார் அப்படி இப்படிச் செய்யப் போக... பசுங்க போல் ஒட்டிக் கொண்டு விட்டால்.. பின் விபரீதமாகி விடுமே!

குமாரும் அதையேதான்... பயம் போல் சொல்கிறான். அவன் சொல்வதும் உண்மைதான்!

எந்தச் சூழ்நிலையிலாவது.... அவனும் சபலப்பட்டு விட்டால் பின் கதை கந்தலாகி விடுமே!

அதிலும் இந்தமதுமதியை நம்ப முடியாது. சாகசக்காரி! நாம் சொன்னதற்காக... அப்பேற்பட்ட மகேந்திரனை மயக்கி ரகசியங்களை திருடியவள்!

அப்படிப்பட்டவளுக்கு...இந்தக் குமாரை வழிக்கு கொண்டு வருவதுதன் வலையில் சிக்க எம்மாத்திரம்?

படபடவென யோசித்த சிங்காரிக்கு ஒன்று தெளிவாய் புரிந்தது.

எது... எப்படியோ! இந்த மதுமதியை இப்படிட இங்கேயே தங்கவிடுவது பெரும் ஆபத்து!

அவளால்... குமாரை...மயக்கி காதலித்து பெற்றிருக்கும் சிங்காரியின் இந்த சொகுசான வாழ்க்கைக்குகூட ஆபத்து வந்துவிடும்!

அதனால் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்.

எப்படியாவது... எதையாவது... காரணத்தைச் சொல்லியாவது.. மதுமதியை இங்கிருந்து விரட்டி அடித்தாக வேண்டும்!

என்ன செயள்ய? எப்படி விரட்ட

நெடுநேரம் கண்களை அகலவிரித்து யோசித்தாள் சிங்காரி.

அந்நேரம் பார்த்து அவளைத் தேடி மாதர் சங்க உறுப்பினரும் அவளதுதோழியுமான குண்டு கல்பனா வர... சிங்காரி உற்சாகமாகி தன் கவலையை முழுவதும்அவளிடம் கொட்டினாள்.

விஷயத்தைக் கேட்ட கல்பனா தனது குண்டான உடம்பு முழுவதும் அதிரும்படி சிரித்துவிட்டு,ப்பூ... இதுதானா விஷயம்? இதை சுலுவாய் சமாளித்துவிடலாமே! என்றாள்.

எப்படி? என்ன சொல்கிறாய்?

ஆவலாய் சிங்காரி கேட்க,உடனே உன் தங்கைக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வை. மாப்பிள்ளை அவளைக் கையோடு இழுத்துக் கொண்டு போய் விடுவான். அதிலும் நீ சரியான குரங்கன் ஒருவனைப்

பிடித்து மாப்பிள்ளையாக்கி விட்டால், உன் பிரச்சினை எல்லாம்தீர்ந்து விடும்! என்றாள்.

என்ன சொல்கிறாய்....? குரங்களா... கொஞ்சம் புரியும்படி சொல்!

அதாவது சிங்காரி... ஒரு பொறுக்கி... ஒரு ரவுடி போல் சரியான முரட்டுக்காரனை மாப்பிள்ளையாக்கிவிட்டால்... உன் தங்கை கால காலத்திற்கும் அவனிடம் அடிமையாகி கிடப்பாள். அவனும் அவளை தன் கால் மாட்டிலேயே அடிமை போல் அடக்கி வைத்திருப்பான்.இதில் உனக்கு இன்னொரு லாபமும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது...

இன்னொரு லாபமா?

ஆமாம்! உனக்கு ஏதாவது வம்பு தும்பு பிரச்சினை இருந்தால் அந்த ரவுடி நீகூப்பிட்ட குரலுக்கு துணை வந்து நிற்பான். மேலும் இப்போது உள்ள சூழ்நிலையில் உனக்கு லட்சக்கணக்கான பணம் கிடைக்கவும் ஒரு வாய்ப்பு இருக்கிறது.

என்ன சொல்கிறாய்... லட்சக்கணக்கான பணமா?

ஆமாம் சிங்காரி! எனக்குத்தெரிந்த ரவுடி ஒருவன் சேரிக்குப்பம் பகுதியில் இருக்கிறான். அவனது பெயரே சேரிக்குப்பம் தனபால்தான். அடிதடி, கட்டைப் பஞ்சாயத்து என சகல ரவுடித்தனங்களிலும்அவன் பிரபலம். போன முறை அவனை ஒரு கட்டைப் பஞ்சாயத்து விஷயமாய்ப் பார்க்கப் போனபோதுஅவன் தனக்கு கல்யாண ஆசை வந்துவிட்டதாகவும் நல்ல அழகான பெண் தனக்கு மனைவியாய் வர விருப்பப்படுவதாகவும் சொன்னான்.அப்படி ஏற்பாடு செய்து கொடுத்தால் அதற்கு கைமாறாக லட்சக்கணக்கில் பணம் தருவதாகவும் ஆசை காட்டி உறுதி கூறினான்! சரி என்ன சொல்கிறாய் நீ? உன் தங்கை வேறு அழகாய் இருக்கிறாள்?அந்தச் சேரிக்குப்பம் தனபால் அவளுக்கு நல்ல சாய்ஸ்! உனக்கு பிரச்சினைகள் தீர்ந்து விடும். கை நிறைய பணமும் கிடைக்கும்!

கல்பனா சொல்லிவிட்டு கேட்க சிங்காரி அப்படியே பரவசம் கண்டவள் போல் எழுந்து விட்டாள். ஆஹா! அற்புதமான வழியை அல்லவா சொல்லியிருக்கிறாய்... உடனே அந்த சேரிக்குப்பம் தனபாலை நான் பார்க்க வேண்டும்... ஏற்பாடு செய்! என்றாள் முகம் வெடிக்கும் சந்தோஷத்துடன்.

நடக்கும் பேச்சுக்களை எல்லாம் மறைவாய் நின்று கேட்டுக்கொண்டிருந்த குமாரும் அதிரத்தான் செய்தான்.





# 22



மதுமதி ஒரு வாரத்தில் கண்டிப்பாய் அந்த பேரிங்கு ரகசியங்களை திருடி வருகிறேன் என வீராப்பாய் மகேந்திரனிடம் சொல்லி விடைபெற்று வந்து விட்டாள்.

அவளுக்கு மகேந்திரனின் கவலை பொங்கும் முகத்தைப் பார்க்கத் திராணியில்லை.

அவனது சாம்ராஜ்யம் கொஞ்சமும் சரியக் கூடாது.

அதுவும் தன்னால்... என்ற கெட்ட பெயரும் வந்துவிடக்கூடாது.

பின் தன் வாழ்நாள் முழுக்க மகேந்திரரன்அவளை மறக்கவே மாட்டான்... மன்னிக்க மாட்டான்!

அப்படியொரு இக்கட்டான நிலை தனக்கும் மகேந்திரனுக்கும்வந்துவிடக்கூடாது என அவள் துடிக்கத்தான் செய்தாள்.

அவனிடம் அவன் மனதில் அவளுக்கு நல்ல பெயர் ஏற்படுகிறதோ இல்லையோ... கண்டிப்பாய் துரோகி,குடியைக் கெடுத்தவள் என்றெல்லாம் அவப் பெயர் ஏற்பட்டு விடக்கூடாது... என்றே பயந்தாள்.

ஆனால் அவள் பயப்படும்படிதான் நிலைமையும் மாறிக்கொண்டிருந்தது.

குமாரின் பங்களாவுக்கு திரும்பியபோது தாம் தூம்மெனத்தான் குதித்துக் கொண்டிருந்தாள் சிங்காரி.

எங்கே... வெளியே போனாய்? தோழியைப் பார்க்க இவ்வளவுநேரமா? வயசுப்பெண் இப்படிகண்டபடி சுற்றித்திரிந்தால்... நாலு பேர் உன்னை எப்படியெல்லாம் பேசுவார்கள்?பின்அக்கா சிங்காரி தங்கையை வளர்க்கத் தெரியாமல் வளர்த்து விட்டாள்.... என என்னைக் குற்றஞ்சாட்ட மாட்டார்களா?

சிங்காரி குற்றஞ்சாட்டி குதித்தபோது புரியாமல் அவளைப் புதுசாகத்தான் பார்த்தாள் மதுமதி.

எதற்காக... இப்போது... இப்படி புது ரூட்டில் போகிறான்? எதற்காக இந்த நியர் தரிசனம்? இவ்வளவு நாள் எப்படியும் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என இருந்துவிட்டு இப்போது என்ன பெரிய அக்கறை?

சொமாய் இருந்தாலும் அவளிடம் வாதம் புரிய விரும்பாதவனாய், இல்லையக்கா... இனிமேல் சீக்கிரம் வந்து விடுகிறேன் என்றான் பயந்தது போலான பணிவுக் குரலில்.

ஆனால் அதற்கும் சிங்காரி, அது... என்ன தொழிலைப் பார்க்கப்போகிறேன்... தொழிலைப் பார்க்கப் போகிறேன் எனப் புதுப் பழக்கம்? யாரையும் நீ பார்க்க வேண்டாம். வயசுப் பெண்ணாய் கட்டுப் பெட்டியாய் வீட்டிலேயே... கிடக்க வேண்டும். காலா காலத்தில் உனக்கொரு கல்யாணம் பண்ணி பார்க்க வேண்டாமா? என முடிக்கவும் மதுமதி நிஜமாகவே திடுக்கிட்டுத்தான் போனாள்.

இவள் எங்கே சுற்றி எதற்கு வருகிறாள்? என்பதை புரிந்து கொள்ள முடியாமல் அவள் குழம்பத்தான் வேண்டியிருந்தது.

கல்யாணமா... என்ன சொல்கிறாய்? என்றாள் தன் அதிர்ச்சியை முழுவதும் குரலில் காட்டி

ஆனால் சிங்காரியின் தலை வேகமாய் சுழன்றது. அட... அதற்கு... ஏன்... இந்த அதிர்வு காட்டுகிறாய்? கல்யாணம் என்ற ஒன்று உன் வாழ்க்கையிலும் நடக்க வேண்டியது தானே? காலம் முழுக்க இப்படி கன்னிப் பெண்ணாகவே இருந்து விடுவாயா? நீயும் காலா காலத்தில் ஒரு கல்யாணம் செய்த புகுந்த வீடு போக வேண்டியவள்தானே?

சிங்காரி கடைசியில் சொன்ன வாக்கியம் மதுமதிக்கு பொறி தட்டினாற் போல் எல்லாவற்றையும் புரிய வைத்தது. புகுந்த வீடு செல்ல வேண்டுமாமே! அப்படியானால் இங்கிருந்து விரட்ட சிங்காரி போடும் மற்றொரு பிளான் தானா இது?

யோசித்தபடியே சிங்காரிக்கு எதுவும் பதில் சொல்லாமல் குனிந்த தலையுடன் நின்றாள்.

சிங்காரி மேலும் ஐந்து நிமிடம் அவளுக்கு அறிவுரைகளை மழையாய் பொழிந்துவிட்டு அகன்றாள்.

ஆனால் தன் ரூமை நோக்கிச் செல்லும் போது தற்செயலாய் எதிரே வந்த குமார், நிறைய விஷயம் இருக்கிறது. பிறகு சொல்கிறேன்... என கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு அகன்றதும் அவளுக்கு விஷயம் நினைத்தது போல்தான் என புரிந்து விட்டது.



அன்று அலுவலகத்தில் அவளை அழைத்த குமாரும் அதையே விளக்கினான். இதோ பார் மதுமதி. உனக்காக உன் நலனுக்காக நான் அப்படி வரம்பு மீறி நடந்து கொள்ள மாட்டேன். உன்னை சங்கடப்படுத்த மாட்டேன் என கறாராய் சிங்காரியிடம் சொல்லி விட்டேன். அதனால் தான் அவள் தனது பழைய பிளானை விட்டுவிட்டு புதுத் திட்டம்போட்டிருக்கிறாள் என்றான்.

புதுத்திட்டமா?

ஆம் அவளது குறி... உன்னை இங்கிருந்து பங்களாவில் இருந்து விரட்ட வேண்டும் என்பதுதானே... அதற்கு உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி உன்னை விரட்டத் திட்டமிட்டிருக்கிறாள்.

என்ன கல்யாணமா?

உச்ச பட்ச அதிர்ச்சியில் அதிர்ந்து மதுமதி கேட்க... அவனும் அதிர்ந்தவன் போல் தலையை வேகமாய் ஆட்டினான்.

ஆமாம்! அதுவும் யாருக்குத் தெரியுமா? ஒரு ரவுடிக்கு! சரியான தெருப் பொறுக்கிக்கு!

என்ன சொல்கிறீர்கள்...? ரவுடியா? தெருப் பொறுக்கியா?

நான் சொல்வது உண்மை மது! அடிதடி, கட்டைப் பஞ்சாயத்து என அலைகிறவன் அந்த சேரிக்குப்பம் தனபால். ஊரில் பெரிய ரவுடி. நிறை கொலை கேஸ்கள், வழிப்பறிகள் என ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் அவனது பெயர் குற்றவாளிகள் லிஸ்டில் இருக்கிறது. உனது அருமை அக்கா சிங்காரி அவனைத்தான் உனக்கான மாப்பிள்ளையாய் தேர்வு செய்திருக்கிறாள்...

குமார் சொல்லச் சொல்ல மதுமதிக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இவன் என்ன சொல்கிறான்? இவன் சொல்வதெல்லாம் நிஜமா? சிங்காரி அந்த அளவுக்கு கொடூரமாய் போய்விட்டாளா?

அதிர்ச்சியில் தலை சுழல அவனையே பார்த்து, எதற்காக இப்படி சிங்காரி செய்ய வேண்டும்? அப்படி என்ன... அவளுக்கு என் மேல் கோபம்? என்றாள் புரியாதவளாய்.

அதற்கும் விளக்கம் சொல்பவனாய் தலையாட்டினான் குமார். அதற்கும் காரணம் இருக்கிறது? என்ன தெரியுமா? நான் உன் மீது பரிவு காட்டுவதுதான்! அதைக் கண்டுபிடித்ததும் உன் மேல் இருந்த சாதாரண கோபம் எரிமலைபோல் அவளுக்கு ஆயிற்று!

அப்படியா மது... என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் காட்டிய பரிவா?

ஆமாம் மது. இந்த உன்னைத் தொட்டு வரம்பு மீறி சிங்காரி நடிக்கச் சொன்னதற்கு... அப்படியெல்லாம் செய்யக் கூடாது... மது.. பாவம்.... என நான் உனக்காகப் பரிந்துபேசியது, பரிவு காட்டியது... அவனதுகோபத்தை அதிகப்படுத்தி விட்டது. அதனாலே உன்னை எப்படியாவது இங்கிருந்து உடனடியாக விரட்ட வேண்டும் என தீர்மானித்து இப்படி விபரீதமாக முடிவெடுத்து பிளான் செய்திருக்கிறான்...

குமார் சொல்லி முடித்தான். மதுமதியால் அவன் சொன்ன எல்லாவற்றையும் உடன் நம்ப முடியவில்லை. தன்னை விரட்ட சிங்காரி இவ்வளவு தூரம்போவான் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை.

எது எப்படியானாலும் சிங்காரியிடம் எல்லாவற்றையும் பேசிப் பார்த்து அவள் மனநிலையை தெரிந்து கொள்ள விரும்பினான்.

அதனாலே அன்றிரவு தூங்கப் போன சிங்காரியை, உன்னிடம் நிறைய பேச வேண்டும்... என்று தனியே அழைத்து வந்தாள்.

சிங்காரி இறுக்கமான முகத்துடன் வந்து உட்கார்ந்தாள்.

அக்கா, நான் நேரிடையாகவே பேசட்டுமா?என்றாள் மதுமதி.

ம்ம்... பேசு.... என்றாள் சிங்காரி அசராமல்.

நான் இங்குஇருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?

இல்லையே... யார் சொன்னது? என்றாள் அவள் போலி வியப்பு காட்டி.

பின் ..... ஏன்.. என்னை வெறுக்கிறாய்?

வெறுக்கிறேனா..?அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை மது. உன் மீது நிறைய பாசம் வைத்திருககிறேன். அதனாலே அக்கறையுடன் உன் வாழ்க்கையில் நிறைய நல்ல விஷயங்களை நடத்த தீர்மானித்திருக்கிறேன்..

அவள் சுற்றாமல் நேரிடையாக விஷயத்திற்கு வரவும் தானும் நேரிடையாகவே கேட்டு விடுவது என்று தீர்மானித்தாள் மதுமதி.

நீ சொல்லும் நல்ல விஷயம் என் திருமணம்தானே?

ம்ம்... என தலையாட்டினாள் சிங்காரி.

கூடவே உனக்கு எப்படித்தெரியும் என்பது போலான சந்தேகப் பார்வை.

அதை உணர்ந் மதுமதி, உன்பேச்சை வைத்து கண்டுபிடித்தேன். என் திருமணத்திற்கஇப்போது என்ன அவசரம்? என்றாள்.

ஏன்... காலாகாலத்தில் நடக்க வேண்டியது ஒன்று தானே?



அதற்காக இப்போதேவா?


இப்போதுதான். உனக்கு ஏற்ற,உன்னைக் காப்பாற்ற சரியான ஆள் ஒருவர் கிடைத்திருக்கிறார்.

என்ன... என்னைக் காப்பாற்றவா?

மதுமதி ஆச்சரியம் காட்டி கேட்க சிரிக்க ஆரம்பித்தாள் சிங்காரி.

என்ன மது... அதற்குள் எல்லாவற்றையும்மறந்து விட்டாயா? நீ என்னிடம் அஞ்சி அடைக்கலம் தேடி ஓடி வந்தது எதற்காக? அந்த மகேந்திரனைக் கண்டு பயந்துதானே? அவன் உன்னைக் கொலை செய்வதாய் மிரட்டியதனால் தானே?அதனால்தான் திருமணம் என்ற பெயரில் தக்க பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உனக்கு பண்ண இருக்கிறேன்....

சிங்காரி நீட்டி இறக்கிச் சொல்ல அதன் விபரீதத்தை உணர்ந்து அப்படியே ஸ்தம்பித்து போனாள் மதுமதி.



## 23

மதுமதிக்கு சிங்காரி பெரும்சோதனை உண்டு பண்ணினால் என்றால் குமார் வேறு உருவில் சோதனையைக் கொண்டு வந்தான்.

அன்று அலுவலகம் வந்த மதுமதியை அழைத்து கறாராய் பேசினான் குமார்.

இனியும் உன்னுடைய முடிவைச் சொல்லாமல் என்னை ஏமாற்ற முடியாது. உடனே சொல்ல வேண்டும்.... என்றான்.

முடிவா...? என்ன சொல்கிறீர்கள்?

புரியாமல் மாதிரி பேச வேண்டாம்... மது... எனது நோக்கம் உனக்குத் தெரியாதா?

நோக்கமா?

அவள் மறுபடியும் புரியாததுபோல் கேட்டது குமாருக்கு எரிச்சலை கிளப்பியது.

ஆமாம் மது இந்த உன்னைத் தொட்டு வரம்பு மீறி சிங்காரி நடிக்கச் சொன்னதற்கு... அப்படியெல்லாம் செய்யக் கூடாது... மது.. பாவம்... என நான் உனக்காகப் பரிந்துபேசியது, பரிவு காட்டியது... அவளதுகோபத்தை அதிகப்படுத்தி விட்டது. அதனாலே உன்னை எப்படியாவது இங்கிருந்து உடனடியாக விரட்ட வேண்டும் என தீர்மானித்து இப்படி விபரீதமாக முடிவெடுத்து பிளான் செய்திருக்கிறாள்...

குமார் சொல்லி முடித்தான், மதுமதியால் அவன் சொன்ன எல்லாவற்றையும் உடன் நம்ப முடியவில்லை. தன்னை விரட்ட சிங்காரி இவ்வளவு தூரம்போவாள் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை.

எது எப்படியானாலும் சிங்காரியிடம் எல்லாவற்றையும் பேசிப் பார்த்து அவள் மனநிலையை தெரிந்து கொள்ள விரும்பினாள்.

அதனாலே அன்றிரவு தூங்கப் போன சிங்காரியை, உன்னிடம் நிறைய பேச வேண்டும்... என்று தனியே அழைத்து வந்தாள்.

சிங்காரி இறுக்கமான முகத்துடன் வந்து உட்கார்ந்தாள்.

அக்கா, நான் நேரிடையாகவே பேசட்டுமா?என்றாள் மதுமதி.

ம்ம்... பேசு.... என்றாள் சிங்காரி அசராமல்.

நான் இங்குஇருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?

இல்லையே... யார் சொன்னது? என்றாள் அவள் போலி வியப்பு காட்டி

பின் ...... ஏன்.. என்னை வெறுக்கிறாய்?

வெறுக்கிறேனா..?அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை மது உன் மீது நிறைய பாசம் வைத்திருக்கிறேன். அதனாலே அக்கறையுடன் உன் வாழ்க்கையில் நிறைய நல்ல விஷயங்களை நடத்த தீர்மானித்திருக்கிறேன்...

அவள் சுற்றாமல் நேரிடையாக விஷயத்திற்கு வரவும் தானும் நேரிடையாகவே கேட்டு விடுவது என்று தீர்மானித்தாள் மதுமதி.

நீ சொல்லும் நல்ல விஷயம் என் திருமணம்தானே?

ம்ம்... என தலையாட்டினாள் சிங்காரி.

கூடவே உனக்கு எப்படித்தெரியும் என்பது போலான சந்தேகப் பார்வை.

அதை உணர்ந் மதுமதி, உன்பேச்சை வைத்து கண்டுபிடித்தேன். என் திருமணத்திற்கஇப்போது என்ன அவசரம்? என்றாள்.

ஏன்... காலாகாலத்தில் நடக்க வேண்டியது ஒன்று தானே?



அதற்காக இப்போதேவா?


இப்போதுதான், உனக்கு ஏற்ற,உன்னைக் காப்பாற்ற சரியான ஆள் ஒருவர் கிடைத்திருக்கிறார்.

என்ன... என்னைக் காப்பாற்றவா?

மதுமதி ஆச்சரியம் காட்டி கேட்க சிரிக்க ஆரம்பித்தாள் சிங்காரி.

என்ன மது... அதற்குள் எல்லாவற்றையும்மறந்து விட்டாயா? நீ என்னிடம் அஞ்சி அடைக்கலம் தேடி ஓடி வந்தது எதற்காக? அந்த மகேந்திரனைக் கண்டு பயந்துதானே? அவன் உன்னைக் கொலை செய்வதாய் மிரட்டியதனால் தானே?அதனால்தான் திருமணம் என்ற பெயரில் தக்க பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உனக்கு பண்ண இருக்கிறேன்....

சிங்காரி நீட்டி இறக்கிச் சொல்ல அதன் விபரீதத்தை உணர்ந்து அப்படியே ஸ்தம்பித்து போனாள் மதுமதி.



## 23

மதுமதிக்கு சிங்காரி பெரும்சோதனை உண்டு பண்ணினாள் என்றால் குமார் வேறு உருவில் சோதனையைக் கொண்டு வந்தான்.

அன்று அலுவலகம் வந்த மதுமதியை அழைத்து கறாராய் பேசினான் குமார்.

இனியும் உன்னுடைய முடிவைச் சொல்லாமல் என்னை ஏமாற்ற முடியாது. உடனே சொல்ல வேண்டும்.... என்றான்.

முடிவா...? என்ன சொல்கிறீர்கள்?

புரியாமல் மாதிரி பேச வேண்டாம்... மது... எனது நோக்கம் உனக்குத் தெரியாதா?

நோக்கமா?

அவள் மறுபடியும் புரியாததுபோல் கேட்டது குமாருக்கு எரிச்சலை கிளப்பியது.

என்ன மது விழிக்கிறாய்? இது கூடவா புரியவில்லை உனக்கு? உன் அக்கா சிங்காரியிடம் இருந்து உன்னைக் காப்பாற்றுகிறேன். பதிலுக்கு நான் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறேன் என்று தெரியாதா?

என்ன எதிர்பார்க்கிறீர்கள்? நிஜமாகவே திடுக்கிட்டு புருவம் உயர்த்தி கேட்டாள் மதுமதி.

அவன் குரல் உயரக் கேட்டதும், ஒரு கணம் பதில் சொல்ல தடுமாறியவன், வேறு என்ன...? உன்... உன் அன்பைத்தான்... எதிர்பாக்கிறேன்... என இறைவாய் முடித்தான் குமார்.

அன்பா? என்ன சொல்கிறீர்கள்?

ஆமாம்... அன்புதான்! என்னிடம் நீ அன்பு காட்ட வேண்டும். நான் உன்னிடம் அன்பு காட்டுவேன் புரிகிறதா?

அவன் கெட்டிக்காரத்தனமாய் பேசுவது போல் பேசினாலும் அவன் பேசியதன் உள்ளர்த்தம் அப்படியே அவளை அதிர்ச்சியடையச் செய்தது. அவனது பேச்சின் நோக்கம், பேசுகிற விஷயம் அவளுக்குப் புரியாமலில்லை.

எப்படி மகேந்திரன் சொன்னது போலவே கரெக்ட்டாக பல்லை இளித்துக் கொண்டு வழிகிறான். மகேந்திரன் இவனைப் பற்றி எவ்வளவு துல்லியமாக எடை போட்டிருக்கிறான் என் நினைப்பே ஓடியது.

அப்படியே யோசித்தவள் இவனுக்கு என்ன பதில் சொல்வது என நினைக்கவே செய்தாள். செவிட்டில் ஒன்று பளீரென கொடுத்து முகத்திலடித்தாற் போல் ஒரு மைத்துனியிடம் இப்படி தரக்குறைவாக பேச உனக்கு வெட்கமாக இல்லை? என்று கேட்டு விடலாம்.

ஆனால்... அதன் பின்... என்ன... செய்ய...?என்ன நடக்கும்?

குமார் தன் பாச்சா பலிக்காது.... என புரிந்து கொள்வான்.

மறுபடியும் சிங்காரியுடன் சேர்ந்து கொள்வான்.

சிங்காரி.... எப்படி அவளை இங்கிருந்து விரட்டுவது என கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறாள்? அவளுடன் இவனும் சேர்ந்து விட்டால் பின் மதுமதி இங்கு இருக்க முடியாது. ஏதாவது காரணத்தைச் சொல்லி துரத்தி விடுவார்கள்!

ஆனால்...

மதுமதிடி இங்கு இருந்தாக வேண்டுமே! அந்த பேரிங்கு ரகசியங்களை எடுக்கிற வரையில் பல்லைக் கடித்துக் கொண்டாவது அவள்



இருந்தாக வேண்டும். எப்படியும் அந்த செய்முறை ரகசியங்கள் அவளுக்கு வேண்டும்!

அது இல்லாமல் மகேந்திரன் முகத்தில் போய் எப்படி அவளால் விழிக்க முடியும்?

மேலும் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் போல் இதைச் செய்தால்தான்துடிக்கும் அவளதுமனது ஓரளவாவது ஆறுதல் கொள்ள முடியும்!

அதனால் வேறு வழியில்லை!

குமாரின் பேச்சுக்கு உடனடியாய் மறுத்துப் பேசவும் முடியாது.

ஏதாவது சொல்லி தள்ளிப் போட வேண்டியது தான் என நினைத்தவள், தனது மை விழிக் கண்கள் மெல்ல நிமிர்த்தி குமாரைப் பார்த்தாள்.

நீங்கள் சொல்வது புரிகிறது. கொஞ்சம் யோசித்துச் சொல்கிறேன்... என்றாள்.

குமார் அந்தப் பதிலில் ஓரளவு திருப்தியடைந்தவன் போல் தோள்களை குலுக்கிக் கொண்டான்.

தாராளமாக நீ... யோசித்து முடிவெடு மது. ஆனால்... என நிறுத்தியவன், அவள் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தவாறு, என்னை ஏமாற்ற மட்டும் நினைக்க வேண்டாம்.. பின் நான் பொல்லாதவனாக ஆகிவிடுவேன்! அழுத்தமான குரலில் சொல்லிவிட்டு குமார் விடுவிடுவென அங்கிருந்து அகன்றான்.

அவன் செல்வதையே எரிச்சலாக வெறித்துப் பார்த்தவளுக்கு இராமாயணத்தில் பொன் மானாய் உருமாறி நடித்த மாரீசனின் ஞாபகம் வந்தது.

இராமாயணத்தில் சீதை அழகைப் பற்றிக் கேள்விப்பட்ட இராவணன் காமப் பித்து பிடித்தவனாய் எப்படியாவது அவளை அடைய வேண்டும் என திட்டம் தீட்டுகிறான்.

அதற்காக, தன் நண்பனான மாரீசனை தன் திட்டத்திற்கு மான் போல் நடிக்கும்படி கேட்கிறான். இராமனைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் மாரீசன் மறுத்து இராவணனுக்கு புத்தி சொல்கிறான். வேண்டாம் இந்த விபரீத ஆசை.இந்த ஆசையினால் நீ அழிந்தே போவாய்... என்றெல்லாம் எடுத்துரைக்கிறான்.

ஆனால் பித்து பிடித்தாற் போல் இருந்த இராவணன் பிடிவாதம் பிடிக்கிறான். அவனை வற்புறுத்தி மிரட்டி சம்மதிக்க வைக்கிறான். வேறு வழியில்லாமல் கடைசியில் மாரீசன் அப்படி நடிக்கச் சம்மதித்தான்.

இராவணனின் ஆணைப்படி பஞ்சவடி என்னும் வனப்பகுதியில் தங்கியிருக்கும் இராமனின் இடத்தை அடைகிறான் மாரீசன். தனது மாய வித்தையைப் பயன்படுத்தி வெள்ளைப் புள்ளிகளுடைய தங்க மான் வடிவத்தை எடுக்கிறான்.

காலைப் பொழுதில் பூந்தோட்டத்தில் சீதை புஷ்பங்கள் பறித்துக் கொண்டிருக்கிறாள். அவள் பார்வையில் படும்படி துள்ளிக் குதித்து அங்குமிங்குமாக ஓடுகிறான், மாய பொன்மான் உருவில் இருந்த மாரீசன். சீதையும் அந்த வித்தியாசமான பொன்மானைக் கண்டு மயங்கி விடுகிறாள்.

இப்படியாக இராவணனின் கட்டளைக்காக வேறு வழி தெரியாமல் தனக்கு விருப்பமில்லாமலே மாய மான் உருவம் எடுத்து சீதையை ஏமாற்றுவான் மாரீசன்! அதுபோல்தான் தனது நிலையும் என ஒரு கணம் நினைத்தாள் மதுமதி.

தான் விரும்பாவிட்டாலும் அந்தக் குமாரிடம் முகத்திலடித்தாற்போல் பேசாமல் அவன் சொல்வதற்கு யோசிப்பது போன்ற பாவனையை உண்டு பண்ணி கட்டாயத்தையும் உணர்ந்தாள்.

அதனாலே இரண்டு நாள் கழித்து குமார் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்ட போது, அதே போலவே, யோசித்துச் சொல்கிறேன் என்றாள் அவள்.

குமார் சினம்வந்தவன் போல் கைகளைக் கட்டிக்கொண்டு அவளைப் பார்த்தான்.

இதில் இன்னும் யோசிக்க என்ன இருக்கிறது? நான் வெளிப்படையாகவே சொல்லட்டுமா? என்றான்.

சொல்லுங்கள்... என்றாள் அவள்.

நான் அன்பு செலுத்துகிறேன் என்பது உன்னை விரும்புவதைக் குறிக்கிறது... உன்னை விரும்புவது என்பது உன்னை... திருமணம் செய்ய விரும்புவதைப் பற்றித்தான்...

அடப்பாவி! சொந்த மைத்துனியிடம் இப்படி வெட்கமில்லாமல் சொல்லி கேட்கிறானே... இவனெல்லாம் என்ன ஒருஜென்மம்? என வியப்புடன் அதிர்ச்சியானவள், அதே அதிர்வுடனே அவனைப் பார்த்தாள்.

அப்படியானால்... சிங்காரி?



அவளைப் பற்றி நீ பயப்பட வேண்டாம். நான் சொல்கிறேன். நான் சமாளித்துக் கொள்கிறேன். அட இது வேறா? என மறுபடியும்அதிர்ச்சியடைந்தவள், அப்படியானால் அக்காள் தங்கை என இருவரையும்மனைவிகளாக்கி கொள்ளலாம் என முடிவு பண்ணிவிட்டீர்கள், அப்படித்தானே?

மதுமதி கேலியாய் சினம் பொங்க கேட்டாலும் வெட்கமில்லாமல் தலையை மேலும் கீழும் ஆட்டினான் குமார்.


இதில் ஒன்றும் வியப்பு கொள்ளத் தேவையில்லை. மது இப்போதும் சில கிராமங்களில் இதுபோன்று ஒருவருக்கே அக்கா தங்கைகளை மணமுடித்து கொடுக்கும் பழக்கம் இருக்கிறது! என அதற்க ஒரு தனி விளக்கமும் கொடுத்தான் அவன்.

மதுமதி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ஒரு வேளை சிங்காரி இதற்கு ஒத்துக்கொள்ள மறுத்தால்... என்ன செய்வீர்கள்? என்றாள்.

வேறு என்ன? அவளை விரட்டி அடித்து விடுகிறேன். உன்னை மனைவியாக்கிக் கொள்கிறேன்!

அசராமல் உறுதியான குரலில் குமார் சொல்ல நிஜமாகவே அதிர்ந்துதான் போனாள் அவள்.



## 24

மதுமதிக்கு தலையே வெடித்து விடும்போலத்தான் இருந்தது.

ஒரு பக்கம் அக்கா சிங்காரி ரவுடி ஒருவனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க தீவிரமாய் முயற்சிகளை செய்தபடி....

மறுபக்கம் குமாரின் வயிறெரியேற்றுவது போன்றான மிரட்டல். சிங்காரி போல் நீயும் என் மனைவியாகி விடு. உன் மேல் எனக்குஅளவு கடந்த ஆசை என்ற விரட்டல்!

என்ன செய்ய?என தவித்தவள் மகேந்திரனுக்கு போன் செய்து அவசரமாய் சந்திக்க வரச் சொன்னாள். மறுநாளே அவளுக்காக வழக்கமான பார்க்கில் காத்திருந்தான் மகேந்திரன்.

மகேந்திரனைப் பார்த்ததும் மூச்சு வாங்க படபடவென விஷயங்களை கொட்டினாள் அவள். பொறுமையாய் கைகளைக் கட்டியபடி எல்லாவற்றையும் கேட்டவன் அவள் சொல்லி முடித்ததும், இவ்வளவுதானா விஷயம்! என்றான் சாதாரணமாய்.

மதுமதி மையிழிக் கண்களை அகல விரித்து முறைக்காத குறையாய் அவனைப் பார்த்தாள்.

எவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்லுகிறேன்? சாதாரணமாய் கேட்கிறீர்கள். நான் இரண்டு நாள் தலை வெடித்து விடும் அளவுக்கு தவித்துப் போய் விட்டேன் தெரியுமா?

மகேந்திரன் அதற்கும் அசால்டாக தோள்களை குலுக்கியபடி பார்த்தான். நீ இதற்காக தவித்ததாய் என்றால், அது உன் முட்டாள்தனத்தைக் காட்டுகிறது என்றான்.

அவள் கொதித்துப் போனாள்.

ஆரம்பித்து விட்டானா... மறுபடியும் முட்டாள் பட்டம் சூட்டி மகிழ்வதை! அப்படிச் சொல்வதில் இவனுக்கு என்னதான் ஆனந்தம்!

அதே சினத்துடன் என்னை மட்டம் தட்டாமல் உங்களால் இருக்க முடியாதா? என்றாள்.

சரி... வேறு வார்த்தைகளில் சொல்லட்டுமா? உனக்கு புத்திசாலித்தனம் கம்மி! என்றான்.

அவள் மறுபடியும் முறைக்கவே அவனே தெளிவாய் விளக்கினான்.

நீயே கொஞ்சம் யோசித்துப் பார். ஒரு புறம் உன் அக்கா சிங்காரி ரவுடியைக் கட்டச் சொல்கிறாள். மறுபுறம் குமார் தன்னைக் கட்டச் சொல்கிறான். அதனால் இரண்டுமே நடக்கப் போகாத ஒன்று எனவே நீயும் பயப்படத் தேவையில்லை.

அதுதான் எப்படி?

இன்னும் புரியவில்லையா? சிங்காரி ரவுடியை திருமணம் செய்யும்படி ரொம்பவும் நெருக்கினால் குமாரை வைத்து அதை தடுத்து விடலாம். அதே போல் குமார் நெருக்கினால்... சிங்காரியை வைத்து தடுத்து விடலாம். அதனால எவ்வித நெருக்கடியும் உனக்கு ஏற்படப்போவதில்லை. நீயும் இந்த உடம்பு நடுங்கும் பயமும் கொள்ளத் தேவையில்லை...

அவன் தன்னையே உற்றுப் பார்த்தவாறு சொன்ன போது... திகைப்பாகவே ஓரளவுக்கு பதட்டத்துடன் இருந்தவள் அவன் சொன்னது புத்தியில் உரைக்க, நிதானத்திற்கு வந்தாள். அடடா... இவன் சொல்வது



சரிதானே! இப்படி சிந்திக்காமல் இருந்து விட்டோமே! என வருந்தவும் செய்தாள்.

மகேந்திரன் அவள் சிந்தனையான முகம் முன் கைகளால் சொடுக்கிட்டு, நீ சொல்ல வந்ததை விட இன்னொரு முக்கியமான விஷயம் இருப்பதும் இதில் தெரிகிறது... என்றான்.

இன்னொரு முக்கியமான விஷயமா?

ஆமாம்... குமாரும் சிங்காரியும் உன்னைத் திருமணத்திற்கு நெருக்கடி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் இதன் மூலம் நீ அந்த பேங்கு ரகசியங்களை வெகு சீக்கிரமாய் திருடி வர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறாய்! இல்லையென்றால் உனது நோக்கத்தை அவர்கள் கண்டுபிடித்து விடக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடும்...

அப்படியா?

அப்படித்தான்! அதனால் நீ தான் ஒவ்வொரு நொடியும் விழிப்புடன் செயல்பட வேண்டும். வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். முக்கியமாய் அவளது நோக்கத்திற்கு தலையாட்டுவது போலவே உன் பேச்சு அமையவேண்டும்...

அது எப்படி சாத்தியமாகும்? என்றாள் அவள் முகம் விரிய ஆச்சரியத்தோடு.

சாத்தியம்தான்! சிங்காரி சொல்லும் போது அந்த ரவுடியை கட்டிக் கொள்வதில் எவ்வித தயக்கமும் இல்லை போல் பேசு. குமாரிடமும் அதே போல் அவனைக் கட்டிக் கொள்வதில் ஆட்சேபணை இல்லாதது போல் கூறு. ஆனால் நீ அப்படி சம்மதம் கூறிய கையோடு... ஒரு பத்து நாள் அவகாசம் கொடுங்கள். மனதை தயார் படுத்திக் கொள்கிறேன்... என்றும் கேளு. இருவரும் சம்மதிப்பார்கள். அந்த பத்து நாளில் உன் கை வந்த கலையை நீயும் அவர்களிடம் காட்டி விடலாம்...

கைவந்த கலையா?

திடுக்கிட்டு அவள் கேட்க விஷமமாய்ச் சிரித்தான் அவன்.

அதானம்மா? மறந்து விட்டாயா...? திருடுவது! யாருக்கும் தெரியாமல் ரகசியங்களை ஜெராக்ஸ் காப்பி எடுப்பது!

உதடு துடிக்கும் முறைப்புக்குப் போனாள் அவள்.

என்னைக் குத்திக் காட்டாமல் உங்களால் இருக்க முடியாதா?

உள்ளதை... நடந்ததைத்தானே.. சொல்கிறேன் என்றான் அவன் பதிலுக்கு.

ஒரு முறை எனது அக்காவிற்காக அந்த தப்பைச் செய்தேன். ஆனால் இம்முறை உங்களுக்காக.... உங்கள் கட்டாயத்திற்காக அதைச் செய்யப்போகிறேன். அதை மறந்து விடாதீர்கள்...

அவன் தோள்களை அதற்கும் அசால்டாய் குலுக்கினான்.

ஹூம்! எதுவானால் என்ன? ஒரு தடவை செய்தாலும் தப்பு தப்புதான்! நூறு தடவை செய்தாலும் அதற்கும் அதே பெயர்தான்! அதனால்.. என்றவன் சட்டென முகம் மாறி பேச்சை நிறுத்தினான். சரி... வீண் பேச்சு எதற்கு? இப்போது உனக்கு என்ன பிரச்சனை? என்றான் எதுவும் அறியாதவன் போல் மோவாயில் கைவைத்துக்கொண்டு.

நல்ல வேடிக்கை... நீங்கள் பேசுவது... என்றான் அவள் கொதிப்பான மூச்சுடன்.

இதோ பார்... மது,எனக்கு அந்த ரகசியங்கள் சீக்கிரமாக வெகு சீக்கிரமாக வேண்டும். அப்படிக் கிடைத்தால்தான்... போலி பேரிங்குகளால் சரிந்து கொண்டிருக்கும் எனது தொழிலை உடனடியாக தூக்கி நிறுத்த முடியும்.

எனக்குப் புரிகிறது... என்றாள் அவள் அமைதியாக.

இப்போது... சிங்காரி... வீட்டிலும் சூழ்நிலை மாறி விட்டது. உனக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்... அதனால்... நீ வேகமாகச் செயல்பட்டு அந்த ரகசியங்களை எடுத்தது விடு....

கண்டிப்பாக செய்கிறேன். ஆனால்... என்றவள் தலைசாய்த்து அவனையே பார்த்தபடி. அந்தக் குமார் தொழில் பற்றி அந்த ரகசியங்கள் பற்றி ஒரு போதும் என்னிடம் பேசுவது இல்லையே... அதனால்தான் அந்த செய்முறை ரகசியங்கள் இருக்குமிடத்தை கண்டுபிடிப்பது கடினமாகவும் தோன்றுகிறது.... என்றாள் சலிப்புடன்

மகேந்திரன் புருவம் உயர்த்தி ஆழமாய்ப் பார்த்தவன், அது ரொம்பவும் சுலபம் என்றான் கொண்டிருந்த புன்னகை பரந்து விரிய.

எப்படி?என்றாள் அவள்ஆவலாய்.

அவன் மகேந்திரன் பதில் சொல்லாமல் மீண்டுமொரு முறை அவன் பக்கம்வந்து அவள் படபடத்த விழிகளை ஆழமாய் ஊடுருவினான்.



இந்த மை... விழிக் கண்கள்... இந்த படபடப்பு பார்வை ஒன்று போதுமே...என்றான் பார்வையை விலக்காமல் அவள் விழிகளையே ஆச்சரியமாய்ப் பார்த்தபடி

ஒரு கணம் அவன்பேச்சை விட அவனது அந்த செய்கையில் தடுமாறிப் போனாள்அவள்.

அவன் ஆச்சரியமாய்ப் பார்க்கிறானா... இல்லை ஆசையாய்ப் பார்க்கிறானா... என்ற குமிழ் விடும் சந்தோஷமும் அவளுள் எட்டிப்பார்த்தது. அவள் விடாமல் ஆராய்ச்சி செய்வதுபோல் மேலும் உற்று நோக்கி வியந்தது பரவசமும்படுத்தியது.

ஓரிரு நிமிடம் மனதில் சிறகடிப்பது போல் உணர்ந்தவள் மறுகணமே பயத்திற்கும் உள்ளானாள். இப்படித்தான்பேச்சை ஆரம்பித்து... புகழ்வது.... போல் ஓங்கி நடு மண்டையில் குட்டியும் விடுவானே? அனை விழுங்கும் அபாயக் கவர்ச்சி... நல்ல பாம்பின் வடிவம்... மயக்கும் சாகசத்தனம்.. என்றெல்லாம் வஞ்சப் புகழ்ச்சியாய் குட்டி நோகடிப்பானே என அஞ்சவும் செய்தாள்.

ஆனால் நல்லவேளையாய் மகேந்திரன் சில நொடிகளில் ஊடுருவும் அந்தப் பார்வையை விலக்கியவன், குமாரை மயக்கும ;சக்தி உனக்கு நன்றாக இருக்கிறது.ஆனால் அது மட்டும் போதும். காய்களை நகர்த்தி காரியம் சாதிக்கும் திறமையும் வேண்டும். அதுக்கு ஒரு சரியான வழி இருக்கிறது. அதை நீ கடைப்பிடிக்க வேண்டும்... என்றான்.

என்ன வழி...?சொல்லுங்கள்... என்றாள் அவள்.

வேற என்ன தம்பட்டம் அடிக்க வைப்பதுதான்! என்றான்.

தம்பட்டமா?

ஆம்....! உலகிலேயே அவன்தான் பெரிய சாதனையாளர் போல் பேச்சில் புகழ்ந்து வியப்பதுபோல் நடிக்க வேண்டும். முக்கியமாய் பேச்சு முழுவதும் தொழில் பற்றியே, பேரிங்குகள் பற்றியே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். நீ இவ்வளவு செய்தாலே போதும். குமார் மயங்கி விடுவான். நான்தான் பெரிய திறமைசாலி என சுய தம்பட்டம் அடிக்க ஆரம்பித்து விடுவான். தொழில் பற்றியெல்லாம் உளறிக் கொட்ட ஆரம்பித்து விடுவான். அப்போது பேரிங்குகள் செய்முறையைப் பற்றி அறிவதில் நீ ஆர்வம் காட்டினால் உடனே... அந்த ரகசியக் குறிப்புகளைப் பற்றி விளக்க ஆரம்பித்து விடுவான். பின் உன் வேலையும் சுலபமாகி விடும். புரிகிறதுதானே?

அவன் முடித்ததும் அவன் சொன்ன முழுவதையும் உணர்ந்து கொண்டவளாய் பெரிதாய் தலையசைத்தாள்.

அவளும் பதிலுக்கு தலையசைத்து, நடிப்பது உனக்கு கை வந்த கலைதானே? அதனால் தாராளமாய் நான் சொன்னபடி நடந்தால் ரகசியங்களை எடுத்து விடலாம். எப்படியும் ஒரு வாரத்தில் அவைகளை கொண்டு வந்துவிடு! சொல்லியபடி அவளிடம் விடைபெற்று கிளம்பவும் செய்தான் அவன்.


அவன் சொல்லிவிட்டு விடுவிடுவென விரைப்புடன் செல்வதையே அதிசயமாய் பார்த்தாள்

அவன் சொன்ன வார்த்தைகளில் நடிப்பது உனக்கு கை வந்த கலைதானே? என்று முள்ளாய் அவளைக் குத்தியது.

வேறு என்ன... பின்பு அவனிடம் காதலிப்பது போல் நடித்ததை சுட்டிக்காட்டத்தானே குட்டுகிறான்?

எப்படியும் ஒரு வாரத்தில் அந்த ரகசியங்களை எடுத்து மகேந்திரனிடம் கொடுத்துவிட வேண்டும். என்ன ஆனாலும் சரி!

மனதுள் உறுதி எடுத்தவளாய் அவளும் ஒருவித விரைப்புடனே பூங்காவை விட்டு நடக்க ஆரம்பித்தாள்.



## 25

மதுமதி நினைத்த மாதிரி இல்லாமல் அந்த வாரம் பரபரப்பாய் ஆரம்பமாகியது. சிங்காரி முதல் நாள் முதலே நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

இன்னமும் யோசிக்காதே. மது அந்தம சேரிக்குப்பம்தனபால்தான் உனக்கு சரியான சாய்ஸ். நல்ல முரட்டு ஆள். அந்த மகேந்திரன் உன்னை மிரட்டினாலும் சரி, உருட்டினாலும் சரி, அவனை அடித்து துவைத்து விடுவான் அவன். நீயும் உன் வாழ்நாளை எவ்வித பயமில்லாமல் கழிக்கலாம். என்ன சொல்கிறாய்? என்ன சொல்கிறாய்? என நச்சரித்தாள் அவள்.

மதுமதி அவள் சொன்னதை பலமாய் ஆமோதிப்பது போல் தலையாட்டி, நீ சொல்வது ரொம்பச் சரி... அந்த மகேந்திரனிடம் இருந்து



தப்பிக்க... அப்படித்தான் செய்ய வேண்டும். ஆனாலும்... எனக்கு சிறிது அவகாசம் கொடு... நான் யோசிக்க வேண்டும்... என்றாள்.

சிங்காரி தலையில் தட்டு அலுக்கவே செய்தாள். என்ன மது. நீஎப்போது கேட்டாலும் யோசிக்க வேண்டும்.... யோசிக்க வேண்டும்... என்றே சொல்லிக் கொண்டிருக்கிறாய்.அப்படி பெரிதாய் என்னதான் யோசித்து விடப் போகிறாய்? என்றாள் எரிச்சலாய்.

அவள் அப்படி அலுவை அடைவதை உணர்ந்த மதுமதி அவளை சமாதானப்படுத்தும்; விதமாய், அப்படி இல்லையக்கா, நான் யோசிக்க வேண்டும் என்று சொன்னது கல்யாணத்தைப் பற்றி அல்ல... வேறு ஒன்று பற்றி... என்றாள் எப்படியாவது சமாளிக்க வேண்டும் என்பது போல்

வேறு... ஒன்றா... என்ன சொல்கிறாய்?

அதாவது... என் மனதை மாற்றி... அவரை கட்டிக் கொள்ளும் மனநிலையை நான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லவா? நீ வேறு அவர் முரட்டு மனிதர் என்கிறாய். அப்படி முரட்டு மனிதராய் இருப்பவர் நிச்சயம் கோபக்காரராகத்தான் இருக்கக்கூடும். அதனால் அதற்கு ஏற்றார்போல் நான் நடந்து கொள்ள என்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள கொஞ்சம் அவகாசம் கேட்கிறேன்...

மதுமதி குரலை ஏற்றிஇறக்கி சிங்காரி நம்பும் விதத்திலே இருந்தாலும் அவளிடம் மேலும் சில கேள்விகள் கேட்டு அவளுக்கு சந்தேகம் வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்என நினைத்தாள்.

அதனாலே,அக்கா அந்த தனபால் போலீஸ் கேஸ்களில் அகப்பட்டு போலீஸ் தேடும் குற்றவாளி.. என்று கூட சொல்கிறார்களே? என்றாள்.

பதிலுக்கு சிங்காரி, வெடிக்காத குறையாய் பொரிந்தாள். யார் அப்படிச் சொன்னது? அந்த தனபால் ஊரின் முக்கியபுள்ளி. செல்வாக்கு மிக்கவர். அவரைக் கண்டால் போலீஸே பதுங்கும். அவராவதுபோலீஸ் தேடும் குற்றவாளியாவது? யாரோ உன்னிடம் கதைகட்டியிருக்கிறார்கள். அதை எல்லாம் நம்பாதே...! என்றாள்.

அப்படியானால் அந்த தனபால் மிக மிக நல்லவர் அப்படித்தானே அக்கா?குரலில் கேலி பொங்க மதுமதி கேட்பதைக் கூட கொஞ்சமும் உணராமல் தலையை பலமாய் ஆட்டினாள் சிங்காரி.

நல்லவர் என்றால் நல்லவர்... அப்படியொரு ஆளை நீ உலகத்திலேயே பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர் உனக்கு கணவனாய் அமைய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்.அதனால் அந்த விஷயத்தில் இனியும் குழப்பாமல் தைரியமாய் சம்மதத்தைச் சொல்லிவிடு...

சொல்லிவிடுகிறேன்... ஆனால்... இன்னும் ஒரே ஒரு வாரம்... அதற்குப் பின் சம்மதத்தை கண்டிப்பாய் சொல்லிவிடுகிறேன், சரியக்கா...?

பெரும் பாசத்தோடு கொஞ்சுவது போல் வேண்டுமென்றே விளித்துச் சொன்னாள் மதுமதி.

சிங்காரிக்கு ஓரளவு இம்முறை நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும். தலையசைப்புடன் விறுவிறுவென சென்று விட்டாள்.

அப்பாடா.... இவளைச் சமாளித்தாயிற்று...! என மதுமதி பெருமூச்சு விட்டாள். அலுவலகத்திடில் பிலுபிலுவென பிடித்துக் கொண்டான் குமார். அதில் தலைசுகு பலமான ஐஸ் கட்டிகள் வேஸ!

மது உன் அபார அழகுக்கு முன் அந்த சிங்காரி எம்மாத்திரம்? நீ மட்டும் உம் என ஒரு வார்த்தை சொல்லு. நான் உன்னை அப்படியேஇந்த எம்.டி. சேரில் உட்கார வைத்து அழகு பார்க்கிறேன்.. என வழிவது போல் நிஜமாகவே கேட்டான்.

ஒரு கணம் மதுமதிக்கு மகேந்திரன் சொன்னது ஞாபகம் வந்தது. எப்படியாவது தொழில் பற்றி பேசி அவனை சுயதம்பட்டம் அடிக்க வை. அப்போதுதான் அவன் உளறிக் கொட்ட ஆரம்பிப்பான்.. என்று சொன்னது.

உடனே பெரும் ஆவல் கொண்டவள் போல் அவள் பக்கம் வந்தாள். வேண்டுமென்றே அவனை வியப்புடன் பார்ப்பது போல் கண்களை அகல விரித்து அவனை மேலிருந்து கீழ்வரை அதிசயப் பார்வை பார்த்தாள்.

என்ன அப்படிப் பார்க்கிறாய் மது? என்றான் குமார் அவள் நினைத்தது போலவே.

இல்லை.... இவ்வளவு சிறிய வயதில் குறுகிய காலத்தில் இப்படி ஒரு தொழில் சாம்ராஜ்யத்தை உருவாக்கி சாதனை செய்திருக்கிறார்களே.... அதுதான் எனக்கு பெரும் வியப்பாக இருக்கிறது. எப்படி அது உங்களுக்க சாத்தியமாயிற்று?

அவள் அப்படிக் கேட்டதும் மதுமதி நினைத்தது போலவே பரவமாகி விட்டான் அவன். ஓ... அதுவா?அது என் சிறு வயது முதலே ஏற்பட்டஆர்வம். எதையும் சாதிக்க வேண்டும்... என்கிற வெறி.. என தன் உரையை பெருமிதமாக ஆரம்பித்தான் அவன்.

தான் பிஸினஸில் நுழைந்தது பேரிங்கு தொழில் நுட்பம் பற்றி அறிந்து பேங்க் லோனுடன் தொழிற்சாலை தொடங்கியது என ஒவ்வொன்று பற்றியும் விரிவாய் விளக்க ஆரம்பித்தான்.

மதுமதி சமயோசிதமாய் சந்தேகம் கேட்பது போல் பேச்சை மாற்றி பேரிங்குகளைப் பற்றியே அவனைப் பேச வைத்தாள். குமாரும் ஐரோப்பிய நிறுவனம் ஒன்றுடன் சேர்ந்து தொழில் நுட்ப ஆலோசனை வாங்கி தான் பேரிங்கு தயாரிப்பதாய் விஷயங்களைச் சொன்னான்.



ஆனால் அவன் செய்முறை பார்முலா பற்றி பேச்சி திருப்பியதும் டக்கென பேச்சை நிறுத்தி விட்டான் அவன், அத்தோடு அவன் சொன்ன விளக்கமும் அவளை அதிர வைத்தது.

இந்த பேரிங்கு பற்றிய பேச்சு இத்தோடு போதும் மது. இந்த பேரிங்கு தொழில் ரகசியங்கள் விஷயத்தில் நான் யாரிடமும் அதுபற்றி பேச விரும்புவதில்லை. யாரையும் நம்புவதில்லை! என்றான் உறுதயான குரலில்.

மதுமதி திடுக்கிட்டவள், என்னை நம்ப மாட்டீருங்களா? என்னைக் கூடவா? என்றாள் வேண்டுமென்றே பலத்த ஆச்சரியம் காட்டி.

அதற்கு தலையசைத்த குமார் அசட்டுச் சிரிப்பும் சிரித்தான்.

உன்னைக் கண்டிப்பாய் நம்புவேன்... ஆனால் இப்போது அல்ல.... நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள முழு மனதுடன் சம்மதித்த பிறகு நம் திருமணத்திற்கு நாள் குறித்த பிறகு....!

தெளிவாய் திடமான குரலில் குமார் சொன்னது நிஜமாகவே மதுமதியை அதிர வைத்தது. அதற்குப் பின் இரண்டு மூன்று முறை வேறு சமயங்களில் அந்த பேரிங்குகள் செய்மறை பற்றிய பேச்சை ஆரம்பித்த போதும் குமார் அதையே சொன்னான்.

இவனிடம் இப்படி பேசுபவனிடம் அந்த செய்முறை ரகசியங்களை வாங்குவது சுலபமல்ல என்பதை உணர்ந்தவள் மூன்றாம் நாள்அதே சிந்தனையுடன் விஷயத்தை போனில்மகேந்திரனுக்கு சொல்லி ஆலோசனை கேட்டாள்.

எல்லாவற்றையும் முழுதாய் கேட்டவன் கடைசியில், அப்படியானால்வேறு வழியில்லை. நீ குமாருடன் கல்யாணத்திற்கு சம்மதித்து விடு.. திருமணத்திற்கான நாளையும் குறித்துவிடு... என்றான் அசால்ட்டான அலட்சியக் குரலில்.



## 26



பேசாமல் திருமணத்திற்கு ஒத்துக் கொள். நாள் குறிக்கட்டும்... மண்டபம் பார்க்கட்டும்! என்றான் மகேந்திரன்.

ஸார்... என்ன சொல்கிறீர்கள்? என்றாள் அவள் பதட்டமாய்.

மகேந்திரன் குரலை உயர்த்தினான்.

ஏன் பதறுகிறாய்? கல்யாணத்திற்கு சரி என்றால் அடுத்த நிமிடமேவா குமார் உனக்குத் தாலியைக் கட்டிவிடப் போகிறான்? எப்படியாவது முகூர்த்த நாள் பார்த்தாலும் ஒரு பத்து நாளாவது அவகாசம் கிடைக்கும். அந்த பத்து நாட்களில் அந்த பேரிங்கு ரகசியங்களை திருடிவிடு! என்றான்.

ஸார்.... அதில் தான் பிரச்சனையே! என்றாள் அவள்.

அதில் என்ன பிரச்சனை?

குமார் அந்த பேரிங்கு ரகசியங்கள் பற்றி ஒரு வார்த்தை சொல்ல மறுக்கிறான். கல்யாணம் முடிந்த பின் எதுவேனாலும் கேள், சொல்கிறேன் என்கிறான்.

கவலைப்பட வேண்டாம். அதற்கும் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்.... என்றான் அவன்.

என்ன திட்டம் சார்?

நீ திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து உற்சாகமாய் இருப்பது போல் காட்டினாலே போதும். அவனுக்கு உன் மேல் நம்பிக்கை வந்துவிடும். பின் நீ என்ன கூறினாலும் அவன் கேட்க ஆரம்பித்து விடுவான்....

ஆனாலும்அவளுக்கு சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

பின்.... சிங்காரியை எப்படிச் சமாளிப்பது? அவளும்அந்த ரவுடியைத் திருமணம் செய்யும்படி நெருக்கடி கொடுக்கிறாளே! என்றாள்.

அதற்கும் சம்மதித்து விடு... இரு விஷயங்களையும் ஒருவருக்கொருவர் தெரிந்து விடாதபடி வைத்துக் கொண்டு காய்களை நகர்த்து. உனக்கு? கிடைக்கும் பத்து நாள் அவகாசத்தை புத்திசாலித்தனமாய் உபயோகித்து காரியங்களையும் சாதித்து விடு!

நீங்கள் சொல்கிறது புரிகிறது ஆனால்....

இன்னும்.... என்ன இழுக்கிறாய்?அதான் தெளிவாகச் சொல்லி விட்டேனே..?என்றான் மகேந்திரன் சினமான குரலில்.

இருந்தாலும் ஒரு சந்தேகம் சார்....

கேள்.... என்றான் ஒற்றை வார்த்தையாய்.

இப்படியெல்லாம் பொய் சொல்லி நடித்து திருட வேண்டுமா?அந்த செய்முறை ரகசியங்களைப் பெற வேறு வழியே இல்லையா? என்றாள் தன் மனதில் நீண்ட நாளாய் குடைந்து கொண்டிருந்த விஷயத்தை வெளிக் கொட்டியவளாய்.



அவள் அப்படிக் கேட்டதும் எதிர்முனையில் மகேந்திரனிடம் இருந்து ஓரிரு நிமிடங்கள் பேச்சே இல்லை.

ஸார்.... என்ன கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா...? நான் பேசுவது கேட்கிறதா? என்றாள், போனில் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதா என்ற சந்தேகத்தில்.

மறுபடியும் எதிர்முனையில் மௌனமே வெளிப்பட ஸார்ர்ர்... என்றாள் குரலை உயர்த்தியவாறு.

ம்ம்... நீ... மட்டும் எதிரில் நின்றிருந்தால் செவிட்டில் ஒரு அறை விழுந்திருக்கும். போன் என்பதால் தப்பி விட்டாய் என்றான் உறுமலாக.

அவள் ஒருகணம் அரண்டுதான் போனாள்.

நன்றாகப் பேசிக்கொண்டு வந்தவன் திடீரென குரங்காய் கடித்துக் குதறுகிறானே!

நேரில் இருந்தால்... அடித்து விடுவானாம்! என்ன ஒரு வார்த்தை!

முகம் சிவந்தவளாய் உதடுகளை இறுக கடித்தபடிஇம்முறை அவள் பேசாமல் மவுனம்காத்தாள்.

ஆனால் அவன் கத்தினான்.

கேட்கிறாய் அல்லவா? என்றான் அதே உறுமலுடன்.

ம்ம்...

நீ எனக்கு செய்த துரோகங்களை நினைத்துப் பார். அதனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை சிந்தித்துப் பார். அப்போதெல்லாம் வராத ஞானம் உனக்?கு இப்போது வந்து விட்டதோ? என்றதும் அவள் அவசரமாய், இல்லை.... இல்லை.... அந்த செய்முறை ரகசியங்களை எப்படியும் எடுத்துத் தருகிறேன்... என்றாள் படபடத்த குரலில்

அவன் அதற்கும் சீற்றத்தை விடாமல் ஞாபகம் வைத்துக் கொள். திரும்பவும் ஏதாவது... இப்படிப் பேசினாலோ... என்னை ஏமாற்ற நினைத்தாலோ... பிறகு வீண் பின் விளைவுகள்தான் சந்திக்க வேண்டியிருக்கும்...

பின்விளைவுகளா?

அதமான்... நீ... எனது செய்முறை ரகசியங்களை திருடி உன் அக்காவிடம் கொடுத்த குற்றத்திற்காக... ஜெயிலில்... களி திங்க வேண்டிய விளைவுகள்... என்றவன் நிறுத்திவிட்டு, புரிகிறததானே? என அதே கோபத்தில் கர்ஜித்தான்.

அவள் அதை மெல்லிய குரலில் ஆமோதித்ததும்,

இதோ பார்... என் பொறுமையை சோதிக்காமல் விரைவாக செயல்படு.. எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீ அந்த செய்முறை ரகசியங்களை கொண்டு வந்தாக வேண்டும். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்... என்றவன் மீண்டும் ஒரு கணம் நிறுத்திவிட்டு, நீ என்னுடன் போனில் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. இந்த பத்து நாள் அவகாசத்தில் எப்படியாவது அந்த ரகசியங்களை எடுத்துக் கொண்டு வந்து என் முன் நிற்க வேண்டும். இது நான் உனக்குப் போடும் கடுமையான கட்டளை... புரிந்து கொள்! என்றபடி பட்டென ரிசீவரை எதிர்முனையில் வைத்து விட்டான் மகேந்திரன்.

அவன் அப்படி வைத்தும் கொஞ்ச நேரத்திற்கு காதுகளில் வண்டு துளைத்தது போல் நொய்ங் என்று ரீங்காரம்தான் மதுமதிக்கு வலித்து விட்டது.

என்ன ஒரு விரட்டல்.. கடுமையான மிரட்டல்! திரும்பவும் கம்பி எண்ண வைத்து விடுவேன் என அதே வார்த்தைகளை உபயோகிக்கிறானே?

இவனுக்கு நம்மேல் இரக்கமே வராதா... அல்லது கிடையாதா?

நொந்து கொண்டவளாய் ரிசீவரை வைத்து விட்டு தளர்வாய் நடை நடந்தாள்.

சிங்காரியின் பங்களாவிற்கு திரும்பிய போது அவளுக்கு இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது.

சிங்காரி அவளை எதிர்பார்த்து நடு ஹாலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தவள் அவள் நுழைவதை பார்த்ததும் நின்றாள்.

மது. இங்குவா... ஒரு முக்கியமான விஷயம்.... என்றதும் என்ன சொல்லப் போகிறாள்...இவள்?என்ற பயத்துடனே பக்கத்தில் போனாள்.

மது... உனக்கு அந்த தனபாலுடன் கல்யாணம் செய்ய முகூர்த்த நாள் குறித்தாயிற்று! வரும் திங்கட்கிழமை உனக்குத்திருமணம்! என்றாள், பெரும் அதிர்ச்சிக் குண்டைத் தூக்கிப் போடுபவளாய்;

என்ன வரும் திங்கட்கிழமையா?என மதுமதி அலறாத குறையாய் அதிர்ந்தவள், அதற்கு இன்னும் ஒரு வார கால அவகாசம்தானே இருக்கிறது அதற்குள்ளாகவா? என்றாள் கண்கள் விரிய வியந்து.

ஏன் ஒரு வாரம் போதாதா? என்றாள் சிங்காரி பதிலுக்கு. கூடவே, பார் மது. இது போன்ற நல்ல காரியங்களை ஒரு போதும் தள்ளிப் போடக் கூடாது. இல்லையென்றால் சரியான முகூர்த்த நாள் கிடைக்காமல்



போய்விடும். மேலும் தனபால் கல்யாணத்திற்கு ரொம்பவும் அவசரப்படுகிறார். அவரைப் போன்ற பெரிய மனிதர்களை காத்திருக்கச் செய்வதும் முறையில்லை. அதனால் அடுத்த வாரம் கல்யாணத்திற்கு நீ தயாராகத்தான் வேண்டும்!

பெரிய தத்துவம் பேசுவது போல் தொடங்கி கட்டளையிடுவதுபோல் பேசி முடித்தாள் சிங்காரி.

என்ன இவள்... கொஞ்சமாவது இரக்கப்படுகிறாளா? உடன் பிறந்த தங்கையை ஒரு ரவுடிக்கு மணமுடித்து வைக்க கல் நெஞ்சக்காரி போல் அல்லவா ஏற்பாடு செய்கிறாள்? இவளை எப்படிச் சமாளிப்பது... எப்படித் தடுப்பது?

விக்கித்துப் போய் அவள் நிற்க சிங்காரி விறுவிறுவென சென்று விட்டாள்.

மதுமதிடி திகைப்பு விலகாதவளாய் அலுவலகம் கிளம்பிச் சென்றாள். அலுவலகத்திலவ் குமார் வேறு வகையாய் அவளை எதிர் கொண்டான்.

சிங்காரி சொன்னது எல்லாம் எனக்குத்தெரியும். ஆனால் இந்தக் கல்யாணம் நடக்காது! என்றான்.

நடக்காதா...? என்ன சொல்கிறீர்கள்?

நான் சிங்காரிக்கு தெரியாமல் அந்த ரவுடி தனபாலுக்கு பணம் கொடுத்து சரிக்கட்டி விட்டேன். அவனும் ஒத்துக் கொண்டான். அதனால் சிங்காரி குறிப்பிட்ட முகூர்த்த தேதியல் அவன் மாப்பிள்ளை கோலத்தில் வரப்போவதிடில்லை. மாறாக நான் மாப்பிள்ளை கோலத்தில் வந்து சிங்காரிக்கு அதிர்ச்சியும் உனக்க இன்ப அதிர்ச்சியும் அளிக்கப் போகிறேன்..


என்ன சொல்கிறீர்கள்? ரவுடி இதற்கு ஒத்துக் கொண்டானா? என்றான்; மதுமதி பலத்த அதிர்ச்சியை உள்வாங்கியபடி

குமார் கடகடவென சிரித்தான்.

முதலில் மறுக்கத்தான் செய்தான். ஆனால் நான் சில லட்சங்களை பேரமாய் பேசியதும் சரியென சம்மதித்து விட்டான். இந்த விஷயம் சுத்தமாய் சிங்காரிக்குத் தெரியாது. கடைசி நேரத்தில் மண்டபத்தில் முகூர்த்த நேரத்தில் நான் மாப்பிள்ளையாய் வரும் போதுதான் தெரியவரும். ஆனால் அப்போது அவளால் ஒன்றும் செய்ய முடியாது! வேறு வழியில்லாமல் சம்மதித்து ஆசிர்வாதம்தான் செய்யமுடியும்!

குமார் பெரிய திட்டம் போட்டவனாய் உறுதியான குரலில் மளமளவென பேசி மதுமதியை அதிரத்தான் வைத்தான். மதுமதிக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. இரண்டு முட்டாள்களுக்கு நடுவே மாட்டிக்கொண்டு திணறுவதாகவே உணர்ந்தாள்.

குமாரோ அவளது சம்மதத்தைஅறிவதிலேயே குறியாக இருந்தான். நீ என்ன சொல்கிறாய்?உனக்கு சம்மதம்தானே?என்ற போது மதுமதி வேறு வழியல்லாமல் தலையசைக்க வேண்டியதாயிற்று.



## 27

மறுநாள் மதுமதி இனியும் அந்த பேரிங்கு ரகசியங்கள் இருக்குமிடத்தைதெரிந்து கொள்வதை தாமதப்படுத்தக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள்.

குமாரிடம் மறைமுகமாக கேட்டுப் பிரயோஜனமில்லை. நேரிடையாகவே கேட்டுவிடுவது என்ற தீர்மானம் கொண்டாள். அதற்காகவே ஒரு பிளானும் செய்தாள்.

அன்று வேலைக்கு வந்தவள் வலிய தேடிப் போய் குமாரிடம் பேசினாள். சிரிக்க சிரிக்க பேச்சில் உருகினாள். கூடவே குமார், எனக்கு உங்கள் தொழிலில் மிகுந்த ஆர்வம்இருக்கிறது. கற்றுக் கொடுங்களேன்... என்றாள்.

குமார் புரியாமல் விழிக்கவும், உங்கள் மனைவியாகப் போகிறவள் தெரிந்து கொள்ள வேண்டாமா? அது அவசியமில்லையா? என அடுத்து கணையை வீசினாள்.

இம்முறை குமார் தலையை பலமாய் ஆட்டியபடி கிறங்கித்தான் போனான்

மதுமதி மனைவி என்று சொன்ன வார்த்தை அவனைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டியது.

அவனும் மனம் மாறி உள்ளூர தன்னை விரும்ப ஆரம்பித்து விட்டான் என மனக் கணக்கிட்டவள் அதற்காக புளங்காகிதம்அடைந்தாள்.



என்ன யோசிக்கிறீர்கள் டார்லிங்? என மதுமதி பிரம்மாஸ்திரம் போல் அடுத்த கேள்வியை விட்டதும் அப்படியே ஒழே விழுந்து விட்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

என்னையா... டார்லிங் என்று அழைத்தாய்?என் காதுகளையே நம்ப முடியவில்லையே! நான் கேட்பது நிஜம்தானா? சந்தேகமாக கேட்டவனிடம், உங்களைத் தான் டார்லிங்.... என மறுபடியும் காதல் வசனம் பேசினாள் மதுமதி.

குமார் இந்தச் சூழலில் ஏறக்குறைய பரவசம் ஆகிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

படபடவென அவளை அலுவலகத்தின் பைல் ரூமிற்கு கூட்டிப்போனான். அங்கு விதவிதமான வரைபடங்கள்... சிறிய சிறிய விக்கங்கள்! ஒவ்வொன்றாய் பாடம் நடத்துவதுபோல் சொல்லி அவளுக்கு விளக்க ஆரம்பித்தான் குமார்.

அப்படியே ஆர்வமாய் இருப்பது போல் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள்... அவள்.அவனை மேலும் நம்ப வைக்க இரவு கண் விழித்து பேரிங்குகளின் மாதிரி ஸ்கெட்சுகளை வெவ்வேறு வடிவங்கள் வரைந்து உருவாக்கினாள்.

அதை மறுநாள் குமாரிடம் காட்டியபோது இவ்வளவு திறமை உன்னிடம் இருக்கிறதா?என வியந்தான். கூடவே அவள் நினைத்தது போலவே அந்த பேரிங்குகளின் ரகசியங்கள் அடங்கிய பைலை உள்ளே அலமாரிக்குள் பத்திரப்படுத்தி வந்த லாக்கரில் இருந்து எடுத்தான்.

அவளிடம் ஒவ்வொன்றாய் விளக்க ஆரம்பித்தான். மதுமதி அந்த ரகசியங்களை விட... அந்த குறிப்புகள் எந்த அலமாரியில் எந்த லாக்கரில் இருக்கிறது... என்றே ஆராய்ந்தாள்.

அவைகள் குமாரின் பிரத்யேக ரூம் பீரோவில் தான் இருக்கிறது என்பதையும் கண்டுபிடித்து விட்டாள்.

இனி நேரம் பார்த்து... காய்களை நகர்த்திவிட வேண்டியதுதான் எனத் தீர்மானித்த மதுமதி இரண்டு நாள் கழித்து வந்த சந்தர்ப்பத்தையும் சரியாக உபயோகித்துக் கொண்டாள்.

இரண்டு நாளில் தொழில் சம்பந்தப்பட்ட ஆர்டர் ஒன்ற எடுக்க பெங்களூர் வரை செல்ல வேண்டும் எனக் கூறி கிளம்பிச் சென்றான் குமார்.

மதுமதி இதுதான் சமயம் என அன்று அலுவலகத்திற்க வந்தவள், ஊழியர்கள் யாரும் பார்க்காத சமயமாகப் பார்த்து குமாரின் அறையில் ரகசியமாக நுழைந்தாள்.

அவள் நினைத்தபடியே குமாரன் பீரோவைத் திறந்து பார்த்தபோது... பீரோவில் அந்த செய்முறை ரகசியங்கள் இருந்தது.

பெரும் சந்தோஷம் கொண்டவளாய் அவைகளை எடுத்தாள். அந்த ரகசிய குறிப்புகளை காப்பி எடுக்கலாம் என்று பார்த்தால்... பக்கத்திலோ அக்கம் பக்கத்திலோ ஜெராக்ஸ் கடை ஒன்றும் கிடையாது.

என்ன செய்வது?என்று யோசித்தவள் வேறு ஒரு வழியையும் கண்டுபிடித்தாள்.

எதிரில் தெரிந்த கம்ப்யூட்டர் ஒன்றின் மூலம் இமெயில் வழியாக அந்த ரகசியங்களை மகேந்திரனுக்கு அனுப்பி விடலாம் என முடிவு செய்தாள்.

அதன்படிதனது பிரத்யேக கணினி முன் அமர்ந்து மகேந்திரனின் கணினி வலைக்குள் நுழைந்தாள்.

அவனது இமெயில் முகவரி ஏற்கனவே அறிந்திருந்த தால் செய்திகள் அனுப்புவது இலகுவாகவும் இருந்தது.

படபடவென அந்த ரகசியங்களை, குறிப்புகளை ஸ்கேன் செய்து இமெயில் மூலமாக மகேந்திரனுக்கு அனுப்பினாள்.

எல்லாம் செய்து முடித்து விட்டு பெருமூச்சொன்றை விட்டாள். அப்போது அவளதுஅறை வாசல் முன்னால் ஏதோ அரவம் கேட்க நிமிர்ந்தாள்.

அறை வாசலில் ஜொலிக்கும் கோபக் கண்களுடன் எரிமலையாய் குமாரும், சிங்காரியும் நின்று கொண்டிருந்தார்கள்!

மதுமதி அரண்டு போய்விட்டாள். அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! குமாரும் சிங்காரியும் வில்லங்கமாய் விஷமச் சிரிப்பு சிரித்தபடி

உன்மீது சந்தேகப்பட்டது... மிகவும் சரியாய்ப் போய்விட்டது. எவ்வளவு பெரிய திருட்டுக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறாய். உன்னை சும்மா விடுவதா?கொதித்தவர்களாய் இருவரும் பக்கத்தில் வந்தனர்.

கோபத்தல் வெகுண்டவர்களாய் அப்படியே ஆத்திரத்தோடு மதுமதியை மாறி மாறி செவிட்டில் அறைந்தார்கள்.

அதிர்ச்சியினாலும் அடி வாங்கினதாலும் தளர்வான வளாய் அப்படியே மயங்கி சாய்ந்தாள் மதுமதி!



சிங்காரி மதுமதியின் செயலில் கொதித்து போனவளாய் குமாருடன் சேர்ந்து கொண்டு விபரீதமான திட்டமொன்றையும் உருவாக்க ஆரம்பித்தாள்.



# 28



மதுமதி கண்களை எவ்வளவு நேரம் அப்படி இறுக மூடியிருந்தாள்... என அவளுக்கே தெரியாது. உடம்பின் நடுக்கத்தை அடிக்கடி உதடுகளை இறுகடித்து நிறுத்த முயற்சித்த போதுதான் உணர்வே அவளுள் எட்டிப் பார்த்தது.

மெல்ல...தான் எங்கு எப்படி இருக்கிறோம்... என்று சுதாரித்தபோது... விரைவாக செல்லும் கார் ஒன்றில் பயணித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். ஐயோ! மறுபடியும் குமாரின் அடியாட்களிடம் மாட்டிக் கொண்டோமா...? என அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தபோது தன்னை இதமான கரங்கள் ஒன்று ஒருபுறமாய்அணைத்துப் பிடித்திருப்பதையும் மெத்தென பரந்த நெஞ்சொன்றில் தான் இவ்வளவு நேரம் துயில் கொண்டிருப்பதையும் உணர்ந்தவள் ஆவலாய் நிமிர்ந்தாள்.

பார்த்தாள்..... மகேந்திரன்!

அவளை ஒரு கையினால் அணைத்து நெஞ்சில் சாய்த்துக் கொண்டு மறு கையினால் டிரைவில் செய்தபடி

அவள் நிமிர்ந்து பார்த்ததும் அவளது நெற்றியில் மென்மையாய் தன் இதழ்களைப் பதித்து சிரித்தான்.

நீங்கள்.... நீங்கள்...எப்படி? தடுமாறிக் கேட்டவளைப் பார்த்து கொண்டிருந்த புன்னகையை பெரிதாக்கினான்.

எத்தனை சினிமாப் படங்கள் பாத்திருப்பாய்? உன்னைப் போன்ற கதாநாயகி ஆபத்தில் சிக்கிக் கொண்டால்... ஜேம்ஸ் பாண்ட் போல் கதாநாயகன் தோன்றி காப்பாற்றுவது வாடிக்கைதானே? சொல்லியபடி அடக்க முடியாத சிரிப்பொன்றை திரும்பவும் சிரிக்க... அவள் பேந்தப் பேந்த விழித்தவள் மெல்ல நினைவு படுத்திப் பார்த்தாள்.

ஒவ்வொன்றாய் ஞாபகம் வந்தது. சிங்காரியும் குமாரும் கூட்டாய் சேர்ந்து கொண்டு அவளைத் துன்புறுத்த முடிவு செய்தது... சிங்காரி குமாரிடம் தன் தங்கை என்றும் பாராமல் இரக்கமில்லாமல்...உங்கள்

ஆசையை தீர்த்துவிட்டு உங்கள் ஆட்கள் மூலம் அவளை கொன்று கூவத்தில் வீசுங்கள் எனச் சொல்லிவிட்டு குமாரின் கெஸ்ட் ஹவுஸில் விட்டு வெளியேறியது... குமார் வெறியோடு அவளை நெருங்க முயற்சித்தது... என ஒவ்வொன்றாய் ஞாபகம் வந்தது.

பின் என்ன நடந்தது? யார் காப்பாற்றினார்கள்? என அவள் திகைப்பாய் குழம்ப அதைப் புரிந்து கொண்டவனாய் மகேந்திரன் விரைவாய் சென்றிருந்த காரின் வேகத்தைக் குறைத்து சாலையின் ஓரமாக நிறுத்தவும் செய்தான்.

அவளை முழுவதுமாய் வாரியெடுத்துதன்னோடு அணைத்துக் கொண்டவன், இப்போது எல்லாவற்றையும் சொல்லட்டுமா?என்றான்.

சொல்லுங்கள்.... என்றாள்அவள்.

உன்னைச் சிங்காரியும் குமாரும் தன் ஆட்களோடு அந்த ரகசிய கெஸ்ட் ஹவுஸுக்கு கடத்திச் சென்றிருப்பதை... குமாரின் பங்களா வாட்ச்மேன் மூலமாக உணர்ந்தேன்..

வாட்ச்மேனா?

ஆம்.... உன்னைத் தேடி... உன்னிடம் இருந்து எந்த தகவலும் வரவில்லையே என்ற பயத்தில் நீ தங்கியிருக்கும் சிங்காரியின் பங்களாவிற்கே வந்தேன். அங்குள்ள வாட்ச்மேன் வயதான முதியவர்... நல்லவர்.. அவரிடம் விஷயத்தைச் சொல்லி விசாரித்தபோ.... எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். நீ பருந்திடம் சிக்கிய கோழிக் குஞ்சாய் அவர்களிடம்மாட்டியிருப்பதை... உன்னைக் கொல்ல வேண்டும் என்ற கொடிய எண்ணத்துடன்அவர்கள் கடத்திச் சென்றிருப்பதை தெரிவித்ததும் அப்படியே பதறிப் பாய்ந்து வந்து விட்டேன். கூடவே விஷயத்தை போலீசுக்கும் தகவலாய் கொடுக்க... அவர்களும் உதவிக்காக வந்து விட்டார்கள். பின் என்ன....? சரியான சமயத்தில் உள்ளே நுழைந்தேன். குமாரை இரண்டு தட்டு தட்டி உன்னை மீட்டேன். அடியாட்களை போலீஸ் கவனித்துக் கொள்ள... என் வேலை ரொம்பவும் சுலுவாயிற்று!

நம்ப முடியாத வியப்பில் முகம் மலர்ந்தாள்.

அவர்கள்... குமார்... சிங்காரி... என்ன ஆனார்கள்? என்றாள் தெரிந்து கொள்ளும் ஆவலோடு.

அவர்கள் கைது செய்யப்பட்டு... இந்நேரம் ஜெயிலில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பார்கள்... என்றபோது அவள் திடுக்கிடத்தான் செய்தாள்.



என்ன ஜெயிலில் இருக்கிறார்களா? எதற்காக... என்னைக் கடத்தியதற்காகவா?

பதறியவளை மென்மையாய் அணைத்து சாந்தப் படுத்தியவன், அதற்காக மட்டுமில்லை. அந்தபேரிங்கு விஷயத்தில் எனது பேரிங்குகள் போல் போலிகளை தயாரத்து சந்தைப் படுத்திய குற்றத்திற்காக இருவர் மேலும் வழக்குப் பதிவுசெய்யப்பட்டு அதற்காகவே சிறைத்தண்டனை! என்றான்.

எப்படி இது? என்றாள் அவள் முழுவதும் புரியாத திகைப்போடு.

சொல்கிறேன் கண்மணி. அதாவது உன்னை அந்த ரகசியங்களை எடுத்துத் தரச் சொல்லி வற்புறுத்திய நான் மறுபுறம் சும்மா இருக்கவில்லை. குமார் சில சின்னகம்பெனிகள் மூலம்எனது தயாரிப்பு போன்ற போலி பேரிங்குகள் தயாரித்து வருவதற்கான ஆதாரங்களை சாட்சிகளை தேடி உருவாக்கினேன். கையுங் களவுமாய் பிடிப்பது போல் அப்படி எல்லாவற்றையும் உருவாக்கி போலீசிடம் புகாராய் நான் கொடுத்த சமயத்தில்தான் நீ அவர்களிடம் வசமாய் சிக்கிக் கொண்டாள். ஆனால் நான் கொடுத்த புகாரினால் குமார், சிங்காரி மீது வழக்குப் பதிவு செய்த போலீசார் அவர்களைக் கைது செய்ய முயற்சிக்க... நான் அவர்களை கெஸ்ட் ஹவுசிற்கு வரும்படி தகவல் அனுப்பு... எவ்வித பிரச்சனையுமில்லாமல் உன்னை சுலுவாய் மீட்க முடிந்தது. சுபமாக எல்லாமும் முடிந்தது.

சொல்லியபடி மறுபடியும் அவன் இறுக்கி நெற்றியில் முத்தமிட்டபோது, குற்ற உணர்ச்சியில் தவிக்கத்தான் செய்தாள் அவள்.

குமாரும் சிங்காரியும் போலி பேரிங்குகளை சந்தைப்படுத்தியதால் கம்பி எண்ணுகிறார்கள். ஆனால், அதில் முக்கியப் பங்கு வகித்தது அவள்தானே! அவள்தானே அந்த ரகசியங்களை திருடிக் கொடுத்திருக்கிறாள். அப்படிப் பார்த்தாள் அவள் தானே எலலோரையும் விட பெரிய குற்றவாளி?

அதே தவிப்பில் நிமிர்ந்தவள், நானும் குற்றவாளி தானே தண்டனைக்குரியவள்தானே...? என்றாள் மருகிய குரலில்.

ஆமாம்.... ஆமாம்... என அதற்கு பலமாய் தலையசைத்த மகேந்திரன், நீயும் குற்றவாளிதான். ஆனால் தண்டனை பெற்ற குற்றவாளி. உனதுகுற்றத்திற்கான தண்டனையைத்தான் வெகுவாக அனுபவித்து விட்டாயே? அது போதாது. இன்னமும் என்னை தண்டனை கொடுக்க வைத்து என்னை பெரிய கொடுமைக்காரனாய் ஆக்கிவிடாதே கண்மணி... நகைப்புடன் சொல்லி போலியாய் வியப்பும் காட்டினான் அவன்.

அப்படியானால்... அப்படியானால்.... நீங்கள் நீங்கள் என்னை மன்னித்து விட்டீர்களா? குரல் தடுமாற தவிப்புடன் கேட்டவளை அப்படியே இறுக்கிக் கொண்டு பார்த்தான்.

இந்த அணைப்பு ஒன்றே சொல்லுமே... நான் உன்னை மனதார மன்னித்து விட்டதை... உன்னை மனதார விரும்ப ஆரம்பித்து விட்டதை...

அவன் சொன்ன பதிலால் தூக்கி வாரிப் போட்டவளாய்த்தான் நிமிர்ந்து பார்த்தாள்.

என்ன... என்னை... என்னை... மனதார விரும்ப ஆரம்பித்து விட்டீர்களா..? நிஜமாகவா?

வாய் பிளக்கும் அதிசயமாய் வியந்து கேட்டவளை அவனும் அதிசயமாகத்தான் பார்த்துக் சிரித்தான். உன்னால் நம்ப முடியவில்லை. அப்படித்தானே? என மறுபடியும் சிரித்தவன், கண்மணி, இந்த பரபரப்பில் ஆரம்பத்தில் நடந்த ஒரு விஷயத்தை அப்படியே மறந்து விட்டாயே...? கொஞ்சம் நினைவு படுத்திப்பார். உன்னைப் பார்த்த முதல் சந்திப்பிலே நீ காதலிப்பதுபோல் நடித்தாலும்... நான் தொபுக்கடீர் என காதல் கடலில் உடனே விழுந்து உன்னை நிஜமாகவே காதலித்தவன்தானே?

ஆனால்... ஆனால்.. நான் நடித்தது தெரிந்ததும் நீங்கள்... நீங்கள்தான் மாறி விட்டீர்களே?என்றாள் அவளும் நடந்ததை ஞாபகப்படுதட்திக் கொண்டு.

மாறி விட்டேனா...?யார்அப்படிச் சொன்னது?என்றான் மகேந்திரன். புருவம் உயர பின் அவனே தொடர்ந்து. நீதான் அப்படி நினைத்துக் கொண்டாய். நீ பேரிங்கு ரகசியங்களை திருடிச் சென்றது எனக்கு வலித்தாலும் அதை விட நீ காதலிப்பது போல் நடித்த விஷயம்தான் வேதனையாய் என் நெஞ்சைப் பிளப்பது போல் வலித்தது. நீ என்னை காதலிக்கவில்லை என்கிற விஷயம்தான் நெருஞ்சி முள்ளாய் மனதை உறுத்தியது.அது தெரியுமா உனக்கு?

அவளது படபடத்த மை விழிகளை ஊடுருவியவாறு அவன் சொன்னபோது நிஜமாக அவன் சொல்கிறான் என்பதை உணர்ந்து தவிக்கத்தான்செய்தாள் அவள்.

மேலும்.... அந்த தண்டனையை உனக்கு கொடுத்தது எதனால் தெரியுமா? உண்மையாகவே உனக்கு என் மேல் ஒரு பற்றுதலை, ஒரு காதலை உருவாக்கத்தான் அப்படியொரு தண்டனையை கொடுத்தேன். நீ மட்டும் அப்போதே எனக்கு உங்கள் மீது ஒரு காதல்கொஞ்சமாவது இருக்கிறது என்று சொல்லி இருந்தால்... அப்படியே உன்னை இறுக கட்டியணைத்திருப்பேன்தெரியுமா?



அவன் மேற்கொண்டு சொல்ல முடியாதபடி பலமாய் தலையசைத்து மறுத்தவள், நான் நம்ப மாட்டேன். நம்ப மாட்டேன்...என்றாள் பிடிவாதக் குரலில்.

நம்ப மாட்டாயா...? எதனால் இந்த நம்ப முடியாத சந்தேகம் கண்மணி? என்றான் அவனும் குழைவுக் குரலில்.

அதற்குள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா? எரிமலையாய் நீங்கள் கொதித்து நின்றது.கோபம் துடிதுடிக்க என்னை செவிட்டில் அறைந்தது வாய்க்கு வந்தபடி என்னைத் திட்டி... ஆத்திரப்பட்டது.. எல்லாம் இன்றும் உடம்பே நடுங்கும்படி ஞாபகத்தில் இருக்கிறது...

சிவந்த முகத்துடன் துடிக்கக் கேட்டவளை, அப்படியே இறுக அணைத்து விடுவித்தவன்,எல்லாம் உண்மைதான்! அப்படி நான் உடம்பு அதிர ஆத்திரப்பட்டது. நிஜம்தான்! ஆனால் நீ நினைப்பதுபோல் அந்த கோபம் ஆத்திரம் பேரிங்குகளின் செய்முறைகள் திருடு போனதால் ஏற்பட்டதுஅல்ல. நீ என்னை உண்மையில் காதலிக்க வில்லை. அப்படி நடிக்கத்தான் செய்தாய் என்பதை அறிந்ததினால் வந்த கோபம்... ஆக்ரோஷம் அது! நீ மட்டும் அப்போது கொஞ்சமாவது காதல் இருப்பதுபோல் காட்டியிருந்தால்... நிஜமாகவே உன்னை அப்படியே கட்டியணைத்திருப்பேன். நான் சொல்வது நிஜம்! என்றான் அவன் உறுதியான அடிக் குரலில்.

உண்மையாகவா? என்றாள் அவள் இன்னும் நம்ப முடியாத ஆச்சரியம் கொண்டவளாய். அப்படியே எதையோ நினைத்தவள், பின் எதற்காக அப்படி ஒரு தண்டனை கொடுத்தீர்களாம்? என்றாள்.

வேறு எதற்கு?உன் மனதிலும் உண்மையான காதலை பூக்கச் செய்து... மலர வைக்க வேண்டுமே?அதற்கு. கால அவகாசம் தேவைப்படுமே?அதற்காகத்தான்அப்படி குமாரின் ரகசியங்களை எடுத்து வந்து கொடு... என உன்னிடம் ஒரு நாடகமும் போட்டேன். உண்மையில்...அந்த குமாரின் பேரிங்கு செய்முறை ரகசியங்கள் எனக்கு மட்டுமல்ல... யாருக்குமே பயன்படாது... தெரியுமா?

என்ன சொல்கிறீர்கள்? என்றாள் அவள் பெருவியப்பு மேலிட...

அவன் விளக்கினான்.

அதற்கு... காரணத்தை கொஞ்சம் யோசித்தால் நீயே கூட கண்டுபிடித்திருக்கலாம்? ஏனென்றால் குமாரின் தயாரிப்பு என்னைப் போல் முதல் தரமான பேரிங்கு இல்லை. மூன்றாம் தரமான தயாரிப்பு அதனால் அதன் விற்பனையும் குமார்தான். அதனாலே சந்தையில் அந்த தயாரிப்பிற்கு

எவ்வித போட்டியும் கிடையாது. அந்தச் சூழ்நிலையில் போலியான பேரிங்குகளை தயாரித்தால் கூட அவைகளை விற்பனை செய்ய முடியாது. இப்போது புரிகிறதா? என்றான்.

அவளுக்கு ஓரளவு புரிந்து விட்டது. ஆனாலும் குமிழ் குமிழாய் சந்தேகங்கள்.

பின் எதற்கு என்னை ரகசியங்களை எடுத்து வரும்படி துடிக்கத் துடிக்க அவசரப்படுத்தினீர்கள்?

அவள் கேட்டதற்கு ரசித்து சிரித்தவன், என்ன சொன்னாய்...? துடிக்கத் துடிக்கவா? ம்ம்...அதுகூட சரியான வார்த்தைதான்! ஏன் தெரியுமா? உன்னை அப்படித் துடிக்கத் துடிக்க அனுப்பியது உன் இதயத் துடிப்பில் காதல் பூக்களை மலர வைப்பதற்காகத்தான்.

அவன் சிரித்தபடி சொன்னாலும் அவளுக்க சந்தேகம் தீர்ந்தபாடில்லை. ஆனால் எப்போதும் சிடுசிடுவெனத் தானே இருந்தீர்கள். அந்தக் கோபத்தை ஒவ்வொருமுறை உங்களைச் சந்திக்கும்போது உணர்ந்தேனே? என்றாள் தெளிவு பெறும் நோக்கத்தோடு.

அந்தச் சிடுசிடுப்பின் இடையே கூட காதல் இருந்ததே... அதைக் கவனித்தாயா? என்றான் அவன் குறும்புச் சிரிப்புடன்.

இது.... என்ன புதுக் கதை?என்றாள் அவள் விழிகள் விரியும் ஆச்சரியத்துடன்.

கதையல்ல உண்மை... அந்த சிடு சிடு கோபத்தின் இடையே கூட உன் அழகை... மைவிழிஅழகு அபாரம்... எப்படி எப்படியெல்லாம் வர்ணித்து ரசித்தேன்.. அதை மறந்து விட்டாயா?

அவள் அதற்கும் தலையசைத்து, ஆமாம். ஞாபகம் வருகிறது. நல்ல பாம்பு கவர்ச்சி என்று கூட சொன்னீர்களே... அதுதானே? என்றவள் விடாது, எல்லாமே புகழ்ச்சிதான். ஆனால் புகழ்வதுபோல் பழிக்கும் வஞ்சப் புகழ்ச்சி! என்றாள்.

அவனோ அதற்கும்புது விளக்கம் கொடுத்தான். கண்மணி...அது அப்படி இல்லை. பழிப்பது போல் புகழும் வேறு விதமான வஞ்சப் புகழ்ச்சி... என்றபோது அவன் சமாளிப்பதை உணர்ந்து சிரிக்கத்தான் செய்தாள்.

மகேந்திரனும் அதற்கு முழு விளக்கம் கொடுப்பது போல் பேசினான். மது. உண்மையைச் சொல்லப் போனா, உன்னை அப்படி சந்திக்கும் நேரங்களில் எல்லாம் எப்படி நடந்து கொள்வது சிடுசிடுப்பதா.... கனிவபாய் நடந்து கொள்வதா என தடுமாறித்தான் போனேன். மேலும் உன்னைஅப்படியொரு குற்ற உணர்ச்சியிலேயே வைத்தால்தான் எப்போதும்



நான் உன் நினைவில் இருக்க முடியும் என்ற உணர்வில் சிடுசிடுத்து நடந்தேன். ஆனால் உன் மீது அப்படி ஒரு சில கணங்களில் வரம்பு மீறி நான் கோபப்பட்டதும் உண்டு. அதற்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். என்னை மன்னித்து விடுவாயா மது?

கெஞ்சல் குரலில் நிஜமான வருத்தத்துடன் அவன் பேசியபோது அவள் உருகிடத்தான் போனாள்.

சே! சே! அதெல்லாம் தேவையில்லை. என் தவறுக்கு உங்கள கோபம் கண்டிப்பு எல்லாம் தண்டனை போல் ஆகி... நீங்கள் முன்பு சொன்னீர்களே... தப்பு ப்ளஸ் தப்பு... சரியென அந்தக் கணக்கு சரியாக ஆயிற்று.... என்றாள்.

அதையெல்லாம்இன்னும் ஞாபகம் வைத்திருக்கிறாயா? என வியப்புடன் கேட்டவளை மீண்டும் அதிசயமாய்ப் பார்த்தாள்.

என்ன அப்படிப் பார்க்கிறாய் கண்மணி? என்றான் கொஞ்சலாய்

நீங்கள் என்னை விரும்புவதாய், காதலிப்பதாய் சொல்லிவிட்டீர்கள்.ஆனால் நான்தான்... எங்கு சொன்னேன்? இன்னும் சொல்லவே இல்லையே...

அவள் ஆச்சரியம் காட்டி கேட்க, அசராமல் சிரித்தான் அவன்.கூடவே,அழுத்தந் திருத்தமாய், நீ...முட்டாள். முட்டாள்தான்! என்றான்.

அவளும் பழைய ஞாபகம் வந்தவளாய்,அட... மறுபடி ஆரம்பித்து விட்டீர்களா...இந்த மட்டம் தட்டி ஆனந்தப்படும்வேலையை...என்றாள் சினமாய் வெகுண்டு

அதற்கு மென்மையாய் அவளைத் தழுவியவன், கோபித்துக் கொள்ளாதே கண்மணி. உண்மையைத்தானே சொன்னேன்? பார்... உன் கைகளை...! என சுட்டிக் காட்டினான்.

அவன் தழுவியிருப்பது போல் அவளது கரங்களும் வளைத்து அவனை இறுகத் தழுவியிருப்பதை கண்டாள் அவள். முகம் சிவந்துஅவசரமாய் விலக்கவும்போனாள். அதை விடாமல் இறுக்கி சிறைப்பிடித்தான்அவன்

இப்படிஆசையாய் அணைத்திருப்பவளிடம் போய் உனக்கு என் மேல் காதல் இருக்கிறதா? என கேட்பதும்தெரிந்து கொள்ள நினைப்பதும் முட்டாள்தனம்தானே. நீயே சொல் உரிமையாய் அவன் தோளை உலுக்கியபோது காது மடல்கள் அதிர தலையசைத்தாள் அவள்.

கூடவே நானும் உங்களை மனமார விரும்ப ஆரம்பித்தது எப்போது தெரியுமா?என்றாள்.

எப்போது? என்றான் அவன் கண்கள் மின்னும் ஆர்வத்துடன்

நீங்கள் ரகசியங்களை நான் திருடிய கோபத்தில் வெகுண்டு சொன்னீர்களே... நானும்காணாததை கண்டது போல் உன் அழகை ரசித்திருக்கிறேன்... உருக உருக உன்னைக் காதலித்திருக்கிறேன்.. என்று! அந்தக் கணக்கில் அந்த நிமிடத்தில் இவ்வளவு தூரம் நீங்கள் என்னை விரும்பியிருப்பதை உணர்ந்து எனக்கும் காதல் வந்துவிட்டது... .

குங்குமமா;ய முகம் சிவக்கும் வெட்கத்தோடு தயங்கித் தயங்கி அவள் சொல்வதை ஆவலாய் ரசித்துக் கேட்டவன், அட கோபத்தில் நான் திட்டியதுதான் உன் மனதில் காதல் புக்களை மலரச் செய்ததா? ஆச்சரியமாய்இருக்கிறதே! என்றான் வியப்பு பொங்க.

அவளும் முகம் சிவக்கும் வெட்கத்தோடு தயங்கித் தயங்கி அவள் சொல்வதை ஆவலாய் ரசித்துக் கேட்டவன்,அட கோபத்தில் நான் திட்டியதுதான் உன் மனதில் காதல் பூக்களை மலரச்செய்ததா?ஆச்சரியமாய் இருக்கிறதே! என்றான் வியப்பு பொங்க.

அவளும் முத்துப் பற்கள் பளிரிட அழகாய் சிரித்தவள், ஆச்சரியம் அருமன்று. உண்மையான காதலை இருவரும்சரியான சமயத்தில் உணர்ந்தது மற்றொன்று சிங்காரியின் திட்டத்தை முறியடித்தது.... என்றாள்.

மகேந்திரன் ஆமோதிப்பவனாய் தலையாட்டினான்.

ஆமாம்... ஆமாம்... அதிலும் உன் அக்கா அந்த சிங்காரி, போல கொடூரமான பெண்ணை பார்ப்பதே அதிசயம்தான்! இப்படி ஒருத்தி இருப்பாளா... சொந்த உடன்பிறப்பை பொறாமையாய் கொல்லுமளவுக்கு போய்விட்டாளே!

அவளை விடுங்கள்! அவளைப் பற்றி பேசுவதே பாவம்! அவள் பிறவிகள் எப்படியாவது போகட்டும்! என வெறுப்பாய் சலித்தவள் சட்டென ஞாபகம்வந்தவளாய், ஆமாம்உங்கள் தொழிலில் ஏற்பட்ட சரிவை சரி செய்து விட்டீர்களா? ஆபத்துஒன்றும் இல்லையே!

மென்மையாய் சிரித்தவன், அதெல்லாம் ஒன்றும் பெரிய விஷயமில்லை கண்மணி. போலி பேரிங்குகள் தயாரிப்பவர்களைக் கண்டுபிடித்து போலீசிடம் புகார் செய்தாலே போதும். தொழிலுக்கு வரும் ஆபத்தையும் தவிர்த்து விடலாம்... என்றான் வெகு சாதாரணமாய்.

மதுமதி ஆச்சரியம் பொங்க மைவிழிக் கண்களை அகலவிரித்தவள்,அப்படியானால் என்னிடம் பெரும் ஆபத்து... தொழில்



சரிந்து விடும். தொழிலை நம்பியிருக்கும் தொழிலாளர்களின் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துவிடும் என்றெல்லாம் சொல்லி பயம் காட்டியது... எதற்கு? எதற்காக? என்றாள்.

அவன் அசட்டுச் சிரிப்பொன்று சிரித்து கரங்களை கோர்த்திருந்த அவளது பிஞ்சு விரல்களை இறுகப் பிடித்தவன், நான் அப்படி பயம்காட்டியதில் ஓரளவுதான் உண்மை. மற்றதெல்லாம் சினிமா ரீல்கள்தான். அதுவும் அந்த மூன்றெழுத்தை உன்னிடம் இருந்து வரவழைப்பதற்காகத்தான்...! என்றான் பீடிகையாய்.

அதென்ன அந்த மூன்றெழுத்து?என்றாள் அவள் புரிந்தும் புரியாதது போல்.

மகேந்திரனோ மேலும் பூக்குவியலாய் அவளை இறுக்கியவன், இதற்கெல்லாம் வார்த்தைகளால் இனி பதில் சொல்ல முடியாது. இதழ்களால்தான் பதில் சொல்ல முடியும்... என அவளது செவ்விதழ்களை நோக்கி முன்னேறினான்.

அதை இனிமையாய் உணர்ந்தவள் தன் விழிகளை மேலும் மலர்த்தி ஆசை ஆசையாய் அவனை இறுக்கிக் கொண்டாள்

◊◊◊◊◊◊

**அக்ஷயா ஸ்பெஷல்**

மலர் : 1 இதழ் : 1

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35

போன்: 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor M.S. Murugan,

Published at

New No. 56/2, Sri Rampet Street, C I T Nagar,

Nandanam, Chennai - 600 035